பக்கங்கள்: 17

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 28 செவ்வாய்க்கிழமை 14.11.2023 கதிர் 368

# சம்பிரதாயத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை வரவு செலவுத் திட்டம் பற்றி சிறீதரன் சீற்றம்

சம்பிரதாயத்துக்காகச் சமர்ப்பிக்கப் பட்ட அறிக்கை இந்த 2024 வரவு, செலவுத் திட்டம் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்

நாடாளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு, செலவுத்திட்ட அறிக்கை தொடர்பில் நாடாளுமன்ற வளாகத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2024ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டம் என்ற பெயரில் அறிக்கையொன்று வாசிக்கப்பட்டுள்ளது. இதுபோன்று கடந்த காலத்தில் பல்வேறு விதமான வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்தன. ஆனால் எவையும் நிறைவேற்றப்படவில்லை.

இந்த நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்துவதாக இருந்தால் உள்நாட்டு வரிகளைஅதிகரிப்பதும்,சம்பளங்களை அதிகரிப்பதும் மட்டும் தீர்வாக அமையாது. அவை உடனடியான ☞ 2

## இது ரகசியம் அல்ல!

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை ஜனாதிபதியும் நிதிஅமைச்சருமானரணில்விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். பாரம்பரியமுறைப்படி 'சூட்கேஸில்' வைத்து அவர் தனது உரையை நாடாளுமன்றத்திற்கு எடுத்து வந்தார்.

அதில் பெரிதாகச் சொல்லிக் கொள்ளும்படி எதுவும் இருக்கவில்லை. ஜனாதிபதி கடந்த காலங்களில் பொதுவெளிகளில் எவற்றைக்கூறிவந்தாரோ அவற்றின் தொகுப்பாகத்தான் அந்த உரை அமைந்தது.

அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்புக்கூட முன்கூட்டியே எதிர்வுகூ-றப்பட்டபடி 10 ஆயிரம் ரூபாவாக மட்டுமே அமைந்தது. அதனால் அதிலும்கூட பெரியளவில் சுவாரஸியம் இருக்கவில்லை. செஸ் மற்றும் துறைமுக, விமான ☞ 2

## பட்ஜெட் சாராம்சம்

1. இந்த கடினமான பாதையில் நாம் தொடர்ந்து பயணித்தால், சிறந்த பொருளாதாரத்தைவிரைவில்உருவாக்க முடியும் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, கடந்த வருடத்தை திரும்பிப் பார்க்கும் போது, நாடுசரியானபாதையில்செல்வது 100% உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

2 பணவீக்க விகிதத்தை ஒற்றை இலக்கமாக குறைக்க முடிந்ததால், பணவீக்கத்தின் தாக்கத்தில் இருந்து நாட்டை மீட்க முடிந்துள்ளதாக ☞ 2

# கடன் மற்றும் அரச சொத்து விற்பனை அடிப்படையிலே வரவு செலவுத் திட்டம்

## சாடுகிறது ஜேவிபி

2024ஆம்ஆண்டுக்கானவரவு-செலவுத்திட்ட முன்மொழிவானது கடனைப் பெறுதல் மற்றும் அரச சொத்துக்களை விற்பனை செய்தல் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டது என தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட முன்மொழிவு நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நேற்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

அதன்பின்னர்நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமாரதிஸாநாயக்க இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட முன்மொழிவு மூலம் நாட்டை மேலும் நெருக்கடிக்குள் தள்ளுவதை ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஆரம்பத்தில் முன்மொழியப்பட்ட தொகையைவிட மேலும் 3400 பில்லியன் ரூபாவினால் கடன் பெற்றுக்கொள்ளும் வரம்பை அரசு அதிகரித்துள்ளதாக அனுரகுமார சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் நிலவும் நெருக்கடிக்கு புதிய தீர்வுகளை வழங்குவதற்கு பதிலாக, ஜனாதிபதி மற்றும் அவரது ஆட்சி தமது பழையமற்றும்தோல்வியுற்ற நடவடிக்கைகளை மீண்டும் முன்மொழிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## வடக்கு கிழக்குக்கான திட்டங்கள்

ஜனாதிபதியால் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தில் வடக்குகிழக்குமாகாணங்களுக்காக மிகக் குறைந்தளவிலான திட்டங்களுக்கே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1. வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் வீடற்ற குடும்பங்களின் மீள்குடியேற்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய 2000 மில்லியன்ஒதுக்கப்படும். அத்துடன், வீடமைப்புத்திட்டத்தைதுரிதப்படுத்தவும்,வீடுகள்இன்றிதவிக்கும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கவும் 500 மில்லியன் ரூபா மேலதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. வடக்கு கிழக்கில் மோதலினால் பாதிக்கப்பட்டவர் களுக்கும், காணாமல்போனோரின் உறவினருக்கும்இழப்பீட்டுத் தொகையை துரிதமாக வழங்க பன்முக நிதி ஒதுக்கீட்டுச் ☞ 2

# அரச பணியாளர்களுக்கு 10 ஆயிரம் சம்பள அதிகரிப்பு

அடுத்தஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் அரச பணியாளர்களுக்கான சம்பளம் 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் ரூ. 2024ஆம்ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது அரசஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவு கொடுப்பனவில் 10.000 ☞ 8

# டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு ரூபாய் 3 பில்லியன் ஒதுக்கீடு

அடுத்தஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 2030 ஆம் ஆண்டிற்குள் டிஜிட்டல் பொருளாதாரத்தை எளிதாக்க ரூ.3 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்காக, பொதுத்துறையை டிஜிட்டல் மயமாக்குவதற்குத் தேவையான தலைமையையும், வழிகாட்டுதலையும் வழங்க முழு அதிகாரம் கொண்ட டிஜிட்டல் ஆணையத்தை நிறுவ அரசு திட்டமிட்டுள்ளது.

பொதுத்துறை, நிபுணத்துவ நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகத்துடன் ஒருங்கிணைந்து தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்காக தொழில்நுட்ப கண்டுபிடிப்பு கவுன்சில் ஒன்றை நிறுவவும் ஜனாதிபதிவிக்கிரமசிங்க முன்மொழிந்தார்.

டிஜிட்டல் தொழில்நுட்பம்மற்றும்செயற்கை நுண்ணறிவின் சமீபத்திய போக்குகளின் அடிப்படையில்பொருளாதாரமற்றும்சமூகமாற்றத்தை உறுதி செய்வதற்காகசெயற்கைநுண்ணறிவுக்கான தேசிய மையம் ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

## திருகோணமலையில் பல பகுதிகளில் வெள்ளம்



திருகோண மலையில்கடந்தசிலநாட்களாக பெய்துவரும் காற்றுடன்கூடியமழைகாரணமாக பல தாழ்நிலப் பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அந்த வகையில் ஞாயிற்றுக்கிழமைபெய்த காற்றுடன்கூடிய ☞ 2

# ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் ஏமாற்றும் கவர்ச்சியான கருத்து

## வரவு செலவுத் திட்டத்தை நிராகரித்து சஜித் கருத்து

220 இலட்சம் பொதுமக்களையும் ஏமாற்றும் வகையில் கவச்சிகரமானகருத்துக்களுடன் முன்வைக்கப்பட்டுள்ள பயனற்ற வரவு,செலவுத்திட்டமே இதுவாகுமென்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசதெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்ட உரையின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்டு வரவு செலவுத் திட்ட உரையை ஆரம்பித்த ஜனாதிபதி, பௌத்தத்தை அவமதித்தே அதனை நிறைவுசெய்தார், புத்தபகவான்கூட ☞ 8

# கடந்த வருடம் சொன்னவற்றை திரும்பவும் சொல்கிறார் ரணில்

## வரவு செலவுத் திட்டம் பற்றி நாமல் கருத்து

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சராக நேற்று பிற்பகல் தனது வரவு செலவுத்திட்டஉரையை சமர்ப்பித்த பின்னர் நாடாளுமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்குகருத்துதெரிவிக்கும் போதே நாமல் ராஜபக்ஷமேற்கண்டவாறு தெரிவித்தார்.

' ஜனாதிபதி கூறிய பலவிடயங்களைகடந்த வரவு செலவு திட்டத்திலும் அவர் முன்வைத்துள்ளார். அவை நிறைவேற்றப்படவில்லை எனத் தெரிகிறது. அதனால் மீண்டும் முன்வைத்துள்ளார்.

ஒரே விடயம் இரண்டு முறை கூறப்படுகிறதெனின், அந்த விடயம் அடிமட்ட அளவில்நடைமுறையில் நிறைவேற்றப்பட்டதா? இல்லையா? என்ற ☞ 2

# பல்கலைக்கழகங்களை நிறுவ மாகாண சபைகளுக்கு அனுமதி

நேற்றைய வரவு செலவுத்திட்டத்தின்ஊடாக மாகாண சபைகள் புதிய பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

''13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளும் பல்கலைக்கழங்களை ஆரம்பிப்பதற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் மாகாண சபைகளின் மூலமும் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்படும் என நான் முன்மொழிகின்றேன்'' என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

இது தவிர, ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நிலைய வரிகளை நீக்குவதற்கான முன்மொழிவு தவிர வேறு வரி நீக்கம்பற்றிய அறிவிப்புக்கள் இருக்கவில்லை.

அதேபோன்று ஏற்கனவே வரி அறிவிப்புக்கள் செய்யப்பட்டுவிட்டதால் இந்த வரவு செலவுத் திட்டத்தில் புதிய வரி அறிவிப்புக்கள் தொடர்பிலும் எதுவும்முன்மொழியப்படவில்லை.

வழக்கமாக நிதி அமைச்சரின் வரவு செலவுத் திட்ட உரையின் பின்னர் நாடாளுமன்ற 'கன்டீனில்' நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் டீ பார்ட்டி வழங்கப்படும். அந்தத் தருணத்தில் ஜனாதிபதி அல்லது நிதி அமைச்சர் அனைத்துத் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் சந்தித்துப் பேசுவதும் ஒரு பாரம்பரிய நிகழ்வாக அமையும். அது அடுத்த நாள் ஊடகங்களில் படங்களாக வெளியாகும்.

இந்தச் சந்தர்ப்பங்களில்தான் அனேகமான எமது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் கைகொடுத்துச் சிரிக்கும் படங்கள் வெளியாகி, அவர்களுக்கு எதிரானவர்கள் மெல்லுவதற்கான ''அவல்'' கொடுக்கப்படும்.

ஆனால், இந்த முறை அந்த 'டீ பார்ட்டி' கான்சல். வரவுசெலவுத்திட்ட உரை நண்பகல் 12 மணிக்கு இடம்பெற்றதால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இம்முறை மதிய உணவே வழங்கப்பட்டது. ரணிலின் உரை தாமதமாக முடிந்ததனால் கடும் பசியில் இருந்த உறுப்பினர்கள் சாப்பாடு மீது கவனமாக இருந்ததால் ஜனாதிபதியுடன் அளவளாவுவதில் அதிக அக்கறை காட்டவில்லைப் போலும். அதனால் சர்ச்சைக்குரிய படங்களும் இந்தத் தடவை வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தவில்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சம்பிரதாயத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீஊணர்வுகளாகவே இருக்கப் போகின்றன.

உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து பொருளாதாரத்தினை முன்னெடுத்துச் செல்வதானது, நாட்டின் எதிர்காலத்தினை மேம்படுத்துவதாக இருக்கும். ஆனால் முன்மொழியப்பட்டுள்ள விடயத்தில் அவ்விதமான யோசனைகள் எவையும் தெரிவிக்கப்படவில்லை.

வருடாந்தம், நாட்டின் நிதி அமைச்சரால்முன்வைக்கப்படுகின்ற சம்பிரதாய பூர்வமான அறிக்கை போன்றேதற்போதையஅறிக்கையும் காணப்படுகின்றது.

விசேடமாக, கடந்த காலங்களில் வடக்கு,கிழக்கு மக்களை மையமாக வைத்து பல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால் அவை முறையாக நடைமுறைப் படுத்தப்படவில்லை.

அந்த அடிப்படையில்தற்போதைய அறிக்கையிலும் விடயங்கள் கூறப்பட்டிருந்தாலும் அவை நடைமுறைப்படுத்தப்படுமாஎன்பதில் கேள்விகள் உள்ளன. ஆகவே தற்போதைய அறிக்கையானது கடமைக்காக தற்போதைய வரவு,செலவுத்திட்ட முன்மொழிவு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றார்.

## திருகோணமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மழையின் காரணமாக வெருகல் உப்பூரல் கிராமசேவகர் பிரிவுக்குட்பட்டபகுதியில்ஆறுவீடுகள் பகுதியளவில்சேதமடைந்துள்ளதாக திருகோணமலை மாவட்ட இடர் முகாமைத்துவ பிரதிப்பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸ் தெரிவித்தார்.

மேலதிக சேதங்கள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

திருகோணமலை நகரை அண்மித்த கன்னியா பீலியடி பகுதி உட்பட பல பகுதிகளில் வெள்ள நீர் உட்புகுந்துள்ளததன்காரணமாகபல வீடுகள்வெள்ளத்தில்மூழ்கியுள்ளன. வடிகான் அமைக்கப்படாததன் காரணமாக வெள்ள நீர் வீட்டுக்குள் புகுந்துள்ளதாகவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பலமுறை தெரிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

## கடந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி எங்களுக்கு உள்ளது.

எனவே இந்த வரவுசெலவுத் திட்டமும் அதுபோன்ற பேச்சுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டமாக இருக்குமா என்பது தொடர்பில் காத்திருக்கிறோம்.

எதிர்வரும் காலங்களில் இதை ஆய்வு செய்து, நாடாளுமன்ற விவாதத்தில் எங்களது யோசனைகளை முன்வைப்போம். ஜனாதிபதி ஏற்றுக்கொள்வாரா என்பதைப் பார்ப்போம்" என்றார் அவர்.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தில் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள 1500 மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமாக மேலும் 1000மில்லியன்ரூபாஒதுக்கப்படும்.

3. யாழ்ப்பாணப்பிரதேசத்தின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில், பாலியாறு நீர்த் திட்டத்தின் ஆரம்பப் பணிகள் 2024ஆம்ஆண்டின்முதற்பாதியில் ஆரம்பிக்கப்படும். அதற்காக 250 மில்லியன் ரூபா வழங்கப்படும்.

4. பூநகரிநகரஅபிவிருத்திக்காக 500மில்லியன்ரூபாஒதுக்கப்படும்.

ஆகிய திட்டங்களுக்கு மட்டுமே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## பட்ஜெட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2024 வரவு செலவுத் திட்ட உரையின் போது ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

3.. வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டை மீட்டெடுப்பது மிகவும் கடினமான செயற்பாடு என்று தெரிவித்த ஜனாதிபதி, ஆட்சியைக் கைப்பற்றும் அரசியல் நோக்கத்துடன் மக்களிடையே நிவாரணம் வழங்கும் கனவு மாளிகைகளை நிர்மாணித்தால் நாடு மீண்டும் வங்குரோத்து நிலைக்கே தள்ளப்படலாம் எனவும் தெரிவித்தார்.

4. மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களின் நட்டத்தை ஈடுசெய்ய, அரச வங்கிகளில் தொடர்ச்சியாக கடன்களைப் பெற்று வருவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, இந்த நிலைமையினால் அந்த வங்கிகள் பலவீனமடைந்து வீழ்ச்சியடைவதைத் தடுக்க மக்களின் வரிகளைப் பயன்படுத்த அரசுக்கு நேரிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

5. பெருமளவிலான குறைந்த செலவில் புதுப்பிக்கத்தக்க வலு சக்தியை பிரதான கட்டமைப்புடன் இணைப்பதற்குத் தேவையான அனைத்து சட்ட ரீதியான தடைகளும்நீக்கப்பட்டுள்ளதாகவும், செயல்திறனற்ற மின்சார சபையை வினைத்திறன்மிக்க நிறுவனமாக மறுசீரமைப்பதற்கான ஒழுங்குவிதிகள் தற்போது வகுக்கப்படுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

6. அரச துறையின் மாதாந்த சம்பளத்திற்காக 93 பில்லியன் ரூபா, காப்புறுதி, மருந்துகள், ஓய்வூதியம் உட்பட பொதுநல செலவுகளுக்கு 30 பில்லியன் ரூபா, கடன் வட்டி செலுத்த 220 பில்லியன் ரூபா என 03 பிரதான செலவுகளுக்காக மாத்திரம் அரசாங்கம் ஒவ்வொரு மாதமும் 383 பில்லியன் ரூபாவை செலவிடுவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

7. 2021ஆம் ஆண்டுக்குள் 900 பில்லியன் ரூபாவாக இருந்த வங்கி மிகைப்பற்று, 70 பில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளதாக, 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட உரையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

8. அரச வருமானத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10% இலிருந்து 15% ஆக அதிகரிக்காவிட்டால் நாடு மீண்டும் பொருளாதார வீழ்ச்சியை சந்திக்கும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, ஒரு சில குழுக்களின் எளிய மற்றும் அழகான வாக்குறுதிகளால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது எனவும் தெரிவித்தார்

9. நீண்ட காலமாக இடம்பெற்றுவரும் வரி விலக்குகள் உள்ளிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் பல்வேறு முன்மொழிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், அதன் ஊடாக அரச வருமானம் அதிகரிக்கும் போது அதனை விட அதிகமான வரிச் சலுகைகளை வழங்க முடியும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

10. அரசசெலவினங்களில் 35% அரச ஊழியர்களின் சம்பளத்திற்காக செலவிடப்படுவதாகசுட்டிக்காட்டினார்.

11. நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களின்சுமைமுழுவதுமாக பொதுமக்களையே சார்ந்துள்ளது எனவும், தேசிய சொத்துக்கள் எனக் கூறித் தொடர்ந்தும் மக்கள் மீது அச்சுமையை சுமத்தும் அரசியல் குழுக்கள் நாட்டை பின்னடையச் செய்து வருவதாகவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

12. இந்த நாட்டில் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியல் மற்றும்பொருளாதாரக்கருத்தியல்கள் தோல்வியடைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அரசியல் முறைமையையும், பொருளாதார முறைமையையும் முற்றாக மாற்றியமைத்து, புதிய கோணத்தில் பார்க்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

13. 2021 ஆம் ஆண்டில் இலங்கையின் முதன்மை வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.7% ஆக இருந்த போதிலும், 2023 ஆம் ஆண்டின் முதல் பாதியில் இலங்கையின் முதன்மை வரவு செலவுத் திட்டத்தில் மேலதிகத்தை உருவாக்க முடிந்ததாக, 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதி தெரிவித்தார்.

14. 2022 செப்டெம்பர் மாதத்தில் 70% ஆக உயர்ந்திருந்த பணவீக்கத்தை, கடந்த ஒக்டோபர் மாதத்திற்குள் 1.5% ஆகக் குறைக்க முடிந்ததாகவும்,அன்றுபூஜ்ஜியமாகக் குறைந்திருந்தஅந்நியச்செலாவணிக் கையிருப்பை, 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை உயர்த்துவதற்கு முடிந்தது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

15. அரச ஊழியர்களுக்கு தற்போதுள்ள7,800ரூபாவாழ்க்கைச் செலவுக்கொடுப்பனவு2024ஜனவரி முதல் நடைமுறைக்குவரும் வகையில்மேலும்10,000ரூபாவால் உயர்த்தப்படும்.

16. அரசாங்க ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான மாதாந்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு 2,500 ரூபாவால் அதிகரிக்கப்படுவதோடு, அதன்படி 2024 இல் ஓய்வூதியத்திற்காக 386 பில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

17. தொலைதூரக் கடமையில் இருக்கும்பொலிஸ்அதிகாரிகளுக்கு தகுந்த மாற்றங்களுடன் உணவு மற்றும் தங்குமிடக் கொடுப்பனவை செலுத்துப்படும்.

18. கடந்த காலங்களில் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட அரச ஊழியர்களின் அனர்த்தக் கடன் வசதி, 01-01-2024 முதல் முன்னர் காணப்பட்டவாறே வழங்கப்படும்.

19. கடந்த வருடங்களில் சமூகப்பாதுகாப்புத்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட தொகை 60 பில்லியன் ரூபாவாக இருந்த போதிலும், 2024ஆம்ஆண்டில்அது 183 பில்லியன் ரூபா வரை, மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

20. அஸ்வெசும பலன்களைப் பெறுவதில் தாமதம் ஏற்படும், தகுதியுள்ள பயனாளிகளுக்கு கடந்த காலத்திலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில்கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை.

21. ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோய் உதவித்தொகை 2,500ரூபாவினால்அதிகரிக்கப்படும்.

22. முதியோருக்கான மாதாந்த உதவித்தொகை 3000 ரூபா வரை அதிகரிக்கப்படும்.

23. புதிய குடும்பங்கள் பயனாளிகள் பட்டியலில் தாமதமின்றி இணைத்துக்கொள்ள 06 மாதங்களுக்கு ஒரு முறை, அஸ்வெசுமபயனாளிகளின்பட்டியல் மதிப்பாய்வு செய்யப்படும்.

24. அஸ்வெசும வேலைத்திட்டம், ஊனமுற்றோர்கள், சிறுநீரக நோயாளிகள் மற்றும் முதியோர்களுக்கான கொடுப்பனவுகளுக்காக 2024 இல் ஒதுக்கப்படும் தொகை, 205 பில்லியன் ரூபா வரை அதிகரிக்கப்படும்.

25. கடந்த காலத்தில் நெருக்கடியை எதிர்கொண்ட சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்தும் திட்டத்தைவலுப்படுத்த30பில்லியன் ரூபா சலுகைக் கடன் வசதி

26. பாரம்பரிய சொத்துக்களை இழந்தவிவசாயிகளுக்குஅந்தவயல் நிலங்களின் முழுத் தனியுரிமை வழங்கும்திட்டம்செயல்படுத்தப்படும்.

27. நகர்ப்புறங்களில் வாழும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள வீடுகளில் இருந்து வாடகை வசூலிப்பது முற்றிலும் நிறுத்தப்பட்டு, அந்த வீடுகளின் உரிமையை அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

28. தோட்டங்களில் வாழும் மக்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்கான காணி உரிமைகளைப்பெற்றுக்கொள்வதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையாக ரூபா 4 பில்லியன் ஒதுக்கீடு.

29. தோட்டங்களில் வாழும் மக்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்கான காணி உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையாக ரூபா 4 பில்லியன் ஒதுக்கீடு.

30. பிம் சவிய வேலைத்திட்டத்தை விரைவாக நிறைவு செய்வதற்குதேவையானவசதிகளை வழங்க 600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

31. பன்முகப்படுத்தப்பட்ட பட்ஜெட்திட்டத்தை மீள ஆரம்பிக்கும் வகையில்மாவட்டஒருங்கிணைப்புக் குழுக்களுக்கு 11,250 மில்லியன் ரூபாஒதுக்கப்பட்டுதேசியகொள்முதல் திணைக்களத்தின்மேற்பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.

32. மலையகத்தைச் சேர்ந்த 89 பிரதேச செயலகங்களை உள்ளடக்கியபத்துவருடபல்நோக்கு கிராமிய மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டம் 2024 இல் ஆரம்பிக்கப்படும். அதற்காக 2024 ஆம் ஆண்டில் 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

33. அபிவிருத்தித்திட்டங்களுக்கு அனுமதி பெறுவதற்கு புதிய பொறிமுறையொன்றை அறிமுகம் செய்யவும், புதிய திட்டங்கள் தொடர்பில் மீளாய்வு செய்யவும் அரச குழுவொன்று நிறுவப்படும். அந்த கட்டமைப்புக்கு வெளியே எந்த திட்டத்திற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட மாட்டாது.

34. 2024 வரவு செலவுத்திட்ட மூலதனச் செலவுக்கான ஒதுக்கீடு ரூ.1260 பில்லியனாக அதிகரிப்பு. இது மொத்தத் தேசிய உற்பத்தியில் 4% ஆகும்.

35. பொருளாதாரநெருக்கடியால் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட திட்டங்களை நிறைவு செய்ய 55 பில்லியன்ரூபாய்மேலதிகஒதுக்கீடு.

36. அபிவிருத்தித்திட்டங்களின் ஊடாகஎதிர்பார்க்கும்நோக்கங்களை உரிய காலத்தில் நிறைவு செய்ய 2024முதல்ஒவ்வொருஅமைச்சிலும் விசேட பிரிவொன்று நிறுவப்படும்.

37. சேதமடைந்துள்ள கிராமிய வீதிகளைப் புனரமைக்க 10 பில்லியன் ரூபாவும் இயற்கை அனர்த்தங்களால் சேதமடைந்த வீதிகளையும், பாலங்களையும் புனரமைக்க 2000 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்படும்.

38. நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திலும்குடிநீர்பிரச்சனைகள் இருப்பதால், பன்முகப்படுத்தப்பட்ட நிதியைப் பயன்படுத்தும் போதும், வெளிநாட்டு கடன் உதவிகளைப் பெறும்போதும் நீர் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

39. கல்வி சீர்திருத்தங்கள் முழுமையான செயல்படுத்தப்படும். அந்த சீர்திருத்தங்கள் மூலம், தேசிய உயர்கல்வி பேரவை, தேசிய உயர்கல்வி ஆணைக்குழு மற்றும்தேசியதிறன்ஆணைக்குழு என்பன நிறுவப்படும்.

40. உயர்தரம் சித்தியடைந்த ஒவ்வொரு மாணவருக்கும் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

41. சீதாவக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்,கொத்தலாவல பாதுகாப்புப்பல்கலைக்கழகத்தின்கீழ் குருநாகல்தொழில்நுட்பநிறுவனம், முகாமைத்துவ தொழில்நுட்ப பல்கலைக்கழகம், சர்வதேச காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகம் ஆகிய 04 புதிய பல்கலைக்கழகங்கள் நிறுவப்படும்.

42. தனியார் உயர்கல்வி நிறுவனங்களை பல்கலைக்கழகங்களாக மாற்றுவதற்கான சட்டவிதிகள் நிறைவேற்றப்படும்.

43. கல்விக் கல்லூரிகளை இணைத்து தேசிய கல்விப் பல்கலைக்கழகத்தைநிறுவுவதற்காக 2024 ஆம் ஆண்டில் 01 பில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

44. இந்தியாவின் சென்னையில் உள்ள ஐஐடி பல்கலைக்கழகத்தின் வழிகாட்டுதலின் கீழ், கண்டி நகரில் ஒரு புதிய தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தல்.

45. அரசபல்கலைக்கழகங்களை புதிய யுகத்திற்கு ஏற்றவாறு மேம்படுத்தும் திட்டமொன்றை செயல்படுத்துவதோடு, அது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படும். அதற்காக 2024 ஆம் ஆண்டிற்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

46. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை மற்றும்நோயெதிர்ப்புத்துறை, தேசிய ஒவ்வாமை மற்றும் நோயெதிர்ப்பு நிறுவனமாக தரம் உயர்த்தப்படும். அதற்காக 2024இல் 40 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

47. உலகில் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு கல்வி நிறுவனத்திற்கும் இந்நாட்டில்பல்கலைக்கழகங்களை நிறுவஅனுமதிவழங்கப்படுவதுடன், தனியார் பல்கலைக்கழகங்களை மேற்பார்வை செய்ய வலுவான சட்டவிதிகளைஏற்படுத்தநடவடிக்கை எடுக்கப்படும்.

48. அரசபல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு வழங்கப்படும் வட்டியில்லாக் கடன் வசதிகளை, தொடர்ந்தும் வழங்குவதோடு, வணிக வங்கிகள் மூலம் சலுகைக் கல்விக் கடன் வழங்கும் முறையை அமுல்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

50. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு ஆகியவை ஒன்றிணைக்கப்பட்டு தேசிய உயர்கல்வி ஆணைக் குழுவை ஸ்தாபித்தல்.

51. தொழிற்பயிற்சி அதிகார சபை, தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை ஆகிய நிறுவனங்களை ஒருங்கிணைத்து தேசிய திறன் விருத்தி ஆணைக்குழுவை நிறுவுதல்.

52. மத்திய அரசின் கீழ் இயங்கும் தொழில் கல்வி நிறுவனங்கள்மாகாணசபைகளுக்கு மாற்றப்படுவதோடு, திறன் விருத்தி மேம்பாட்டுத் துறையை மேம்படுத்தவும் நவீனப்படுத்தவும் மாகாண கல்வி சபைகளை நிறுவுதல்.

53. தொழில்நுட்பதொழில்துறை திறன்களை மேம்படுத்த நிதியமொன்றை ஸ்தாபிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு, அதற்காக தற்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கு மேலதிகமாக 2024ஆம்ஆண்டிற்கு 450மில்லியன்ரூபாஒதுக்கப்படும்.

54. தகவல் தொழிநுட்பம் தொடர்பான தனியார் நிறுவனங்களுடன் இணைந்து, வேலையில்லாத பட்டதாரிகளுக்குப் பயிற்சித்திட்டம்அமுல்படுத்தப்படும். இதற்காக 750 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படும்.

55. நிர்மாணத்துறை,

தொடர்ச்சி 9ம் பக்கம்...

# அம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து இலாபமீட்ட பல வேலைத்திட்டங்கள்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கவனம்



அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு இலாபம் ஈட்டும் வகையில் பல வேலைத் திட்டங்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 15 வீதத்தை இலங்கை துறைமுக அதிகார சபை சொந்தமாக வைத்திருக்கும் போதிலும், இதுவரை அதிலிருந்து எந்த இலாபமும் ஈட்டப்படவில்லை என அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில், துறைமுகத்தின் மூலம் வருமானம் பெறும் வகையில் பல வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பது தொடர்பில் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, அம்பாந்தோட்டை துறைமுகத்தில் கொள்கலன் மறு ஏற்றுமதி திட்டத்தை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியப் பெருங்கடலில் பயணிக்கும் கப்பல்களை அம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு துறைமுகங்களுக்கு ஈர்க்கும் செயற்திட்டமொன்றை அறிமுகப்படுத்துமாறும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா துறைமுக அதிகாரசபைக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக கூறப்படுகிறது. (05)

# ஸ்ரீலங்கா கிரிக்கெட் மீதான இடைக்கால தடையை நீக்க சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்

## பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



சர்வதேசகிரிக்கட்பேரவையால்கிரிக்கெட் மீதான தடையை நீக்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என ஆளும்கட்சியின்பிரதான அமைப்பாளரும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில்விதிக்கப்பட்டுள்ளகிரிக்கட் மீதான தடையை நீக்குவதற்கு சர்வதேச கிரிக்கட் பேரவையுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை கிரிக்கட் மிகவும் ஊழல்நிறைந்தநிறுவனம்என்பதை இந்நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் ஏற்றுக்கொள்ளும்உண்மையாகும்.

எனவே இதனை தேசிய பிரச்சினையாக கருதி இலங்கை கிரிக்கட் நிறுவனத்தில் ஊழலை இல்லாதொழிக்கும்நோக்கில்நாடாளுமன்றத்தில் அனைத்து கட்சிகளும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தீர்மானம்நிறைவேற்றியதாகஅமைச்சர்பிரசன்ன ரணதுங்க குறிப்பிடுகின்றார். (05)

# கந்தசஷ்டி சிறப்பம்சம்

## நம்பிடும் அடியார் நற்றுணை நீயே !



உருகிடு மடியார் உளமுறை வோனே
மருள் நிலையகல வரமருள் வோனே
கருணையி னுருவாய் திழந்திடு வோனே
கந்தா கடம்பா காத்திடு எம்மை

ஆசா னாகியே அப்பனுக் குரைத்தாய்
அறு படையேகி அமர்ந்தே கொண்டாய்
அவ்வைப் பாட்டியின் அருந்தமிழ் சுவைத்தாய்
ஐயா கந்தா அடைக்கலம் நீயே

மாறா மனத்தை மாற்றிட வல்லாய்
ஆறா சினத்தை அடக்கியே வைப்பாய்
பாறாங் கல்லென இருப்பார் தம்மை
பக்குவ மாக்குவாய் பரமனின் மைந்தா

தாகம் தீர்ப்பாய் வேகந் தடுப்பாய்
மோகம் கலைப்பாய் முறுவல் கொடுப்பாய்
நாளு மாவாய் கோளு மாவாய்
நம்பிடு மடியார் நற்றுணை நீயே

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

# தீபாவளிக் கொண்டாடத்துக்காக மதுபானம் வாங்க சென்றவர் நீர்வீழ்ச்சியில் வீழ்ந்து சாவு

## ஒருவரைக் காணோம்

தீபாவளிபண்டிகையைமுன்னிட்டு மதுபானம் வாங்க சென்ற இருவரில் ஒருவர் டெவோன் நீர்வீழ்ச்சியில் விழுந்து உயிரிழந்துள்ளார் எனவும், மற்றொருவர் காணாமல் போயுள்ளார் எனவும் திம்புலபத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு காணாமல்போன இருவரில் ஒருவர் நீர்வீழ்ச்சிக்கு கீழே சடலமாக மீட்கப்பட்டுள்ளளார் எனவும் மற்றொருவரை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்தச்சம்பவம்ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக பொலி-ஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

திம்புலபத்தனைபொலிஸ்பிரிவிற்-குட்பட்ட கிரேக்லிதோட்டத்தில்வசிக்கும் பழனியாண்டி மோகன்ராஜ் என்ற 42 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தந்தையே நீர்வீழ்ச்சிக்கு கீழே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேலும் அதே தோட்டத்தைச் சேர்ந்த 51வயதுடையபாலமாணிக்கம் வேலுகுமார் என்பவரே காணாமல் போயுள்ளார் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரிய-வருவதாவது -

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மதுபானம் வாங்க சென்ற இருவரும் டெவோன் நீர்வீழ்ச்சியில் விழுந்து காணாமல் போயுள்ளனர்.

அவர்களில் ஒருவரின் சடலம் டெவோன் நீர்வீழ்ச்சிக்கு கீழே கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் உறவினர்கள் எனவும், ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் திம்புலபதான பிரதேசத்தில் அமைந்துள்ள மதுபானசாலைக்கு ஞாயிறு மாலை சென்றுள்ளனர் எனவும் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் மதுபானம் வாங்க சென்ற இருவரும் வீடுதிரும்பவில்லை என குடும்ப உறவினகள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

வழுங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய திம்புலபத்தனை பொலிஸார் டெவோன் கால்வாயில் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்த வேளையில், டெவோன் நீர்வீழ்ச்சிக்கு கீழே கொத்மலை ஆற்றில் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த மற்றும் காணாமற் போன இருவரும் டெவோன் கால்வாயின் குறுக்கே உள்ள சிறிய ஆற்றை கடக்க முற்பட்ட வேளையில் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (05)



# உலக கிண்ணப் போட்டிகளில் அழுத்தம் பிரயோகிக்கவில்லை

## இலங்கை அணித் தலைவர் கருத்து

உலககிண்ணப்போட்டிகளில் மிகமோசமாகவிளையாடியமைக்காக இலங்கை அணி பொதுமக்களிடம் மன்னிப்பு கோரியுள்ளது

இலங்கைகிரிக்கெட்கட்டுப்பாட்டுச்சபையில் இடம்பெற்ற செய்தியாளர்மாநாட்டில்அணித்தலைவர் குசல் மென்டிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவளை 2023 உலக கிண்ணப்போட்டிகளில் எந்த தரப்பும் அழுத்தங்களை பிரயோகிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் ஐசிசி தடை விரைவில் நீக்கப்பட்டு என்றும் எங்கள் அணி விளையாட அனுமதிக்கப்படும் என நம்புகிறோம் என குறித்த சந்திப்பில் மஹேல ஜெயவர்தன குறிப்பிட்டுள்ளார். (05)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரை பலாங்கொடை மண்சரிவால் காணோம்

பலாங்கொடை பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி நால்வர் காணாமல் போயுள்ளனர் எனப் பொலி-ஸார் தெரிவித்தனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் இரண்டு மகள்கள் இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இந்த மண்சரிவில் மூன்று வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

பலாங்கொடை, கவரன்ஹேன - வெயின்தென்ன பகுதியில் இந்த மண்சரிவு ஞாயிற்றுக்கிழமை இரவு ஏற்பட்டுள்ளது.

மண்சரிவில் காணாமல் போனோரை தேடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

# சர்வதேச விளையாட்டு நீதிமன்றை நாட தயார்

## விளையாட்டுதுறை அமைச்சர் கூறுகிறார்



கிரிக்கெட்சபையில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பான அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிப்பதாகவும் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொான் ரணசிங்க தெரிவித்தார்.

விசேட ஊடகவி-யலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை கிரிக்கட் இடைக்கால குழுவிற்கு விதிக்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்யவுள்ளதாகவும், நீதிமன்றத் தீர்ப்பு எதுவாக இருந்தாலும் ஏற்றுக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இடைக்காலக்குழுவிற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கினால், எதிர்வரும் வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்குத் தேவையான ஆதரவை அர்ஜுன ரணதுங்கவுக்கு வழங்கப்படும்.

அத்துடன் சர்வதேச கிரிக்கட் பேரவை முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க தயாராக இருப்பதாகவும், இலங்கைகிரிக்கெட்டில் அரசியல் தலையீடு இல்லை எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நடவடிக்கைக்கு உரிய முடிவு கிடைக்காவிட்டால் சர்வதேச விளைய-ாட்டு நீதிமன்றத்தை நாடவுள்ளதாகவும் ரொ-ஷான் ரணசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## புதிதாக எதுவுமில்லை

அரசுத்தலைவரும்நிதிஅமைச்சருமானரணில் விக்கிரமசிங்க 2024 வரவு செலவுத் திட்டத்தை நேற்றுநாடாளுமன்றத்தில்முன்மொழிந்தார். அந்த வரவு செலவுத் திட்டம் இந்த ஆட்சியின் கொள்கை விளக்க உரை போன்று அமைந்திருந்தது.

அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பு வழங்கப்படுவதாக அறிவித்த நிதி அமைச்சர், நாட்டின் மிகப் பெரும் தொழிலாளர் படையும் அரசின் உள்நாட்டுப் படுகடனை முழுவதுமாகத்தமதுதலையில்சுமப்பவர்களுமான தனியார் துறைப் பணியாளர்களுக்கான சம்பள அதிகரிப்புப் குறித்து எந்தவொரு வார்த்தையும் உதிர்க்கவில்லை என்பது பெரும் ஏமாற்றமாக அமைந்தது.

ஏற்கனவே தனியார் துறையில் வேலை வாய்ப்பு குறைந்துள்ள நிலையில், –முதலாளிகள் சம்பள அதிகரிப்புக்கு தொழில் முடக்கத்தைக் காரணம் காட்டிவரும் நிலையில் வரவு செலவுத் திட்டமும் அவர்களைக் கைவிட்டிருப்பது பெரும் நெருக்கடியையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தக்கூடியது.

கல்வி, உயர் கல்வி, சுகாதாரம், டிஜிட்டல் பொருளாதாரம், அபிவிருத்திப் பணிகள் என்பவற்றில் அரசின் முன்னெடுப்புக்கள், சீர் திருத்தங்கள் குறித்த முன்னறிவிப்புக்களாகவே வரவு செலவுத் திட்டம் அமைந்தது. அரசின் வருமானத்தை மொத்தத் தேசிய உற்பத்தியில் 15 சதவீதமாக அதிரிக்க வேண்டும் என்ற சுட்டிக்காட்டிய அரசுத் தலைவர், அதற்கு வரி அதிகரிப்புத் தவிர்ந்த வேறு எந்த மார்க்கத்தையும் முன்வைக்கவில்லை. அதேபோன்று அரச செலவினங்கள் குறைக்கப்படவேண்டும் என்பதையும் ஏற்றுக்கொண்ட அவர், அதற்கான வழிவகைகளையும் முன்மொழியவில்லை.

தற்போது போன்றே மிகக் கடினமான பாதையிலேயே அடுத்த வருடத்தையும் மக்கள் கடக்கவேண்டும்என்பதுதான்அரசுத்தலைவரின் ஒரே முன்மொழிவு. மொத்தத்தில் பொ–ருளாதார நெருக்கடியில் நாட்டை மீட்டெடுப்பதற்கான வழிகளையும்அதன்மூலம்மக்களுக்குநிவாரணம் வழங்குவதற்கான வழிகளையும் காட்டாத இந்த வரவு செலவுத் திட்டம் உடனடியாகவே எதிர்க்கட்சிகளின் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது.

ஏதோஒருவரவுசெலவுத்திட்டத்தைமுன்வைக்க வேண்டும் என்பதற்காக இந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்கள் என்று எதிர்க் கட்சிகள் விமர்சித்துள்ளன. கடன் பெறுவது, அரச சொத்துக்களை விற்பனை செய்து வருமானமீட்டுவது ஆகியன போன்ற தோல்வியடைந்த வருமான மார்க்கங்கள் தவிர்ந்த வேறு எந்த முன்மொழிவும் வரவு செலவுத் திட்டத்தில் இல்லை என்பதை ஜேவிவி கண்டித்திருக்கிறது.

ஒரு புறத்தில் தொழிற்சங்கப் போராட்டங்கள் வலுத்து வரும் நிலையிலும் மறுபுறத்தில் அடுத்த ஆண்டு தேர்தல்கள் வரவுள்ள நிலையிலும் இந்த வரவு செலவுத் திட்டம் பலத்த எதிர்பார்ப்புக்கு உள்ளாகிஇருந்தது. ஆனால், அந்தஎதிர்ப்பார்ப்பைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலல்லாமல் வாக்குறுதிகளின் தொகுப்பாகவே அது அமைந்திருக்கின்றது.

எனவே மக்கள் அடுத்த வருடத்திலும் துன்பங்களையும் நெருக்கடிகளையும் சுமக்கவேண்டிய நிலையை எதிர்கொள்வதற்குத் தயாராக இருக்கவேண்டியதுதான்.

# கற்பகதரு என்னும் அற்புதம்

## பனைதரும் பாங்கான நுங்கு

அங்கம் -22



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

பலவித பயன்களை நல்கும் பனையின் நுங்கில் அதிஷ்டமும் இருக்கிறது என்றால் ஆச்சரிப்படுவீர்கள். அப்படி என்னதான் அதி ஷ்டம் இருக்கிறது என்று அறிந்திட ஆவல் மேலிடுகிறதல்லவா! நுங்கினைக் கத்தி யினால்







சீவும் பொழுது சாதாரணமாக மூன்று கண்களே காணப்படும். இதுதான் எல்லா நுங்கிலும் அமை ந்திருக்கும் பாங்காகும். ஆனால் சில நுங்குகளைச் சீவும் பொழுது மட்டுமே நான்கு கண்கள் அங்கு அமைந் திருக்கும்.நான்கு கண்களைக் கொண் ட நுங்குகள் கிடைத்தால் நல்ல அதிஷ்டம் என்று சொல்லுவது வழக்க மாய் இருக்கிறது. இதனை நுங்கு அதிஷ்டம் என்றுதானே அழைத்திடல்வேண்டும். அதிஷ்டம் உள்ள நுங் கினைத் தேடுவதுவதும் ஒரு அதிஷ்டம்தான். நான்கு கண்களே அதிஷ்டம் என்றால் அதிலும் அதிகமான கண்களை உடைய நுங்குகள் வாய்த்தால் இன்னும் அதிகளவு அதிஷ்டமும் வந்து அமையும் அல்லவா! அப்படி அதிஷ்டம் தரும் வகையில் வந்து அமைவதுதான் ஏழு கண்ணுள்ள நுங்காகும். இப்படியான நுங்கு வாய்த்தால் அதுமிகவும் சிறப்பு என்று கருதப்பப்படுகிறது.

இலங்கையில் - பனைகள் நிறைந்த செல்வமாக இருக்கின்ற பொழுதும் விற்கும் பொருளாக வரவில்லை என்பதை முன்னர் பார்த்தோம். ஆனால் இந்தியாவில் நுங்கு , விற்பனைக்கு உரியதாக இருக்கிறது என்பதையும் பார்த்தோம். பனையின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் எப்படியாவது அதற்குச் சமனாக நின்று விட வேண்டும் என்னும் எண்ணத்தைமட்டும்தென்னையானது மறவாமல் இருக்கிறது என்பதை அதன் ஒவ் வொரு நிலையிலும்காணக்கூடியதாகவே இருக்கிறது. வெய்யிலினால் அவதிப்படுவோருக்கு கை கொடு க்க நுங்கு வரும் வேளை, அங்கு தென்னையின் இளநீரும் வந்துநின்றுவிடுகிறது. வருபவர்கள் இளநீரை வாங்குவதா நுங்கினை வாங்குவதா என்னும் நிலையினை - இளநீரின் வருகை ஏற்படுத்தியே விடுகிறது. என்றாலும் நுங்கின் சிறப்பு சிறப்புத் தான்.காரணம் இளநீர் எந்தநாளும் கிடைக்கக் கூடியது. ஆனால் நுங்கு என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில்மட்டுமேகிடைக் கக் கூடியது ஆகும். அதனால் இளநீர் அருகில் இருந்தா லும் நுங்கினையே பலர் நாடுகிறார்கள். அந்தவகையில் தென்னை சற்று பின் வாங்கியே நிற்கும் நிலை ஏற் படுவதைத் தவிர்க்கமுடியாமல் இருக்கிறது. இதனைத் தென்னையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டியிருக் கிறது.

களியக்காலிளை, குழித்துறை, மார்த் தாண்டம், இரவிபுதூர் கடை, சாமி யார் மடம், அழகிய மண்டபம் தக் கலை, புலியூர்க்குறிச்சி, வில்லுக்குறி, திங்கள் சந்தை, நுள்ளிவிளை, திருவிதாங்கோடு, நெய்யூர் மாவட் டங்களில் சாலை ஓரத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்ட கடைகள் காலை ஒன்பது மணி தொடக்கம் மாலை ஆறு மணிவரை திறந்தே இருக்கும். இந்தக் கடைகளில் நுங்கும் இருக்கும். இளநீரும் இருக்கும். நுங்கினை அதி கமாக பணகுடி, உள்ளிட்ட நெல்லை மாவட்டங்களில் இருந்து வாங்கியே இங்குள்ளகடைக்காரர்கள் விற்று தங்களின் வருமானத்தை ஈட்டுகிறார்கள் என்பது நோக்கத்தக்கதாகும். கொட்டாரம் தொடக்கம் வில்லுக்குறி வரை சாலை ஓரத்தில் நுங்கு வியாபரம் இன்றுவரை தொடர்ந்தபடியே இருக் கிறது தமிழ் நாட்டில் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்படியான ஒரு நிலை யாழ்ப்பாணத்திலும் இல்லை. இலங்கையின் ஏனைய பாகங்களிலும்காணவேமுடியாது. கன்னியாகுமரி மாவட்டங்களில் இருப்பவர்கள்நுங்கில்சர்பத்தையும் ஊற்றிச்சுவைத்தும்மகிழுகிறார்கள் என்றும் அறிந்திட முடிகிறது.

நுங்குவருடம்முழுவதும்கிடைக்கக்கூடியதல்ல. வருடத்தில் குறிப்பிட்ட மாதத்திலேதான் கிடைக்கிறது. அப்படிக் கிடைக்கும் நுங்கின் சுவையினைத்தொடர்ந்து சுவைக்கவே யாவரும் விரும்புகிறார்கள். அப்படி விரும்புகின்றவர்களுக்காக நுங்கினைப் பதப்படுத்தி அதனைத் தகரத்திலோ அல்லது போத்தல்களிலோ பாதுகாப்பாக வைத்து விற்பனைசெய்யும்முறையும் இப்போழுது வந்திருக்கிறது. தாய்லாந்து நாடு குறை ந்த அளவில் பனையினைக் கொண்டதாக இருந்தாலும் நுங்கினைப் பதப்படுத்தி விற்பனைக்கு வழி சமைத் திருக்கிறது என்பது கருத்திருத்த வேண்டிய விடயமாகும். கம்போடியாவில் பனையினை மிகவும் பிரியத் துடன் அந்த நாட்டு மக்கள் பாதுகாத்து வருகிறார்கள். அந்த நாட்டில் பனையிலேயே எங்கள் தமிழ் மொழி யில் நுங்கு சாறு என்று பொறிக்கப்பட்ட அறிவிப்பு இடம் பெற்றிருப்பதும் கருத்திருத்தவேண்டியவிடயம்எனலாம்.

யாழ்ப்பாணத்தில் குறிப்பாக கீரிமலையில் 1970 ஆம் ஆண்டில் நுங்கினைப் பதப்படுத்தி தகரத்தில் அடைப்பதற்கான முயற்சி

பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் பனம் நுங்கினைப் பதப்படுத்தலும் தொழில்நுட்பப் பரிமாற்றமும்



எடுக்கப்பட்டது. எடுக்கப்பட்ட முயற்சி வெற்றிகரமாக அமைந்திட வாய்ப்பில்லாத நிலை ஏற்பட்டு விட்டது. நாட்டில் ஏற்பட்ட பொருந் தாச் சூழ்நிலையால் அந்த முயற்சி தடைப் பட்டுப் போகும்படி ஆகியே விட்டது. பனைவளம் நிறைந் துள்ளயாழ்மண்ணில்இத்தொழில் சிறப்படைந்தால் நல்ல பயனினை அளிக்கும் அல்லவா! நுங்கில் 89 விகிதம் நீர் இருக்கிறது. புரதம் 0.8 விகிதம், கொழுப்பு 0.07 விகிதம், காபோஹைத ரேற்று

(5ஆம் பக்கம் பார்க்க...)

# கற்பகதரு என்னும் அற்புதம்...........

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..........)

21 விகி தம் , நாற்பொருள் 0.9 விகிதம், சர்க்கரை 8.3 விகிதம், கல்சியம் 7.4 விகிதம் , பொஸ்பரசு 11.8 விகிதம், பீனோல் 0.05 விகிதம், விற்றமின் ளீ 5 விகிதம் என்னும் அளவில் நுங்கில் போசனையின் கூறுகள் காணப்படுகின்றன என்பது முக்கிய விடயம ாகும்.

நீண்டகாலத்துக்குநுங்கினைச்சுவைத்து மகிழ்ந்திடவைப்பதற்குபதப்படுத்தல்முறையே உகந்ததாக அமைகிறது எனலாம். நல்ல நுங்கு முதலில் தெரிவு செய்யப்படுகிறது. பின்னர் அவற்றை சுத்தமான நீர் கொண்டு கழுவப்படுகிறது. நுங்கினை அடைப்பதற்கான கண்ணாடிப்போத்தல்கள்தெரிவுசெய்யப்பட்டு அப்போத்தல்களும் சுகாதார முறையில் பேணப்படுகிறது. சுத்தமாக்கப்பட்ட நுங்குகள் பதமான சீனிக்கரை சலுக்குள் இடப்படுகிறது. அதன்பின்அதனைத்தளர்வாகமூடிபொருத்தம ான வெப்பநிலையில் சூடாக்கப்ப டுகிறது. அதன் பின் உடனடியாகவே குளிரச்செய்து போத்தல்களில் இட்டு இறுக்கமான மூடியால் அடைக் கப்பட்டு விற்பனைக்கு நுங்கு தயார் செய்யப்படுகிறது என்று நுங்கு பதனிடம் முறை சொல்லப்பட்டருக்கி றது.

இந்த முறையானது யாழ்மண்ணில் ஒழுங்கான முறையில் இடம்பெறுமானால் பலருக்கும்நல்லவேலைவாய்ப்பும்கிடைக்கும். குறிப்பிட்ட காலத்தில் சுவைக்கும் நுங்கினை விரும்பிய பொழுதெல்லாமே சுவைத்தும் மகிழ்ந்திடும் வாய்ப்பும் அமையுமல்லவா !

நுங்கு விரைவில் கெட்டுவிடும் தன்மை யினைப்பெற்றிருப்பதால்அதனைஉடனேயே சுவைப்பதுதான் உகந்தாக இருக்கிறது. என்றாலும் அந்தச் சுவையினைத் தொடர்ந்து சுவைத்திட எண்ணும் நிலையும் தற் போது ஏற்பட்டிருக்கிறது. நுங்கினைச் சுவைத்து ம கிழவேண் டும் என்பதற்காகவே நுங்கினைப் பதப்படு த்தி வைக்கும் சிந்தனையும் உதயம ாகியது எனலாம். தகரத்தில் அடைப்பது, கண்ணாடிப் போத்தல்களில் அடைப்பது என்னும் வகையில் நுங்கு நீண்ட நாட்க ளுக்குப் பாதுகாப்பாய் இருக்கவும் , நுங்குப் பிரியர்க ளின் எண்ணத் தைப் பூர்த்தி செய்வதாகவும் அமைகிறது என்பதும் கருத்தி ருத்த வேண்டியதேயாகும்.

நுங்கினைப் பொலித்தீன் பைகளில் சேமித்து வைத்தும் குறிப்பிட்ட நாட்களுக்குப் பாதுகாப்பாக வைத்தி ருக்கலாம் என்றும் அறிந்திட முடிகிறது.தோல் நீக்கப்பட்ட நுங்கினை வேகவைத்தோ அல்லது வேகவை க்காமலோ காற்றோட்டமுள்ள காற்றோட்டமற்ற பொலித்தீன் பைகளில் 50 செ வெப்பநிலையில் பத்து நாட்கள் பழுதுபடாமல் வைத்திருக்கலாம் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நுங்குப் பிரியர்களுக்காக நுங்கினைப் பதப்படுத்தி சில பொருட் களும் வந்து அமைகின்றன.இந்த வகை யில் அமைந்த மூன்று பொருட்களைப் பார்ப்போம். முதலில் நுங்கு உலர்பழும் என்பது வருகிறது. நுங் கினை இரண்டாகப் பிரித்து அதனைக் கூர்மை யான கத்தியில் குத்தி எலுமிச்சைக் கரசலில் ஒரு மணி நேரம் அமிழ்த்தி வைத்திடல் வேண்டும்.அதன் பின் கத்தியிலிருந்து தனியாக எடுத்து தூய்மையான நீரில் வைக்க வேண்டும். ஏற்கனவே எலுமிச்சைக் கரசலில் இருந்த நுங்கில் எலுமிச்சை படியாமல் இருப்பதற்கே இப்படிச் செய்யப்படுகிறதாம்,

இவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட நுங்குத் துண்டுகளை சர்க்கரைப் பாகில் ஒரு நாள் முழுவதும்நனைத்துவைக்கப்படவேண்டும். நனைப்பதற்கு முன்னர் சர்க்கரைப் பாகில் உணவுக்குரிய நிற மூட்டியைக் கலந்து விடல் வேண்டும்.

நனைக்கப்பட்ட நுங்குத் துண்டுகளை அடுத்தநாள் எடுத்த பின் னர் சர்க்கரைப் பாகினை கொதிக்க வைக்க வேண்டும். சர்க்கரைப் பாகின் கொதி அளவா னது 600 பிரிக்ஸ் இருக்க வேண்டும்.அதன் பின் சர்க்கரைப் பாகைக் குளிரவைத்து அதில் நுங்குத் துண்டுகளை 24 மணி நேரத் துக்கு நனைத்து வைக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் சர்க்கரைப் பாகின் அளவைக் கூட்டி 75 விகிதம் வரையில் ஒவ்வொரு நாளும் மாறி மாறி சர்க்கரைப் பாகினுள் நுங்கு துண்டுகளை நனைத்தெடுத்தல் வேண் டும்.

இப்படி நனைத்தெடுப்பது ஒரு வாரம் வரை இடம் பெறல் வேண்டும்.

அதன்பின்நனைந்தநுங்குத்துண்டுகளை பாகிலிருந்து எடுத்து கொதிநீரில் இட்டு ஒட்டி யிருக்கும் சர்க்கரைப் பாகை பிரித்தெடுக்க வேண்டும்.இவ்வாறு பெறப்பட்ட நுங்குத் துண்டுகளை நிழலில் உலர்த்தி சிறு துண்டுகளாக நறுக்கி பொலித்தீன் பைகளில் அடைத்து உலர்ந்த இடத்தில் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.இப்படியெல்லாம் செய்து வருவது தான் நுங்கு உலர் பழம்

இளம் நுங்கைத் தேர்ந்தெடுத்து அதனை கல்சியம் ஒக்சைடு கலந்த நீரில் நனையவிட்டுப் பின்னர் சுத்தமான நீரில் கழுவி அதன் பின்னர் சிட்ரிக் அமிலம் கலந்த நனைத்து பின் சுடு நீரால் கழுவி பின்னர் சர்க்கரைப் பாகில் கலந்து நூல் போன்ற தன்மை அடையும் வரை வேகவைக்க வேண்டும். பின்னர் சர்க்கரைப் பாகிலிருந்து நுங்குத்துண்டுகள்அனைத்தையும்வெளியே எடுத்து நிழலில் உலரவிட வேண்டும். சர்க்கரைத் துகள்கள் நுங்கின் மேல் பகுதி யில் ஒட்டிக்கொண்டு சுவையான மிட்டாய் ஆகிவிடுகிறது. காற்றோட் டமுள்ள இட த்தில் வைத்துப் பின்னர் சுவைத்து மகிழலாம். இதுதான் நுங்கு மிட்டாய்

நுங்கினைக் கொண்டு குளிர் பானம் செய்யலாம். நுங்குச் சாறு , சர்க்கரைப் பாகு, எலுமிச்சைச்சாறு இவற்றை முறைப்படிகலப்ப தால் நுங்குச் சாறு பெறப்படுகிறது. நுங்கின் சாறு, பால், சர்க்கரை, ஏலக்காய், ஜாதிபத்தி ரி, முந்திரிப்பருப்பு இவற்றைக் கலந்து நுங்கு நீர் என்னும் சுவையான பருகும் பானமும் தயார் செய்யப்படுகிறது. இப்படியெல்லாம் செய்யும் முறைகள் இருக்கின்றன என்னும் செய்திகள் நுங்கின் பயன்பாட்டை மேலும் சிறப்பாக்கி இருக்கிறதல்லவா! இப்படியெல்லாம் செய்வதும் இவற்றைத் தொழிலாக்குவதும் விருத்தி அடைந்தால் - ஏற்றுமதி வரும ானமும் கிடைக்கும். பலருக்கும் வேலை வாய்ப்பும் கிடைத்திடும் நிலையும் உருவாகும் அல்லவா !

நுங்கு சுவைத்து மகிழ்ந்ததோடு நின்று விடாமல் விளையாட்டுப் பொருளாகவும் அமைந்திருக்கிறது. கிரா மங்களில் விளைய-ாடப்பட்ட பல விளையாட்டுகள் மறைந்து போய் , மறந்து போய்க் கொண்டே இருக்கிறது. கிராமப்புற விளையாட்டுக்களில் நுங்கும் தனது பங்களிப்பினை வழங்கி நிற்கிறது என்பதும் நோக்கத்தக் கது. சுவைத்த பின் நுங்கினைத் தூக்கி எறியாமல் அதனைக் கொண்டு நுங்கு வண்டி செய்து அதனை ஒரு விளையாட்டாக்கியதை மறந்துவிடல் கூடாது. வெட்டிய இரண்டு நுங்குகளை எடுத்து அவற்றை இணைப் பதற்கு நடுவில் ஒரு குச்சியை அச்சாணியாகச் செருகி அத்த நடுக் குச் சியைத் தொட்டு நிற்க கவர் உள்ள பெரிய தடியினை பயனாக்கி நுங்கு வண்டியை மேடு பள்ளம் என்று பாராமல் கிராமத்தில் சிறுவர்கள் போட்டி போட்டுக் கொண்டு ஓடுவதை நினைத்துப் பாருங்கள். நகரத்தில் இருக்கின்றவர்களுக்கும் , அங் கிருக்கும் சிறுவர்களுக்கும் இந்த நுங்கு வண்டியையும் தெரியாது. ஏன் நுங்கையே தெரியாது. நுங்கு வண்டியை போட்டிக்கு ஓட்டி விளையாடும் பொழுது சிறுவர் களுக்குத் தனியான ஒரு உற்சாகம் பீறி ட்டே எழுந்து நிற்கும்.நுங்கு வண்டியினை சிறுபராயத்தில் ஓட்டி மகிழ்ந்தவர்களுக்கே அந்த ஆனந்தம் தெரியும்.

கோவில் திருவிழாக் காலங்களில் அலங்கரிக்கும் வகையில் நுங்கும் இடம் பெறுகிறது, நுங்கினைக் குலை யாகவே அலங்காரத்துக்குக் கட்டுவதும் ஒரு வழக்கம ாகவே இருந்து வருகிறது. அலங்காரமாய் அமையும் நுங்கு அருமையான உணவாயும் அமைகிறது ஆடுகளுக்கும் மாடுகளுக்கும் என்பதும் நோக்கத்தக்கது,

சுவைத்த பின் இருக்கும் நுங்கின் தோல்பகுதிகளை பனங் கோளை என்று அழைக்கிறோம்.இந்தப்பனங்கோளையினைக் கத்தியினால் சிறிது சிறிதாக சீவியெடுத்து ஆடுகளுக்கும் ,

மாடுகளுக்கும் கொடு க்கப்ப டுகிறது. அவையும் அதனை ஆசையாகத் தின்று சுவைக்கின்றன. பனங்கோளைகளைச்சாப்பிட பின்னர் நல்ல சுவையான பாலையும் தந்து நாங்கள் பருகி மகிழ்திடவும் வைக்கின்றன. இத்தனைக்கும் அடிப்படை யாய் இருப்பது கற்பகதருவின் கொடையாய் இருக்கும் நுங்கு என்பதைக் கருதிருத்தல் அவசிய மேயாகும்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swshpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# பெற்றோர்களைக் குறிவைத்து நூதனமுறையில் பண மோசடி

பாடசாலைக்குசெல்லும்பிள்ளைகளுக்கு கடுமையான சுகவீனம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து, பெற்றோர்கள் வைத்தியசாலை அல்லது பாடசாலைக்குச் சென்ற பின்னர் வீடுகளில் திருடும் கும்பல் ஒன்று தொடர்பில் பொலிஸ்தலைமையகம்விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இதுவரை கொழும்பு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், குருநாகல் நகரிலுள்ள பல பாடசாலைகளிலும் இவ்வாறான சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

முன்னதாக, கொழும்பில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் பிள்ளையின் தந்தைக்கு, பாடசாலையின் பிரதி அதிபர் எனத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட ஒருவரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்துள்ளது.

இதில் அவரது பிள்ளை திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், அவசர சிகிச்சைக்கு பணம் தேவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிள்ளையின் தந்தை ஒரு சட்டத்தரணி எனவும், அவர் பாடசாலைக்கு தொலைபேசி அழைப்பு விடுத்தபோது போது, அவரது குழந்தை நலமுடன் இருப்பதாகவும், வகுப்பில் இருப்பதாகவும் அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.

இதனையடுத்து அவர் இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். இதேபோல் குருநாகலில் உள்ள மற்றுமொரு முன்னணி ஆண்கள் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவன் ஒருவரின் தந்தைக்கும் இவ்வாறான தொலைபேசி அழைப்பு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான தகவல் கிடைத்ததும் மாணவனின் தாத்தாவை பள்ளிக்கு அனுப்பி பிள்ளையின் உடல்நிலை குறித்து தெரிந்து கொண்டுள்ளார். பின்னரே அந்த அழைப்பு போலியானதுஎன்பதைகண்டுபிடித்துள்ளார்.

இதேபோன்ற சம்பவங்கள் ஏற்கனவே நாட்டின் பல பகுதிகளில் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த மோசடி கும்பல் தொலைபேசிகளில் தெரிவிக்கும் செய்திகளை கண்டு ஏமாற்றமடைந்த சிலர் பதற்றமடைந்து தகவல் தேடாமல் பணத்தையும் கொடுத்துள்ளனர்.

மேலும் சில பெற்றோருக்குக் கிடைத்த தகவலைப் பற்றி விசாரிப்பதற்காக அவர்கள் வீடுகளை விட்டு வெளியேறியபின் அவர்களின் வீடுகளில் திருடப்பட்ட நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன எனத்; தெரிவிக்கப்படுகிறது.

இந்த போலி தொலைபேசி அழைப்புகளுக்கு பொதுமக்கள் ஏமாற வேண்டாம் என்றும், பதற்றம் அடையாமல் பாடசாலை நிர்வாகத்திடம் இருந்து விவரங்களை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறும் பொலிஸார் அறிவுறுத்தியுள் ளனர். (05)

# தெமட்டகொடயில் குண்டுத் தாக்குதல்

தெமட்டகொட பகுதியில் ஞாயிற்க்கிழமை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதல் சிறையில் உள்ள தெமட்டகொட ருவானின் வீட்டின் மீது நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது ஒரு பெற்றோல் குண்டு வீட்டிற்குள் விழுந்துள்ளதோடு மேலும் இரண்டு பெற்ரோல் குண்டுகள் வீட்டின் வாசலில் விழுந்துள்ளன.

மேலும் சம்பவம் தொடர்பில் தெமட்டகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# கிறிக்கெட் சபை மீதான தடை நீக்கப்படாது விட்டால் நடைபெறவிருக்கும் உலகக்கோப்பை பாதிப்புறும்

ஐ.சி.சி, இலங்கை கிரிக்கெட் வாரியம் மீதான தடையை நீக்காவிட்டால், ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் 19 வயதுக்குட்பட்டோருக்கானஉலகக்கோப்பையை நடத்தும் வாய்ப்பை நாடு இழக்க நேரிடும் என்று இலங்கை கிரிக்கெட் வாரியத் தலைவர் ம்மி சில்வா எச்சரித்துள்ளார்.

இது பற்றி ம்மி சில்வா மேலும் கூறுகையில் -

'ஏறத்தாழ, ஐந்து மாதங்களுக்கு முன்பு, இலங்கைக் கிரிக்கெட்டின் மீதான அரசியல் தலையீடுகள் பற்றிய தகவல் வெளியானபோது, ஐ.சி.சி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு விசாரணை நடத்தியுள்ளது.

இந்த அரசியல் தலையீடுகள் குறித்து, ஐ.சி.சி துணைத்தலைவர் இம்ரான் கவாஜா சிறப்புக் கவனம் செலுத்தியிருந்தார்.

கவாஜா, விளையாட்டுத்துறை அமைச்சர் ரொசான் ரணசிங்க மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆகியோரை சந்தித்து கிரிக்கெட்டின் மீதான அரசியல் தலையீடுகள் கட்டுப்படுத்தப்படவில்லை என்றால், ஐ.சி.சி தீவிரமான நடவடிக்கைகளை மேற் கொள்ளும் என எச்சரித்திருந்தார்.

மேலும், ஜூலை 10 முதல் 14 வரையான ஐ.சி.சி கூட்டத்திற்கு நான் சமுகமளித்திருந்தபோது, ஐ.சி.சியின் அறிக்கையில் இலங்கை கிரிக்கெட்டில் முற்றிலுமாக அரசியல் தலையீடு காணப்படுகிறது எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதற்காக இலங்கையில் கிரிக்கெட்டை தடைசெய்ய வேண்டும் அல்லது இலங்கைக்கான நிதி, முடக்கம் செய்யப்பட வேண்டும் என ஐ.சி.சி அப்போது கூறியிருந்தது.

எனினும்அவ்வாறானநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என நாம் கேட்டுக்கொண்டு அதைத் தடுத்தோம்.

அதேவேளை,இலங்கைகிரிக்கெட்மீதான தற்போதைய தடை நீக்கப்படாவிட்டால், 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பையை நடத்தும் வாய்ப்பை இலங்கை இழக்க நேரிடும். - எனத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், 19 வயதுக்குட்பட்டோருக்கானஉலகக்கோப்பையை இலங்கையில் நடத்துவது குறித்து, நவம்பர் 21ஆம்திகதிநடைபெறும்ஐ.சி.சியின்அடுத்த வாரியக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. (05)

# யாழில் பிரபல பாடசாலை மாணவர்கள் நால்வர் கைது

*மாணவனின் செவிப்பறை பாதிக்கப்படும் வகையில் தாக்கிய சக மாணவர்கள் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.*

*சம்பவம் தொடர்பில் தெரியவருகையில், யாழ்ப்பாணம் நகரில் உள்ள தேசிய பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 13 வயதுடைய மாணவனே தாக்கப்பட்டுள்ளார். அவரது செவிப்பறை பாதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.*

*சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் முறைப்பாடு பதியப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பொலிஸ் புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்த விசாரணையில் மாணவன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*அவரது வாக்குமூலம் பெறப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.*

*அவரை சிறுவர் சீர்திருத்த பாடசாலையில் தங்க வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. அந்த மாணவனின் வாக்குமூலத்தின் அடிப்படையில் மேலும் மூன்று மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.*

*(05)*




காலைக்கதிர் Kalaikkathir

# மயிலத்தமடு மாதவனை விவகாரம்; நீதிமன்ற தீர்ப்பு நடைமுறையாகுமா?

## வேலன் சுவாமிகள் கேள்வி



மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனைபகுதியில்அரசகாணியில் அத்துமீறிய குறியேறியவர்களை வெளியேறுமாறுஏறாவூர்சுற்றுலா நீதிமன்ற நீதிபதி அன்வர் சதாத் கட்டளைபிறப்பித்துள்ளநிலையில் குறித்த கட்டளையை உரிய தரப்பினர்கள்நடைமுறைப்படுத்துவார்களா என பொத்துவில் பொலிகண்டி பேரியக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள் கேள்வி எழுப்பினார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்-

மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை பகுதியில் மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான அரச காணியில் அத்துமீறி குடியேறியதாகத் தெரிவித்து 13 பேருக்கு எதிராக ஏறாவூர் நீதிமன்றில்மகாவலிஅதிகாரசபையால் கடந்த கடந்த 2023.09.22 அன்றுதாக்கல்செய்யப்பட்டிருந்த வழக்கு தீர்ப்புக்காக நேற்று (திங் கட்கிழமை) எடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை பகுதியில் அத்துமீறி குடியேறியதாக தெரிவிக்கப்பட்ட 13 பேரும் நீதிமன்றில் ஆஜராகி இருந்தனர்.

மகாவலி அதிகார சபை சார்பாக மன்றுக்கு அரச சட்டத்தரணி டில்கானி டி சில்வா ஆஜராகியிருந்தார்.

இந்நிலையில் அதிகாரம் பெற்ற அதிகாரிகளின் எந்த வகையான ஆவணமும் நீதிமன்றுக்கு அத்துமீறிகுடியேறியவர்கள்எனக் குற்றம் சாட்டப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படாததால்மட்டக்களப்பு மயிலத்தமடுமாதவனைபகுதியில் அத்துமீறி குடியேறிய குறித்த 13 பேரையும் வெளியேறுமாறு நீதிவான் கட்டளை பிறப்பித்தார்.

நீதிமன்றத் தீர்ப்பை வரவேற்கின்ற நிலையில் ஏற்கனவேஉயர்நீதிமன்றத்தில்மயிலத்தமடுமாதவனைசட்டவிரோத குடியேற்றக்காரர்களை வெளியேறுமாறு தீர்ப்பு வழங்கப்பட்ட நிலையில் உயர்நீதிமன்ற தீர்ப்பு கிடப்பில் கிடக்கிறது.

இதனை இழுத்தடிப்பு செய்வதற்காக மகாவலி அதிகார சபையும் வனவளத் திணைக்களமும் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில்வழக்கைத்தாக்கல் செய்தார்கள்.

எனினும் திங்கட்கிழமை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி சட்டவிரோத குடியேற்றக்காரர்களை வெளியேற்றுமாறுகட்டளைபிறப்பித்துள்ள நிலையில் குறித்த கட்டளை உரிய முறையில் நிறைவேற்றப்படுமா என்ற சந்தேகம் எழுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (05)

# சரக்கு ரயில் பெட்டியை உடைத்து திரிபோசஷா திருடிய இருவர் கைது



மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சரக்கு ரயில் பெட்டியை உடைத்து 750 திரிபோச பக்கெற்றுக்களை திருடிச் சென்ற இருவரை ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளதாகபொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு பிராந்திய சுகாதாரத்திணைக்களத்திற்குதிரிபோசபக்கெற்றுக்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

இந்நிலையில், கடந்த 5 ஆம் திகதி நிறுத்தி வைக்கப்பட்ட சரக்கு ரயில் பெட்டியை உடைத்து 750 திரிபோச பக்கெற்றுக்கள்திருட்டுப்போயிருந்தன. சம்பவம் தொடர்பில் 7 ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து, திருடப்பட்ட திரிபோஷா பக்கெற்றுக்களை இருவர் விற்பனை செய்துவருகின்றனர் என பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இந்நிலையில், மட்டு தலைமையக பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஜி.எம்.எஸ்.கயநாயக்கா தலைமையிலான பொலிஸார் சம்பவதினமான ஞாயிற்றுக்கிழமை இரவு கருவப்பங்கோணி மற்றும் கூழாவடி பிரதேசத்தைச்சேர்ந்த 30வயதுடைய இருவரை அவர்களது வீடுகளில் வைத்து கைது செய்ததுடன் திருடப்பட்ட சிறியளவிலான திரிபோஷா பக்கெற்றுக்களை மீட்டுள்ளனர்.

இதில்கைதுசெய்தவர்களைநேற்று (திங்கட்கிழமை)மட்டக்களப்புநீதவான் நீதிமன்றில்ஆஜர்படுத்தபடவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# உரும்பிராயில் குழு மோதல்: மூன்று இளைஞர்கள் காயம்

தீபாவளி தினமான ஞாயிற்றுக்கிழமை இரவு இரு இளைஞர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் மூன்று இளைஞர்கள் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

யாழ்ப்பாணம் - பலாலி வீதியில் உரும்பிராய் சந்திக்கு அருகில் இடம்பெற்ற குறித்த மோதல் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

உரும்பிராய் சந்திக்கு அருகில் இளைஞர் குழு ஒன்று வீதியில் நின்றுள்ளது. அதன் போது வீதியில் கன ரக வாகனத்தில் சென்ற ஏழாலை பகுதியை சேர்ந்த இளைஞர்களுடன் முரண்பாடுஏற்பட்டு, இருகுழுவினரும் வீதியில் மோதிக்கொண்டனர்.

அதன் போது அவர்கள் பயணித்த கனரக வாகனமும் சேதமாக்கப்பட்டுள்ளது. அதனை அடுத்து அவர்கள் அவ்விடத்தில் இருந்து தப்பி தமது ஊருக்கு சென்று, மேலும் சில இளைஞர்களுடன் மூன்று கனரக வாகனத்தில் உரும்பிராய் சந்தி பகுதிக்கு வந்து தம்மை தாக்கியவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இரு இளைஞர் குழுக்களும் வீதியில் மோதிக்கொண்டமையால், வீதியின் ஊடான போக்குவரத்து ஒரு சில மணி நேரம் தடைப்பட்டு இருந்தது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் பொலிஸார், சம்பவ இடத் திற்கு விரைந்த போது , பொலிஸாரை கண்டதும் மோதலில் ஈடுபட்ட நபர்கள் அவ்விடத்தில் இருந்து தப்பி சென்றுள்ளனர்.

அதேவேளை மோதலில் காயமடைந்த மூன்று இளைஞர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளநிலையில், கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# பொதுநலவாய உள்ளூராட்சி மாநாட்டில் பங்கேற்க ஊவா மாகாண ஆளுநர் ருவாண்டாவுக்கு விஜயம்

உள்ளூராட்சி நிறுவனங்களை நடைமுறைப்படுத்தும் போது எழும் பிரச்சினைகள் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில், எதிர்காலத்தில் எதிர்கொள்ளப்போகும் சவால்களை கவனத்தில் கொண்டு 'உள்ளூராட்சி நிறுவனங்களின் மீள் தன்மையைச் சிறந்த முறையில் உருவாக்குதல்' எனும் தொனிப்பொருளின் கீழ் ருவாண்டா குடியரசில் நடைபெறும் 'பொதுநலவாய உள்ளூராட்சி மாநாடு 2023'இல் கலந்துகொள்வதற்காக ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் ருவாண்டாவுக்கு பயணமாகியுள்ளார்.

பல நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கும் இந்த மாநாடு, ருவாண்டாதலைநகர்கிகாலியில் இன்று(செவ்வாய்க்கிழமை)முதல் வெள்ளிக்கிழமை 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

பிரதமர்தினேஷ்குணவர்தனவின் வேண்டுகோளுக்கிணங்க, இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி,ஊவாமாகாணஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் இந்த மாநாட்டில்கலந்துகொள்ளவுள்ளார்.

இதன்போது ஆளுநர் விசேட உரையொன்றைநிகழ்த்தவுள்ளார்.

இந்த மாநாட்டில் மேற்கொள்ளப்படும் பரிந்துரைகள் 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் முன்வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# பொதுஜன பெரமுன அரசின் நிதியமைச்சரே ஜனாதிபதி

## என்கிறார் நாமல்

இந்த வருட வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட பல விடயங்கள் கடந்த வரவு - செலவுத் திட்டத்திலும் முன்மொழியப்பட்டதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் என்ற வகையில் நேற்று (திங் கட்கிழமை) தனது வரவு - செலவுத்திட்ட உரையைச் சமர்ப்பித்திருந்தார்.

இதனையடுத்து நாடாளுமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முதல் பார்வையில் கடந்த பட்ஜெட்டிலும் பல விடயங்களை முன்வைத்துள்ளார். அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று தெரிகிறது. எனவே மீண்டும் அவை முன்வைக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் நிதியமைச்சராக அவர் வந்துள்ளார். அப்படியானால், பட்ஜெட் முன்மொழிவுகளில் எங்கள் கொள்கைகள் இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (05)

## ஒட்டுமொத்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரார்த்தனை செய்யவேண்டும் என்றளவுக்கு போதிதனைகளைச் செய்தார். ஆனால் தற்போதைய ஜனாதிபதி பிரார்த்தனை செய்ய வேண்டியவர்களுக்குபிரார்த்தனை செய்யாமல் தாழ்த்தப்பட்ட பிரிவினரின்ஆணையைப்பெற்றுக் கொண்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெறுவதற்கான ஒப்பந்தத்தின் வருவாய் ஈட்டுவதற்கான இலக்குகளை நிறைவு செய்ய முடியாததால், இரண்டாவது கடன் தொகை கிடைக்காததன் அடிப்படையில்சில்லறைத்தனமான வரவு செலவுத் திட்டம் ஜனாதிபதி தலைமையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதுநாட்டு மக்களை ஏமாற்றும் முயற்சியாகஉள்ளது.,வரவுசெலவுத் திட்டத்தில் நரகம் பற்றி பேசினாலும், ஆட்சியாளர்கள் இறை லோகத்தில் உள்ளனர். இந்த வரவு செலவுத் திட்டத்தில் உழைக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் திட்டம் பற்றி பேசும் முன், சிந்திக்க வேண்டும்.

2022 வரவு செலவுத் திட்ட பிரேரணையில் எத்தனை விடயங்களை நிறைவேற்ற முடிந்தது? இந்த ஆட்சியாளர்கள் முன்வைக்கப்படம்வரவுசெலவுதிட்ட பிரேரணையில் பெருமளவிலான விடயங்களை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது.

அத்துடன் நாடாளுமன்றத்தின் கௌரவத்துக்கும் வரவு செலவுத் திட்டம் மூலம் சவால் விடப்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவை 7000இலிருந்து 17000ஆக அதிகரிப்பதற்கான பிரேரணை வரவுசெலவுத்திட்ட பிரேரணையில் இருந்த போதிலும் அது 7500 முதல் 10000 வரை இருக்கும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்ட உரையின் சில அம்சங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுவதற்கு முன்னர் ஊடகங்களுக்குவழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாடாளுமன்றத்தின் கௌரவத்துக்கு சவால் விடுக்கப்பட்டது.இதுநாட்டுமக்களை ஏமாற்றும் ஊடக நிகழ்ச்சி என எதிர்க்கட்சித் தலைவர் திரு.சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

வரவுசெலவுத்திட்டஉரையின்படி ஆட்சியாளர்களுக்கு தெய்வீக உலகமும், நாட்டு மக்களுக்கும் நரகமும்காட்டப்பட்டுள்ளது. அரசிடம் பணமில்லாததால் ஏப்ரல் மாதம் முதல்வாழ்க்கைச்செலவுத்தொகை வழங்கப்படும். எனவே. மேலும் மக்களுக்குஇடையூறுஏற்படக்கூடாது என்றும் கூறப்பட்டுள்ளது.

மொத்த சனத்தொகையில் 30 இலட்சத்தில் இருந்து 70 இலட்சமாக வறுமை அதிகரித்துள்ளது. நிவாரணம் வழங்குவதுகூட அறிவியலற்ற வேலைத் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. அதடின் படைபியல் இதுவொரு பயனற்ற வரவு செலவுத்திட்டமாகும். ஆகவே எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் இரண்டாம் வாசிப்பின் மீதான விவாதத்தில்சரியானகருத்துக்களும், வழிகாட்டல்களையும்வழங்குவதற்கு தயராகி உள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## பல்கலைக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் தற்போது இயங்கிவரும் ஒன்பது மாகாண சபைகளுக்கும் மத்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கும் தொழிற் கல்வி நிறுவனங்களை கையளிப்பதற்கும் மாகாண சபைகளில் தொழிற் கல்விக்கான மாகாண சபைகளை நிறுவுவதற்கும் நான் முன்மொழிகிறேன். எதிர்காலத்தில், தொழிற்கல்வி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கும், உரிய முறையில்மாகாணசபைகள் மூலம்தொழிற்கல்வி மற்றும் பயிற்சிசெயல்பாடுகள்மற்றும் சேவைகளை வழங்குவதற்கும் தேவையான வழிகாட்டுதல்கள் மட்டுமே அரசாங்கத்தால் வழங்கப்படும்.

தொழில்நுட்ப தொழில் திறன்களை மேம்படுத்துவதற்கு ஒரு நிதியத்தை தாபிப்பதற்கும் தேவையானஒழுங்குகள்மேற்கொள்ளப்படும். இந்த நோக்கத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடனான கலந்துரையாடல் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்த நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளுக்கு மேலதிகமாக, இந்த நிறுவனங்களுக்கு 2024 ஆம் ஆண்டிற்கு ரூபா 450 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்குநான்முன்மொழிகிறேன் என்றும் தெரிவித்தார்.

தனியார் பல்கலைக் கழகங்களைத் தொடங்குவதற்கும் அனுமதி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரச சார்பற்ற பல்கலைக் கழகங்களை ஒழுங்குபடுத்துவதற்கான சக்திவாய்ந்த சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் தொகுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, உலகிலுள்ள எந்தவொரு அங்கீகரிக்கப்பட்டபல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனமும் இலங்கையில் பல்கலைக்கழகங்களைநிறுவஅனுமதிக்கிறோம். இதன்மூலம்உயர்தரப்பரீட்சையில் சித்தியடையும் ஒவ்வொரு மாணவனும் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறுவதற்கும், வெளிநாட்டுக் மாணவர்கள் மூலம் அந்நியச் செலாவணியைப் பெறுவதற்குமான வாய்ப்புகளை உருவாக்கும்.

இந்த அரசசார்பற்ற பல்கலைக்கழகங்களில் கற்கும் மாணவர்களுக்கு கடன் வசதிகள் வழங்கப்படுகின்றன. தற்போது நடைமுறையில்உள்ளவட்டியில்லா கல்விக் கடன் திட்டத்திற்கு மேலதிகமாக,வணிகவங்கிகள்மூலம் மானியத்துடன் கூடிய மாணவர் கடன்திட்டத்தை செயல்படுத்த நான் முன்மொழிகிறேன்.அவர்களுக்கான தொழில்வாய்ப்புகள் கிடைத்தவுடன் கடனைதிருப்பிச்செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் - என்றும் அவர் தெரிவித்தார்.

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிக்கப்படுகிறது என்று அறிவித்தார்.

அதன்படி,அரசபணியாளர்களின் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ரூ. 17,800 ஆக அதிகரிக்கின்றது. இந்த அதிகரிப்பு அடுத்த ஏப்ரல் மாதம் முதலே வழங்கப்படும்

ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான வாழ்க்கைச் செலவு நிலுவைத் தொகை அடுத்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தவணை முறையில் வழங்கப்படும்.

தொழிற்சங்கங்கள் 20 ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்புக் கோரி வந்த நிலையில் அதன் அரைவாசியே இந்த ஆட்சியால் வழங்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

## பட்ஜெட்....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

பராமரிப்பு சேவை மற்றும் சுற்றுலாதுறை உள்ளிட்ட திறன் பற்றாக்குறையுள்ள முறைகளுக்குத் தேவையான பயிற்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

56. அரச துறை மற்றும் தனியார் துறையில் பணிபுரியும் மூத்தவர்களுக்கு நவீன அறிவைப் பெற்றுக்கொடுக்க பாடநெறியொன்றை வழங்கத் தேவையான தொழில்நுட்ப மற்றும் பௌதீக நவீனமயமாக்கல் பணிகளுக்காக இலங்கை மன்றத்திற்கு 150 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

57. இலங்கையில் ஆங்கில எழுத்தறிவை விஸ்தரிக்க தேசிய வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, அந்தத் திட்டத்தை ஆரம்பிக்க 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

58. சுரக்ஷா சிசு காப்புறுதித் திட்டத்தைமீண்டும்செயல்படுத்துதல்.

59. ஔடத கொள்முதல் தொடர்பில் விசேட வழிகாட்டு தல்களை வழங்குதல் மற்றும் அதற்கென தனியான நிறுவன மொன்றை நிறுவுதல்.

60. மருத்துவ மற்றும் சுகாதார ஆராய்ச்சிக்கான முதலீட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல் மற்றும் 75 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் உட்கட்டமைப்பு ஆய்வக வசதிகளை வலுப்படுத்தும் முதற்கட்டப்பணிகளைஆரம்பித்தல்.

61. தேசிய ஔடத தர ஆராய்ச்சி ஆய்வு கூடத்தின் வசதிகளை மேம்படுத்த 2024 ஆம் ஆண்டில் 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

62. பதுளை போதனா வைத்தியசாலையில் இருதய மீளுயிர்ப்புச்சுவாசசிகிச்சைபிரிவை (ளீழிஷ-ஷ்லிஞ்றியிதுலிஜழிஷத் யூளவிற்வி உஷ்மிழிமிஷ்லிஜ ஷீஜஷ்மி) நிறுவத் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்ய 300 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

63. வைத்திய நிபுணர்கள் மற்றும் தரம் நிலை மருத்துவர்கள் ஆகியோருக்கு பொருத்தமான பதவி உயர்வு முறையொன்று அறிமுகப்படுத்துதல்.

64. மருத்துவர்களின் தொழில்முறையை மேம்படுத்தும் பட்டப் பின்படிப்பு வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்.

65. சுதேச மருத்துவத் துறையை வலுப்படுத்தவும் பிரபலப்படுத்தவும் நடவடிக்கை எடுத்தல்.

66. சர்வதேச கேள்வியுள்ள மருத்துவ தாவரங்களுக்கு சுகாதார அமைச்சின் ஆயுர்வேத ஔடதக் கூட்டுத்தாபனத்தின் சுதேச மருத்துவ பிரிவின் மேற்பார்வையின் கீழ் முதலீட்டாளர்களுக்கு வசதிகள் வழங்குதல்.

67. இலங்கையின் ஆரோக்கியக் கருத்திட்டத்தின் பிரகாரம், சுற்றுலா விடுதிகள் மற்றும் ஓய்வு விடுதிகளில் ஆயுர்வேதசிகிச்சைநிலையங்களை அமைக்க 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

68. விவசாயநவீனமயமாக்கல் திட்டங்கள், சிறு விவசாயிகளின் விவசாய கூட்டு முயற்சிகள் மற்றும் பயிர் பல்வகைப்படுத்தல் ஆகியவற்றிற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், மீன்பிடித் தொழிலை மேம்படுத்த நவீன தொழில்நுட்ப அறிவை மீன்பிடித் தொழிலுக்குப் பயன்படுத்தவும் விசேட திட்டம் ஆரம்பிக்கப்படும்.

69. விவசாயம் மற்றும் மீன்பிடித்துறைஅபிவிருத்திகளுக்கு உதவ மாகாண விவசாய மற்றும் மீன்பிடிநவீனமயப்படுத்தல்சபைகள் நிறுவப்படும்.

70. அனைத்து கமநல சேவை நிலையங்களும் விவசாய நவீனமயமாக்கல் மத்திய நிலையங்களாக தரமுயர்த்தப்படும். 2024 பெரும்போகத்தில் இருந்து தனியார் துறையினர், விவசாயிகள் மற்றும்விவசாயத்துறைநிபுணர்கள் அடங்கிய கூட்டு திட்டத்தை செயல்படுத்த 2500 மில்லியன் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கும்.

71. எந்தவொருபயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்படாத நிலங்களில் ஏனைய பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்கனவே உள்ள சட்டத் தடைகளை நீக்குதல்.

72. பெருமளவிலான விவசாய நடவடிக்கைகளுக்காக பொது நிறுவனங்கள் மற்றும் மகாவலி 'பு' மற்றும் 'ய' வலயங்கள், காணி சீர்திருத்த ஆணைக்குழு போன்றவற்றிற்கு சொந்தமான 03 இலட்சம் ஏக்கர் நிலம் ஒதுக்கப்படும்.

73. நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் 35 வீதம் பெறப்படும் வடக்குக்கடலில்மீன்பிடித்துறையை மேம்படுத்த 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

74. நன்னீர் மீன்பிடி தொழில் அபிவிருத்திக்காக 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

75. சிறு குளங்களை புனரமைக்கும்பொறுப்பை அந்தந்த பகுதிகளில் உள்ள விவசாய அமைப்புகளிடம் ஒப்படைத்தல்.

76. பால் உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்க்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள தரப்பினரின் மீள்நிதியளிப்புகடன்திட்டமொன்றைச் செயல்படுத்துதல்.

77. தேசியகால்நடைஅபிவிருத்தி சபைக்கு சொந்தமான அனைத்து பண்ணைகளையும் திறம்பட பயன்படுத்தி தனியார் துறையின் பங்களிப்புடன்05வருடங்களில்பால் உற்பத்தியை53%அதிகரிப்பதற்கான விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

78. நிர்மாணத் துறையை மேம்படுத்த புதிய திட்டம் செயல்படுத்தப்படும். முன்னோடித் திட்டமாக வெளிவிவகார அமைச்சின் புதிய கட்டிடத் தொகுதி நிர்மாணிக்கப்படும்.

78. கொழும்பு நகரில் உள்ள தோட்டக் காணிகளில் பெரிய வீடுகள் மற்றும் வணிக வளாகங்களை நிர்மாணிக்கும் பொறுப்பு, புதிய வேலைத்திட்டமாக நிர்மாணத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

79. சிறந்த சுற்றுலாத் தலமாகவும் கவர்ச்சிகரமான முதலீட்டு மையமாகவும் மீண்டும் நாட்டின் நிலையை உயர்த்துவதற்கான தேசிய முயற்சிகளை நடைமுறைப்படுத்த 100 மில்லியன் ஒதுக்கீடு.

80. இலங்கையின் அமைவிடத்தை பொருளாதார ரீதியான பாரிய பெறுமதியாக மாற்றுவதற்கு சகலதரப்பினரையும் உள்ளடக்கிய தேசிய திட்டமிடல் கொள்கையை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல்.

81. ஆண், பெண் சமத்துவத்தின் அடிப்படையில் வரவு செலவுத் திட்ட முறையை அறிமுகப்படுத்தல், அது தொடர்பான சட்டங்களைத் தயாரித்தல் மற்றும் பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டங்களை அறிமுகப்படுத்துதல்.

82. கைத்தறி நெசவுத் தொழில்துறையில் ஈடுபட்டுள்ள பெண்கள் மற்றும் இளைஞர் சமூகத்தைப் பொருளாதார ரீதியாக வலுவூட்டும் விசேட வேலைத்திட்டத்திற்காக 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.

83. வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் வீடற்ற குடும்பங்களின் மீள்குடியேற்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய 2000 மில்லியன் ஒதுக்கப்படும். அத்துடன், வீடமைப்புத் திட்டத்தை துரிதப்படுத்தவும், வீடுகள் இன்றி தவிக்கும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கவும் 500 மில்லியன் ரூபா மேலதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

84. வடக்குகிழக்கில்மோதலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், காணாமல் போனோரின் உறவினருக்கும் இழப்பீட்டுத் தொகையை துரிதமாக வழங்க பன்முக நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தில் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள 1500 மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமாக மேலும் 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

85. யாழ்ப்பாணப்பிரதேசத்தின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில், பாலியாறு நீர்த் திட்டத்தின் ஆரம்பப் பணிகள் 2024 ஆம் ஆண்டின் முதற்பாதியில் ஆரம்பிக்கப்படும். அதற்காக 250 மில்லியன் ரூபா வழங்கப்படும்.

86. பூநகரி நகர அபிவிருத்திக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

87. இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள காலி மாவட்ட கேட்போர் கூடத்தின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிக்க அரச பங்களிப்பாக 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

88. பண்டாரவளை பொருளாதார மத்திய நிலையத்தை நிர்மாணிப்பதற்கும் அதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கும் அரசாங்க பங்களிப்பாக 250 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

89. கீழ் மல்வத்து ஓயா திட்டத்திற்குஏற்கனவேவழங்கப்பட்ட வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டிற்கு மேலதிகமாக மேலும் 2500 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

90. மகா விகாரை பல்கலைக்கழகத்தை ஸ்தாபிக்கும் நிர்மாணப் பணிகளின் பணிகளின் ஆரம்ப கட்டமாக 400 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படும்

91. அநுராதபுரத்தில் நவீன சர்வதேச பௌத்த நூலகத்தை நிறுவும் வேலைத்திட்டத்தில் 2024 ஆம் ஆண்டிற்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

92. இலங்கையின் பௌத்த நாகரீகத்தை மையமாகக் கொண்ட ஆராய்ச்சி மற்றும் கலாசார மேம்பாட்டுகளுக்காக கண்டியில் இலங்கைபௌத்தஅருங்காட்சியகம் ஒன்று நிறுவப்படும். அதன் நிர்மாணப் பணிகளுக்காக 2024 ஆம் ஆண்டிற்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படும்.

93. நாடளாவிய ரீதியில் பாடசாலை கிரிக்கட் அபிவிருத்திக்காகவும், மாகாண மட்டத்தில் வீரர்களுக்குத் தேவையானவசதிகளைஏற்படுத்திக் கொடுக்கவும், இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் 1.5 பில்லியன் ரூபா ஒதுக்கப்படுவதுடன், நிதி ஒதுக்கீடுகளைவழங்கும்போதுவசதி குறைந்த பாடசாலைகள் மற்றும் மாகாணங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

94. 2024ம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் டிஜிட்டல் மயமாக்கப்படும்.

95. மேல் மாகாணத்தில் போக்குவரத்து சபையுடன் இணைந்து 200 மின்சாரப் பேருந்துகளை இயக்குவதற்கான முன்னோடித் திட்டம்.

96. கண்டி பல்வகை போக்குவரத்து நிலையத் திட்டம் 2024 ஜனவரியில் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், அதன் பிரவேசவீதிகளின்அபிவிருத்திக்காக 1.5 பில்லியன் ரூபா ஒதுக்கப்படும்.

97. அனுராதபுரம் முதல் மிஹிந்தலை வரையிலான ரயில் பாதையின் முழுமையான புனரமைப்புப் பணிகள் 2024 ஜனவரிக்குள் நிறைவடைவதோடு, போக்குவரத்துப் பொருளாதார மற்றும் கொள்கலன் மற்றும் சேமிப்பு வசதிகளுடன் கூடிய மிஹிந்தலை ரயில் நிலைய வளாகத்தை அடிப்படையாகக் கொண்டதிட்டத்திற்கு200மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு தனியார் துறையினரும் பங்களிப்பு செய்கின்றனர்.

98. மாகாண சபைகளால் சேகரிக்கப்படும் வருமானத்தை மாகாணத்தின் அபிவிருத்திக்கான மூலதனச் செலவீனமாகப் பயன்படுத்துவது தொடர்பில் முன்மொழிவு

99. மாகாண சபைகளால் ஏற்றுமதிக் கைத்தொழிலை ஊக்குவிக்க முன்மொழியப்பட்டதோடு 1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கைத்தொழில்ஊக்குவிப்புச்சட்டத்தின் கீழ் கைத்தொழில்கள் தொடர்பான மாகாண சபைகளின் அதிகார வரம்புகள் திருத்தப்பட்டுள்ளன.

100. உள்ளூராட்சி சபைகளில் சுயநிதி முகாமைத்துவம் மேற்கொள்ள ஊக்குவிக்கப் படுகிறது.




காலைக்கதிர் Kalaikkathir

# கிளிநொச்சியில் கடுமையான மழை: மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு





கிளிநொச்சி மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை பெய்த கடும் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

கிளிநொச்சி நகர் பகுதிகளில் உள்ள பிரதான வீதிகள் மற்றும் உள்ளூர் வீதிகளில் மழை நீர் குறுக்கறுத்து பாய்ந்து ஓடுவதால் வீதியில் பயணிப்போர் கடும் சிரமத்திற்கு மத்தியில் செல்வதை அவதானிக்க முடிந்தது.

பெரும்போக நெற்செய்கை நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ள நிலையில் விவசாயிகள் கடும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதுடன், சிறுதானியப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் பாதிப்படைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## நீதியரசர்கள் வெற்றிடங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட பெயர்கள்

மேன்முறையீட்டு நீதிமன்றின் இரண்டு நீதியரசர்களின் வெற்றிடங்களைநிரப்புவதற்குமூன்று பெயர்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான மேல் நீதிமன்றத்தின் மூத்த நீதிபதிகளான கிஹான் குலதுங்க மற்றும் தமித் தோட்டவத்த ஆகியோரை பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய பரிந்துரைத்துள்ளார்.

சட்டமா அதிபர் சஞ்சய ராஜரத்தினம், வெற்றிடத்துக்காக மூத்த பிரதி மன்றாடியார் நாயகம் மஹேன் கோபால்வாவை பரிந்துரைத்துள்ளார்.

இவற்றில் இரண்டு பெயர்களை அரசமைப்பு பேரவையின் ஒப்புதலுக்காக ஜனாதிபதி விக்ரமசிங்க சமர்ப்பிக்கவுள்ளார்.

இதேவேளை, நீதியரசர் புவெனக அலுவிஹாரே ஓய்வுபெறவுள்ள நிலையில், உயர் நீதிமன்றில் வெற்றிடமொன்று ஏற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## நாட்டில் சம்பள அதிகரிப்பு மாத்திரம் போதாது பொருள்களின் விலைகளும் குறைக்கவேண்டும்

### ரோஹித அபேகுணவர்தன தெரிவிப்பு

அரச உத்தியோகத்தர்கள் மாத்திரமின்றி ஏனைய மக்களும் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர். எனவே பொருள்களின் விலைகளும் குறைக்கப்பட வேண்டும்.

இந்தவரவு-செலவுதிட்டம்மக்களுக்கு சிறப்பானதாக அமைய வேண்டும் என்று இறைவனை பிரார்த்திப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவி-யலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

அரசஉத்தியோகத்தர்களுக்கு மாத்திரமின்றி நாட்டு மக் கள் அனைவரும் பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

எனவே அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை அதிகரிப்பதை விட பொருள்களின் விலைகளைக் குறைப்பது சிறந்ததாகும்.

அதனை விடுத்து சம்பளத்தை அதிகரிப்பதாயின் அரச உத்தியோகத்தர்களது சம்பளம் மாத்திரமின்றி, தனியார் துறையினருக்கும் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்.

சரியாகநோயைஇனங்கண்டு அதற்கு சிகிச்சையளிப்பதற்கான யோசனையையே நாம் அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளோம். எமது பரிந்துரைகளை முன்வைத்திருக்கின்றோமே தவிர, பொதுஜன பெரமுன சார்பில் வரவு-செலவுத்திட்டம்தொடர்பில் விசேட கலந்துரையாடல்கள் எவற்றையும் முன்னெடுக்கவில்லை. எவ்வாறிருப்பினும் இந்த வரவு-செலவுத்திட்டம்மக்களுக்கு சிறந்ததாக அமைய வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும். - என்றார். (05)

## கொழும்பில் பிரபல பாடகியின் வீட்டுக்குள் நுழைந்த மர்மநபர்



கொழும்பின் புறநகர் பகுதியான மாலபே பகுதியில் உள்ள பிரபல பாடகி நிரோஷா விராஜினியின் வீட்டுக்குள் அத்துமீறிநுழைந்தகுற்றச்சாட்டில்மர்ம நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் கடுவெல நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் சந்தேகநபரை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவெல பதில் நீதவான் கமல் விஜேசிறி உத்தரவிட்டுள்ளார்.

இவர் இதற்கு முன் பலமுறை பாடகியின் வீட்டுக்குள் நுழைய முயன்றுள்ளார்.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய நீண்ட விசாரணைகளை மேற்கொண்ட மாலபே பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரசாத் ரத்நாயக்க தலைமையிலான குழுவினரால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (05)

## ராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மீதான 3 மனுக்கள் மீது ஜனவரி 31இல் விசாரணை



நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர் சனத் நிாந்தவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மூன்று மனுக்களை ஜனவரி 31ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (திங்கட்கிழமை) உத்தரவிட்டுள்ளது.

சோபித ராஜகருணா மற்றும் ஆசா தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

இது தொடர்பில் முன்வைக்கப்பட்ட இரு தரப்பு விவாதங்களையும் பரிசீலித்த மேன்முறையீட்டு மனு மீதான விசாரணையை ஜனவரி 31 ஆம் திகதி நிர்ணயம் செய்து உத்தரவிட்டது. (05)

## சர்வதேசக் கணக்கியல் நாள் நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில்



'சர்வதேச கணக்கியல் நாள்' நிகழ்வுகள் கடந்த 10 ஆம் திகதி காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள்மற்றும்வணிகபீடத்தில் நடைபெற்றன.

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் அனுசரணையுடன் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் கணக்கியல் துறையால் நடத்தப்பட்ட இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் என். கெங்காதரன், முன்னாள் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், இலங்கைபட்டயக்கணக்காளர்கள் நிறுவனத்தின் பிரதிநிதிகள் பணியாளர்கள், மாணவர்கள் , பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (05)

## 4,000 நாய்களுக்கு தடுப்பூசி வழங்கல்

### யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் சுமார் 4,000 நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன எனசுகாதாரபிரிவினர்தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாநகர சபைஎல்லைக்கு உட்பட்ட 08 பொது சுகாதார பரிசோதகர் பிரிவிலும் உள்ள வளர்ப்புநாய்கள் மற்றும் வீதியில் கட்டாக்காலி நாய்களாக திரிந்த நாய்கள் என 3 ஆயிரத்து 983 நாய்களுக்கு ஏ.ஆர். வி தடுப்பூசி செலுத்துப்பட்டுள்ளது.

அதேவேளை 290 பெண் நாய்களுக்கு கருத்தடை சத்திர சிகிச்சையும் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர். (05)

## காட்டு யானை அட்டகாசம் அச்சத்தில் அம்பாறை மக்கள்

அம்பாறை புத்தங்கல வீதியிலுள்ள கழிவு மறுசுழற்சி நிலையத்திற்கு அருகில்தனியன்யானைஒன்றுநேற்று அட்டகாசத்தில் ஈடுபட்டு வந்ததாகவும், வீதியில் செல்வோரை அச்சுறுத்தி வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த யானையை மீண்டும் காட்டுக்குள் துரத்தும் முயற்சியில் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் முயன்றுவருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறையில் அண்மைக் காலங்களில் யானை - மனித மோதலால் யானைகளும் மனித உயிர்களும் இழக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் சடுதியாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## வடமாகாண ஆளுநர் சாள்ஸை சந்தித்தார் ஜப்பான் தூதுவர்

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் ஜப்பான்தூதுவர் மிசுகோஷி ஆகியோருக்கு இடையில் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில்உள்ளஜப்பான் தூதுவரின் இல்லத்தில் விசேட சந்திப்பொன்று நிகழ்ந்துள்ளது.

இந்தச் சந்திப்பில் வடமாகாணம் தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஜப்பான் அரசின் சார்பில், வடபகுதியின் வளர்ச்சிக்கு முழு ஒத்துழைப்பு தொடர்ந்தும் வழங்கப்படும் என்று தூதர் உறுதி அளித்தார் என்று வட மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்ட உரை

**வலுவான எதிர்காலத்திற்கான முன்னுரை என்ற பெயரில் நிதி அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளமன்றத்தில் முன்வைத்த 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தையொட்டி ஆற்றிய உரையின் முழு வடிவம் இங்கு தரப்படுகின்றது.**



### முன்னுரை

புத்தரின போதனைகளில் சமநிலை வாழ்வு என்று ஒரு சொல் உள்ளது. புத்தர் வியாக்கபஜ்ஜ சூத்திரத்தில் சகவாழ்வைப் பற்றி போதித்தார். அதற்கேற்ப வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பது பற்றி சமநிலை வாழ்வு மூலம் எமக்குக் கற்றுத் தருகின்றது. குறைந்த வருமானத்தில் ஆடம்பர வாழ்க்கை வாழ்வது தவறு என்றும், உண்மையான புரிதல் உள்ள ஒருவர் வரவு செலவை சமப்படுத்தித் தனது வாழ்க்கைத் தரத்தை வடிவமைக்கவேண்டும் என்றும் சுட்டிக்காட்டுகின்றது. வருமானத்திற்கு ஏற்ப செலவுகள்செய்யப்படவேண்டும். அதைத்தான் பௌத்த பொருளாதார தத்துவம் நமக்குக் காட்டுகிறது. ஆனால், சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளாக நாம் வருமானத்துக்கு ஏற்ப செலவு செய்யவில்லை. இதை நான் கூறும்போது, இந்நாட்டு அரசாங்கங்கள் வீண் செலவு செய்துள்ளன என்று நினைக்கலாம். அரசாங்கங்கள் மட்டுமல்ல. இந்த நாட்டில் உள்ள நாம் அனைவரும் அந்தத் தவறைச் செய்துள்ளோம்.

தொழில்வாய்ப்புகளை வழங்கியமை, சம்பளம் அதிகரித்தமை, இலவசமாக அரிசி வழங்கியமை, சலுகைகள் வழங்கியமை மற்றும்அரசநிறுவனங்கள்பராமரிக்கப்பட்டமை அனைத்தும் கடன் வாங்குவதன் மூலமோ அல்லதுபணத்தைஅச்சிடுவதன்மூலமோமேற் கொள்ளப்பட்டன. அரசாங்க வேலைவாய்ப்பு வழங்குதல், அரசாங்க வளங்களைப் பாதுகாத்தல், நிவாரணப்பொதிகள்வழங்குதல், பொருட்களின் விலைகளைக் குறைத்தல், கூடுதலான சம்பளம் வழங்குதல் போன்ற வாக்குறுதிகளின் மூலம்தான் தேர்தல்கள் வெற்றிகொள்ளப்பட்டன. இவ்வாறான வருமானமல்லா சுகவாழ்வு வாழ்வதற்கு நாம் நாட்டுக்கும் உலகத்திற்கும் கடன்பட்டோம்.

புத்தர்சாமஞ்ஞபலசூத்திரத்தில், கடன்களை முதலீட்டிற்காக எடுக்க வேண்டுமேயன்றி நுகர்வுக்காக அல்ல என்று சுட்டிக்காட்டுகிறார். ஆனால் நாம் நுகர்வுக்காக கடன் வாங்கினோம். இவ்வாறு கடன் வாங்குவதும் வட்டி செலுத்துவதும் மிகவும் ஆபத்தானது என அங்குத்தர நிபாதவின் இண சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சமநிலைவாழ்வு மற்றும் பௌத்த பொருளாதார தத்துவத்தைப் புறக்கணித்ததன் விளைவாக, சுதந்திரமடைந்து 75 ஆண்டுகளுக்குப் பின்னரும், நாம் பெரும் ஆபத்திற்கு உள்ளாகினோம். நமது பொருளாதாரம் முற்றிலும் வீழ்சிசியடைந்தது. வங்குரோத்து அரசாக மாறியது. இரண்டு அல்லது மூன்று லீட்டர் பெற்றோலுக்கு சண்டைபிடித்தோம். எரிவாயுதாங்கிகளுக்காக வாக்குவாதம்செய்தோம். ஒருநாளைக்குபத்து பதினைந்து மணித்தியாலங்கள் இருட்டில் இருந்தோம். பல்பொருள் அங்காடிகள் விறகுக்கட்டுகளை விற்கத் தொடங்கின. வியாபாரங்கள் விழ்ச்சியடைந்தன. சுற்றுலாத் துறை விழ்ச்சியடைந்தது. வேலைவாய்ப்புகள் இல்லாமல்போனது. அத்தியாவசிய பொருட்கள் இல்லாமல் போனது. எல்லா இடங்களிலும் வரிசைகள். பொது போக்குவரத்து சேவைகள் முடங்கின. 72 பள்ளிகள் மூடப்பட்டன. பரீட்சைகளை நடத்த முடியவில்லை. உரத் தட்டுப்பாட்டால் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டது. எமக்கு எஞ்சியது நாடு அல்ல, ஒரு நரகம்.

இந்த நரகத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றும் சவாலை யாரும் ஏற்க விரும்பவில்லை. அந்தரே கல்லை தூக்கியது போன்று பல்வேறு காரணங்களைக் கூறி சவால்களைத் தட்டிக்கழித்தனர். சிலர் ஜாதகம் பார்த்தார்கள். மற்றவர்கள் அரசமைப்பு ரீதியாக நிறைவேற்ற முடியாத நிபந்தனைகளை முன்வைத்தார்கள். இந்தப் பின்னணியில்தான் நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்றேன். அந்த நேரத்தில் இறக்கும் தருவாயில் இருந்த ஒரு நோயாளியை நான் ஏற்றுக்கொண்டேன். நரகமாகமாறியிருந்தஒரு நாடு. தடம்புரண்டுநாலாபுறமும்வீழ்ந்துகிடந்த பொருளாதாரம். பல்வேறு தடைகள் மற்றும் சிரமங்களுக்கு மத்தியில் முறையான மற்றும் முறைமைவாய்ந்த திட்டத்தின் கீழ் நாங்கள் இரவு பகல் பாராது வேலைசெய்ய ஆரம்பித்தோம். நாட்டை நரகத்திலிருந்து காப்பாற்றுவதற்குப் போராடினோம். அரச உத்தியோகத்தர்கள் அயராது உழைத்து நாட்டை மீட்டெடுக்கும் முயற்சிக்கு உதவி செய்தனர். எங்களுடைய அனைத்து நட்பு நாடுகளும் தங்களால் இயன்றவரை எங்க ளைக் கவனித்துக்கொண்டன. நிவாரணங்களை வழங்கின. அப்போது, விரிவான சீர்திருத்தத் திட்டத்தின் மூலம் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும், பொருளாதாரத் துயரத்திலிருந்து மக்களைக் காப்பாற்றவும் கடுமையாகப் பாடுபடுவேன் என்று உங்கள் அனைவருக்கும் பகிரங்கமாகக் கூறினேன். இந்த முயற்சிக்கும் அர்ப்பணிப்புக்கும் பங்களிப்புச்செய்தது நான் மட்டுமல்ல. அதற்காக இந்நாட்டு மக்கள் கடுமையாக உழைத்தனர். அதற்காக அர்ப்பணித்தனர். அவ்வாறு செய்யாமல் நாட்டைப் பின்னுக்கு தள்ளுவதற்கு முயன்றவர்களும் இருந்தனர். ஆனால் தற்போது அவர்களின் எதிர்பார்ப்புகளை தகர்த்து நாட்டில் ஓரளவு ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முடிந்துள்ளது.

கடந்த ஒரு வருடமாகத் தடம் புரண்டிருந்த இலங்கையின் பொருளாதாரத்தை தற்போது மீண்டும் சீரான பாதைக்கு எம்மால் கொண்டு வர முடிந்துள்ளது. அதற்காக ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் போன்ற பல தற்காலிக நடவடிக்கைகளை எடுத்தோம். ஆனால் இதுபோன்ற கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்வது பொருளாதாரத்திற்கு நல்லதல்ல. இப்போது நாங்கள் நீண்ட கால மற்றும் நிலையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நேரமாகும். அப்போதுதான் தடம் புரண்ட பொருளாதாரம் மீண்டும் சீரான பாதையில் செல்வதற்கு வழிவகுக்கும். அப்போதுதான் இறப்பிலிருந்து காப்பாற்றப்பட்ட பொருளாதாரத்தை முழுமையாக குணமடையச் செய்ய முடியும். இது எளிதான பணி அல்ல. ஆனால் நம்மால் அதனைச் செய்ய முடியும். நாம் செல்லும் பாதையில் மென்மேலும் புதிய எண்ணக் கருத்துக்களால் போசிக்கப்பட்டு தொடர்ந்து சென்றால் இந்தச் சவாலை நம்மால் வெற்றிகொள்ள முடியும். சமநிலைவாழ்வு என்ற கருத்திற்கு அப்பால் சென்று அரசியல் ஆதாயம் அடையக்கூடிய விடயங்களில் மட்டும் கவனம் செலுத்தி தீர்வுகளைக் காண முயல்வது தோல்விக்குரியது என்பதை வரலாறு நிரூபித்துள்ளது. தோல்வி அடைவேன் என்று தெரிந்தும் ஏன் அதையே மீண்டும் மீண்டும் செய்கிறீர்கள்? 73 தேவதைக் கதைகளைச் சொல்வதால் நாடு முன்னேறாது. கனவு மாளிகைகளிலிருந்து வாக்குறுதிகளை அளிப்பதன் மூலம் ஒரு நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் அளித்த தேர்தல் வாக்குறுதிகளால் நாடு நீண்ட காலமாக பின்னோக்கிச் சென்றது. அதன் இறுதி முடிவு நாடு வங்குரோத்து நிலையை அடைவதுதான் என்பது நம் கண் முன்னே உறுதி செய்யப்பட்டது. ஆனால் துரதிஷ்டவசமாக, நாட்டில் உள்ள சில குழுக்கள் இந்த நிலைமையை இன்னும் புரிந்துகொள்ளவில்லை. அரசியல் நோக்கத்திற்காக மாயைகளைப் பரப்புவதை நிறுத்துமாறு நான் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். நமக்கு நாமே நேர்மையாக இருப்போம். அரசியலைவிட நாட்டைப் பற்றிச் சிந்திப்போம். நாட்டை மேலே உயர்த்தி வைப்பதற்கு ஒன்றுபடுவோம். நாடு வலிமையான பின்னர், அரசியல் இலக்குகளைப் பற்றி யோசிப்போம்.

ஒரு வருடத்திற்கு முன்பிருந்ததைவிட இப்போது நம் நாட்டில் நிலைமை நன்றாக உள்ளது. நாட்டின் பொருளாதாரம் முற்றிலும் நல்ல நிலையில் உள்ளது என்று நான் கூறவில்லை. அன்று இருந்ததைவிட ஒப்பீட்டளவில் இன்று சிறப்பாக உள்ளது. சிரமங்களை எதிர்கொண்டு அந்த நிலையைப் பெற்றோம். அர்ப்பணிப்புகளைச் செய்து, துன்பங்களை எதிர்கொண்டு அந்த நிலையை அடைந்தோம். இந்தக் கடினமான பாதையில் நாம் படிப்படியாக முன்னோக்கிச் சென்றால், குறுகியகாலத்தில்நாம்ஒருசிறந்தபொருளாதார சூழலை நிச்சயமாக உருவாக்க முடியும். நாம் செல்லும் இந்தப் பாதை சரியானது என்பதை கடந்த ஆண்டைத் திரும்பிப் பார்க்கும்போது, 100% உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு லீற்றர் பெற்றோலுக்கு ஒரு மனிதனைக் கொன்ற நாடு இன்று வரிசையோ அல்லது வரையறைகளோ இல்லாமல் பெற்றோல் பெறுகிறது. எரிவாயு சிலிண்டர் ஒன்றை வாங்குவதற்கு வாரக்கணக்கில் தெருத் தெருவாக அலைந்து திரிந்த நாடு, இன்று ஒரே தொலைபேசி அழைப்பில் வீட்டுக்கு எரிவாயு சிலிண்டரைப் பெற்றுக்கொள்கின்றது. ஒரு நாளைக்கு பத்துப் பன்னிரண்டு மணித்தியாலங்கள் மின்சாரம் இல்லாமல் இருந்த நாடு இன்று தொடர்ச்சியாக மின்சாரத்தைப் பெற்று வருகிறது. பல்பொருள் அங்காடிகள் முதல் மளிகைக் கடைகள் வரை விறகுக் கட்டுகளை விற்று வந்த நாடு இன்று மாற்றமடைந்துள்ளது. அதாவது நாம் சரியான பாதையில் செல்கிறோம். எங்கள் திட்டங்கள் சரியானவை. எங்கள் உபாயத்திட்டம் சரியானது. எனவே, கடினமாக இருந்தாலும், இந்தப் பயணத்தில் நாம் முன்னோக்கிச் செல்வோம்.

இந்தப் பயணம் இதுவரை முன்னேறியிருந்தாலும், சில குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன. அவைகளை நாம் அடையாளம் கண்டுள்ளோம். நாங்கள் மிகவும் பணிவுடன் அந்தக் குறைகளையும் தவறுகளையும் திருத்திக் கொள்வதற்கு செயல்பட்டு வருகிறோம். தடம்புரண்ட பொருளாதாரத்தை மீண்டும் பாதையில் வைப்பதால் மட்டும் நாம் திருப்தியடைய முடியாது. அது மாத்திரம் நமக்கு பெரிய நிம்மதியையும் ஆறுதலையும் தரப்போவதில்லை. எங்கள் கடினமான காலம் இன்னும் முடிவடையவும் இல்லை. முழு நாடும் வெவ்வேறு வழிகளில் சிரமங்களை எதிர்கொள்கிறது. பணவீக்க வேகத்தை ஒற்றை இலக்கத்திற்குக் கொண்டு வர முடிந்தபடியினால், அதிக பணவீக்கத்தின் அழிவிலிருந்து நாட்டைக் காப்பாற்ற முடிந்தது. ஆனால் இந்த கடுமையான நெருக்கடியின் காரணமாக, அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுக்கு ஏற்றவாறு சம்பளத்தையும் வருமானத்தையும் இன்னும் அதிகரிக்க முடியவில்லை. எரிபொருள் மற்றும் மின்சார கட்டணங்கள் கடுமையாக உயர்ந்துள்ளதால் ஒவ்வொரு குடும்பமும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வரி அதிகரிக்கப்பட்டதால், தனிநபர்கள் மட்டுமின்றி, சிறு வியாபாரங்கள் முதல் பெரிய அளவிலான வணிகங்கள் வரை கடும் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளன. உற்பத்தி செலவு அதிகரித்துள்ளது.

நாட்டு மக்கள் படும் இன்னல்கள் பற்றி எங்களுக்கு நன்றாக தெரியும். நிலையான மற்றும் வளர்ச்சியடையும் பொருளாதாரத்திற்கான பயணம் அழகானதாக இல்லை. அது கடினமானது, முட்கள் கொண்டது, சவால்மிக்கது. வங்குரோத்து அடைந்த நாட்டை மீட்டெடுப்பது என்பது மிகவும் கடினமான செயலாகும். இந்த இக்கட்டான காலத்தை கடந்துவிட்டால், வசதியான, அழகான சமுதாயத்தை உருவாக்க முடியும். அவ்வாறு இல்லையெனில், அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் கனவு மாளிகைகளைக் கட்ட முற்பட்டால், நாடு மீண்டும் வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்படும். நாங்கள் இதுவரை வந்த பயணத்தில் எனது வெற்றிக்குக் காரணம், நாம் தொடங்கிய பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டமாகும். இந்தச் சீர்திருத்தத் திட்டம் 2022ஆம் ஆண்டைப் போல் பொருளாதார நரகத்தில் விழாமல் முன்னேறுவதற்கு இந்த மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம் அடித்தளம் அமைத்துள்ளது.

2013 ஆம் ஆண்டு முதல் மின் உற்பத்திக்காக அரசு செலவழிக்கும் தொகைக்கு ஏற்றவாறு மின்கட்டணத்தை திருத்தும் நடைமுறை பின்பற்றப்படவில்லை. இதனால், மின்சார சபைக்கு கடும் நட்டம் ஏற்பட்டது. 2022ஆம் ஆண்டு வரை இந்த நட்டங்களை நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு நட்டமடைந்த பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நட்டமும் இரண்டு அரச வங்கிகளின் நிதியால் தற்போது இரண்டு அரச வங்கிகளின் ஐந்தொகைகளும் பலவீனமான நிலைக்குச் சென்றுள்ளன. இந்த இரண்டு வங்கிகளையும் வலுப்படுத்துவதற்கு அரசாங்கம் நிதியைச் செலவழிக்க வேண்டியுள்ளது. அந்த நிதியை எவ்வாறு பெற்றுக்கொள்வது? அந்த நிதியை மக்களிடமிருந்து அறவிடும் வரிப் பணத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்கள் தங்கள் நட்டத்தை அரச வங்கிகள் பலவீனமாக இருக்கும்போது, வங்கிகள் வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நிதியை வழங்குகிறது. அந்த நிதியை சம்பாதிக்க வேண்டுமாயின், மக்கள் மீது அதிக வரிச் சுமையை சுமத்த வேண்டியேற்படுகின்றது. சில குழுக்கள் சம்பளத்தை அதிகரிக்கக் கோரிப் போராட்டம் நடத்தி வருகின்றன.

இன்று அரச ஊழியர்களுக்கு மட்டுமல்ல, முழு நாட்டிற்கும் கடினமான காலம். இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து விடுபடுவதற்கு, நாம் நாளுக்கு நாள், படிப்படியாக முன்னேறவேண்டும். இது கடினமான பயணம். ஒருபுறம் வேலை நிறுத்தங்களால் முன்னேற்றம் தடைப்படுகிறது. மறுபுறம், நாட்டின் பெரும்பான்மையான மக்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். சம்பள உயர்வு பற்றியும் ஒரு வார்த்தை சொல்லவேண்டும். நினைத்தவாறு சம்பள உயர்வை வழங்க முடியாது. அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு அரசின் வரி வருவாயில் 35 சதவீதம் செலவிடப்படுகிறது. மேலும் சம்பளத்தை அதிகரிக்க வேண்டுமானால், அரசின் வருவாயை அதிகரிக்கவேண்டும். அரசாங்க வருவாயை அதிகரிக்காமலும் தேவைப்பட்டால் சம்பளத்தை அதிகரிக்கலாம். அது எப்படி? ஒன்றில் நீங்கள் பணத்தை அச்சிடல் வேண்டும் அல்லது வெளிநாட்டிலிருந்து கடன் பெறவேண்டும். அப்படி இல்லையென்றால் புதிதாக வரி விதிக்கவேண்டும். அந்த நடைமுறை சமநிலைவாழ்வு எண்ணக்கருவுக்கு எதிரானது. இவ்வாறான நடவடிக்கைகள் நாட்டை மீண்டும் பாதாளத்தில் தள்ளும். மின்சார சபை மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குப் பெரும் தொகையைச் செலவழிக்கிறது. இதன் விளைவாக, பெரிய அளவிலான, குறைந்த செலவில் புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தியை பிரதான மின்கட்டமைப்பில் சேர்ப்பதற்குத் தேவையான சட்ட ரீதியான தடைகள் அனைத்தையும் நாம் அகற்றியுள்ளோம்.

வினைத்திறனற்ற மின்சார சபையை வினைத்திறன்மிக்க நிறுவனமாக அதனை மீள்கட்டமைப்புச் செய்வதற்கான சட்டவிதிகள் இப்போது உருவாக்கப்பட்டு வருகின்றன. திறமையாக மின்சாரம் உற்பத்திசெய்யக்கூடிய நிறுவனமாக மாற்றங்களைச் செய்த பின்னர், மக்களின் மின் கட்டணம் தற்போது இருப்பதிலும் பார்க்க மிதமானதாக இருக்கும். சில அரசியல் குழுக்கள் மின்சார சபையை வினைத்திறன்மிக்க நிறுவனமாக மாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றன. எப்படியாவது மின்கட்டணத்தைக் குறைக்குமாறு அவர்கள் கூறுகின்றனர். அப்படிப்பட்ட காரியத்தில் என்ன நிகழ்கிறது என்றால், நாம் மீண்டும் அந்த தீய சுழற்சிக்குப் பலியாகிவிடுகிறோம். அது சமநிலைவாழ்வு என்ற எண்ணக்கருவை நிராகரிப்பதாகும். அரச வரிகளை உயர்த்துவது குறித்தும் கடுமையான விமர்சனங்கள் உள்ளன. நாம் ஏன் வரியை உயர்த்த வேண்டி ஏற்பட்டது? வரிக் கட்டமைப்புகள் மாற்றங்கள் மற்றும் வரி சீர்திருத்தங்கள் நீண்ட காலமாகப் புறக்கணிக்கப்பட்டன. இதன் காரணமாக அரசிறைத் துறை நலிவடைந்தது. அதை மீண்டும் வலுவாக வைத்திருப்பதற்கு, கட்டாயமாக வரி அமைப்பில் கட்டமைப்பு மாற்றங்கள் செய்யப்பட வேண்டியிருந்தது. அரச துறையினரின் சம்பளத்தை வழங்குவதற்காக ஒவ்வொரு மாதமும் 93 பில்லியன் ரூபா செலவிடப்படுகிறது. அஸ்வெசும, மருந்துகள் மற்றும் ஓய்வூதியம் போன்ற பொது மக்கள் நலன்புரிக்காக ரூபா 70 பில்லியன் செலவிடப்படுகிறது. அதேநேரம், ரூபா 220 பில்லியன் கடன் வட்டி கொடுப்பனவுகளுக்காக செலவிடப்படுகின்றது. இந்த விடயங்களுக்கு மாத்திரம் செலவாகின்ற மாதாந்த அரசாங்க செலவினம் ரூபா 383 பில்லியன் ஆகும். 2023 இன் முதல் 9 மாதங்களில், எங்கள் மாத வரி வருவாய் 215 பில்லியன் ஆகும். ரூபா 168 பில்லியன் பற்றாக்குறை உள்ளது. இந்த பற்றாக்குறையை நிரப்புவதற்கு, மேலும் கடன் வாங்க வேண்டியுள்ளது. இதுவரை நிலுவைத் தொகையை செலுத்தியது எவ்வாறு? வெளிநாட்டு கடன்களைப் பெற்றுக்கொள்கிறோம். இலங்கை வங்கிகளில் இருந்து மேலதிகப் பற்றுகளைப் பெறுகிறோம். இந்த இரண்டு முறைகளிலும் நிலுவைத் தொகையை கட்ட முடியாதபோது, பணத்தை அச்சிடுகிறோம்.

வெளிநாட்டு கடன்களை மீள்கட்டமைப்புச் செய்யும் வரை வெளிநாட்டு நிதி மற்றும் வெளிநாட்டுக் கடன்களை வரையறுக்கப்பட்ட அளவிலேயே பெற்றுக்கொள்ள முடியும். 2021 (13ஆம் பக்கம் பார்க்க..)

# ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்ட உரை...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இல் 900 பில்லியன் ரூபாய் வங்கி மேலதிகப் பற்று பெறப்பட்டது. இப்போது வங்கி மேலதிகப் பற்றைப் பெறுவது ரூபா 70 பில்லியன் வரை குறைக்கப்பட்டுள்ளது. புதிய மத்திய வங்கிச் சட்டத்தின்படி பணத்தை அச்சிட முடியாது. இதன் காரணமாக, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10% இலிருந்து 15% ஆக அரசாங்க வருவாயை அதிகரிக்காவிட்டால், நாம் மீண்டும் பொருளாதார நரகத்தில் விழுவோம். வரி விலக்கு செய்யப்பட்டால், மற்றொரு வழியில் நிரப்புதல் செய்யப்படவேண்டும். சில குழுக்கள் கூறுவது போல், எளிய - அழகான வாக்குறுதிகள் மூலம் இந்தப் பிரச்சினை தீராது. இந்த ஆண்டு நாம் இலக்கு வைத்துள்ள அரச வருமானம் ரூபா 3415 பில்லியன் ஆகும். இதுவரை நாம் அதிக வருமானம் உள்ளவர்களிடம் புதிய வரிக் கோப்பைப் பதிவு செய்யும்படி கேட்டிருந்தோம். ஆனால் பெரும்பாலானவர்கள் அவ்வாறு செய்யவில்லை. வரிக் கோப்பினைத் திறந்த பின்னர், இல்லாத பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும் என்ற நம்பிக்கைதான் இதற்கு அடிப்படைக் காரணம். அது உண்மைதான். வரி விதிப்பில் தேவையற்ற சிக்கல்கள் உள்ளன. சில அதிகாரிகளின் தேவையற்ற செல்வாக்கிற்கு அடிபணிய வேண்டிய சந்தர்ப்பங்களும் உண்டு. வரி செலுத்துவது ஒரு தலைவலியை ஏற்படுத்துகின்ற அளவிற்கு சில கட்டண முறைகள் மிகவும் சிக்கலானவை, நமது வரி அமைப்பில் உள்ள இது போன்ற பல கடுமையான குறைபாடுகளை நாங்கள் கண்டறிந்துள்ளோம்.

தற்போது மொத்த வரிச்சுமை சமூகத்தின் வரையறுக்கப்பட்ட சில பிரிவுகளின் மீது சுமத்தப்பட்டுள்ளது. வருவாய் சேகரிப்பு அமைப்புகளில் நீண்டகாலமாக இருந்து-வருகின்ற பலவீனங்கள் மற்றும் கவனிக்காததன் காரணமாக வரி புறக்கணிப்பு ஏற்படுகிறது. இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான பல முன்மொழிவுகளை இந்த வரவு செலவுத் திட்டத்தில் நாங்கள் சேர்த்துள்ளோம். இந்த முன்மொழிவுகளை ஒரே இரவில் செயல்படுத்த முடியாது. அவை முறையாக செயல்படுத்தப்பட வேண்டும். அந்த முன்மொழிவுகள் மூலம் அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கும்போது, இன்றைய காலத்தைவிட அதிக வரிச்சலுகைகளை வழங்குவதற்கு வாய்ப்புக் கிடைக்கும். அரச செலவினத்தைக் குறைப்பதன் மூலம் மக்களின் வரிச்சுமையைக் குறைக்கலாம் என்று சிலர் கூறுகின்றனர் ஆனால் அரச செலவினங்களில் கூடுதலான சதவீதம் அதாவது 35 சதவீதம் அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்காகவே செலவிடப்படுகிறது. தற்போது அரச பணியாளர்களின் எண்ணிக்கை 1.3 மில்லியனாக உள்ளது. எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும், அவர்களை வேலையிலிருந்து நீக்கமுடியாது. அப்படிச் செய்வது மிகப்பெரிய சமூக நெருக்கடியை உருவாக்கும். எனவே, இந்தப் பிரச்சனைகளை நாம் மிகவும் கவனமாகவும், உணர்வுபூர்வமாகவும் எதிர்கொள்ள வேண்டும். ஆனால் அரசின் வீண் செலவுகளைக் குறைக்கவேண்டும். அரச நிறுவனங்களில் எவ்வளவு பணம் வீணாகிறது? எவ்வளவு கால விரயம் ஏற்படுகின்றது? இவற்றையும் நாம் தவிர்க்கவேண்டும். ஒரு சாதாரண குடிமகன் அரச நிறுவனத்தில் வேலைக்குச் செல்லும்போது எவ்வளவு நேரமும், உழைப்பும், பணமும் விரயமாகிறது? இங்கே நாம் இந்த குறைபாடுகளையும் தவறுகளையும் திருத்திக்கொள்ளவேண்டும். நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களால் நாட்டு மக்கள் அவதிப்படுகின்றனர். அவர்களின் இழப்பை மக்கள் முழுமையாகத் தாங்கிக் கொள்கின்றனர். தேசிய வளங்கள் என்று கூறிக்கொண்டு மக்கள் மீது தமது சுமையை தொடர்ந்து சுமத்தும் அரசியல் குழுக்கள் நாட்டை பின்னுக்கு இழுக்கின்றன. மேலும் ஊழலும் மோசடியும் நாடு முழுவதும் புற்று நோயாக பரவியுள்ளது. நாட்டின் செல்வங்கள் திருடப்படுவதைத் தடுக்கும் சட்டங்களை இப்போது சமர்ப்பித்துள்ளோம். நாட்டின் செல்வம் மற்றும் வளங்களைத் திருடுவதாக பல்வேறு மக்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். ஆனால் நாட்டின் செல்வங்களையும் வளங்களையும் கொள்ளையடித்தவர்களைப் போலவே நாட்டின் எதிர்காலத்தையும் திருடியவர்களைப் பற்றி சிந்திக்கவேண்டும்.

சில அரசியல் குழுக்கள் வெற்றிகரமான வணிகங்களை மக்கள் மயமாக்கி நாட்டின் எதிர்காலத்தைத் திருடியுள்ளனர். திருகோணமலையில் எண்ணெய் தாங்கிகள் போன்ற வீணாகும் இடங்களை வேறு நாடுகளுக்குக் குத்தகைக்கு விடுவதை எதிர்த்ததோடு நாட்டின் எதிர்காலத்தையும் திருடினார்கள். இன்னும் சிலர் ஆடைத் தொழிலை எதிர்த்து நாட்டின் எதிர்காலத்தைத் திருடினார்கள். துறைமுகங்களின் அபிவிருத்தியை எதிர்ப்பதன் மூலம் எதிர்காலம் திருடப்பட்டது. இந்தப் பட்டியல் இன்னும் நீளமானது.



நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அந்த மக்கள் செய்வதும் களவுதான். அனைத்து அபிவிருத்திக் கருத்திட்டங்களையும் எதிர்க்கும் அரசியல் குழுக்கள் திருகோணமலை எண்ணெய் தாங்கி வளாகத்தை அபிவிருத்தி செய்ய அனுமதிக்கவில்லை. அந்த எண்ணெய் தாங்கிகள் துருப்பிடிக்க இடமளிக்கப்பட்டதைப் போன்று நுவரெலியா தபால் நிலையமும் இடிந்து விழுவதை அவர்கள் விரும்புகின்றனர். நுவரெலியா தபால் நிலையம் சுற்றுலாத் துறைக்காக ஒதுக்கப்பட்டமை ஒரு தனிச் சம்பவம் அல்ல. நுவரெலியா அபிவிருத்தி திட்டத்தின் ஒரு பகுதி. எதிர்காலத்தில் நுவரெலியாவில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவும் எதிர்பார்ப்பும் எங்களிடம் இருக்கின்றது. நுவரெலியாவில் இன்னும் பல பெரும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் நுவரெலியாவின் சூழலையும் அதன் வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடங்களையும் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்றன. காலி கோட்டையில் உள்ள பழைய தபால் நிலைய கட்டடத்திற்கும் இந்த மக்கள் இதனையே செய்தனர். தற்போது அந்தக் கட்டடம் இடிந்து விழுந்துள்ளது. சரியான நேரத்தில் அந்தக் கட்டடம் சுற்றுலாத் துறைக்காக ஒதுக்கப்பட்டிருந்தால், அந்த வரலாற்றுக் கட்டடம் நம்மிடம் இருந்திருக்கும். அந்நியச் செலாவணியும் கிடைக்கும்.

பொருளாதார ஆய்வாளர் சுசந்த ஆரியரத்ன அண்மையில் முகநூலில் வெளியிட்ட பதிவை இங்கு மேற்கோள் காட்ட விரும்புகிறேன். 'அரச வளங்களை பாதுகாப்பதற்கான சூத்திரம் அரச வளங்களுக்கு கைவைக்காதே என்று ஆர்ப்பாட்டம் செய்வதல்ல. அந்த வளங்களிலிருந்து அதிக பயனைப் பெற்றுக் கொள்வதாகும். அப்போது அவை யாருக்கும் பாரமாக இருக்க மாட்டாது.' இதுவரை காலமும் அரச வளங்களைப் பாதுகாப்போம் என்ற கோத்தின் கீழ் செயற்பட்டு அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளாததாகும். அவற்றை நாடு தாங்க முடியாத அளவுக்கு சுமையாக மாற்றியமையாகும். சிந்தித்துப் பாருங்கள். இதுவரை நம் நாட்டில் செயல்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார கருத்துக்கள் தோல்வியடைந்து விட்டன. தயவுசெய்து அவற்றைப் புரிந்துகொள்ளுங்கள். ஊங்களுடைய அண்டை வீட்டாருக்கும் அதை புரியவையுங்கள். நாம் புதிய அரசியல் மற்றும் பொருளாதார அமைப்பை உருவாக்கவில்லை என்றால், இங்கிருந்து முன்னோக்கி செல்ல வழியில்லை. நாட்டில் இதுவரை காணப்பட்ட அரசியல் அமைப்பு மற்றும் பொருளாதார அமைப்பு முற்றிலும் தலைகீழாக மாற வேண்டும். கடந்த வரவுசெலவுத் திட்டத்திலும் அதைத்தான் சுட்டிக்காட்டினேன். 'மாரா சாத்' நாடகத்தில் சுகதபால டி சில்வா சொல்வது போல் - தலையணை உறையைப் போல் தலைகீழாகப் புரட்டி புதுக்கண்ணால் பார்க்கவேண்டும். கடந்த காலத்திலிருந்து நம் நாட்டில் வேரூன்றியிருந்த சமூக ஒருமித்த கருத்து, எல்லாவற்றையும் அரசாங்கமே செய்யவேண்டும் என்பதாகும். அதனால்தான், தனியார் தொழில்களை முடக்கி, அந்தத் தொழில்களைக் கையகப்படுத்தி அனைத்து தொழில் முனைவோர் நடவடிக்கைகளிலும் அரச தலையிட்டது. ஆனால் சமூக உடன்பாடு தோல்வியடைந்த, காலாவதியான ஒன்று என்பது தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த கால அனுபவங்கள், உலகளாவிய போக்குகள் மற்றும் எதிர்கால சவால்கள் போன்ற அனைத்தையும் கருத்தில் கொண்டு நமக்கென்று ஒரு தனித்துவமான பொருளாதார மற்றும் அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டும். புதிய சமூக கருத்தொற்றுமை உருவாக்கப்பட வேண்டும். இந்த புதிய முறைக்கு அடித்தளமிட்டதன் மூலம், கடந்த ஆண்டில் நாம் பின்பற்றிய சரியான நடைமுறைகள் மற்றும் முறைகள் காரணமாக பொருளாதாரம் மீண்டு வருகிறது. இப்போது தட்டுப்பாடு இல்லாமல் அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியும். 30% ஆக உயர்ந்திருந்த வட்டி விகிதங்கள் இப்போது 15% ஆகக் குறைந்துள்ளன. மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படுகிறது. உரங்களுக்கு தட்டுப்பாடு இல்லை. 2021இல் நமது முதன்மை வரவுசெலவுப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.7 சதவீதமாக இருந்தது. 2023இன் முதல் பாதியில் முதன்மை வரவுசெலவுத் திட்ட மிகையை உருவாக்க முடிந்தது. கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்த வருடத்தின் முதல் 6 மாதங்களில் வரி வருவாயை 50 வீதத்தால் அதிகரிக்க முடிந்தது. 2022 செப்டம்பரில் 70 சதவீதமாக உயர்ந்திருந்த பணவீக்கம், கடந்த செப்டம்பரில் 1.38 சதவீதமாகக் குறைந்துள்ளது. பூச்சியமாக சரிந்த அந்நியச் செலாவணி கையிருப்பு, டொலர் 3.5 பில்லியன்களாக உயர்ந்தது. வெளிநாடுகளின் நம்பிக்கை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால் இன்னும் செல்ல வேண்டிய தூரம் அதிகம்.

இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்கள் நாட்டிற்காக நேர்மையான நோக்கத்துடன் செய்த தியாகங்களினாலும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு அவர்கள் வழங்கிய தைரியத்தின் காரணமாகவும் கடந்த வருடத்தில் நாம் அபிவிருத்தி முன்னேற்றத்தை அடைய முடிந்தது. இந்த சிரமங்களைப் போக்கு-வதற்குத் தேவையான பின்னணியை அரசு முறையாக வழங்கி வருகிறது. நமது பொருளாதாரம் மீண்டு வரும்போது, நமது பொருளாதாரம் உறுதியானதாகும் போது, மக்களுக்கு கூடுதல் வசதிகளை வழங்குவதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். 2022 இல் மீண்டும் அதே நரகத்தில் நம் நாடு விழுவதை அனுமதிக்க முடியாது. அந்த நிலைக்கு நாட்டை மீண்டும் கொண்டு வந்து தமது அரசியல் இலக்குகளை நிறைவேற்ற சில குழுக்கள் இரவு பகலாக முயற்சித்து வருகின்றன. ஆனால் எங்களுக்கு அரசியல் இலக்குகள் இல்லை. நாட்டை உயர்த்துவது மட்டுமே எங்களின் ஒரே நோக்கமாகும்.

சிலர் இந்த வரவுசெலவுத் திட்டத்தை தேர்தல் வரவுசெலவுத் திட்டம் என்கிறார்கள். அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல்கள் நடைபெறவிருப்பதால் இவ்வாறு அழைக்கின்றனர். தேர்தலில் வெற்றி பெறும் நோக்கில் முடிவில்லாத சலுகைகளையும் சம்பள அதிகரிப்பையும் வழங்குவதே அத்தகைய தேர்தல் வரவு செலவுத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. சுதந்திரம் அடைந்த பின்னரும் 75 வருடங்களில் பலமுறை அதுதான் நடந்தது. ஆனால் இந்த வரவு செலவுத் திட்டம் வித்தியாசமானது. இந்த வரவு செலவுத் திட்டம் நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் வரவுசெலவுத்திட்டமாகும். தற்போதைய சர்வதேச போக்குகளுக்கு ஏற்ப ஒரு புதிய பொருளாதார அமைப்பின் அடித்தளத்தை அமைக்கும் வரவு செலவுத் திட்டம். பலமான எதிர்காலத்திற்கான முன்னுரை. தேர்தல் வெற்றியை விட நாட்டின் வெற்றியே எனக்கு முக்கியம். இந்த வரவு செலவுத் திட்டம் நாட்டின் வெற்றிக்காக தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டமாகும். பௌத்த பொருளாதார தத்துவத்தின்படி தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம். சமநிலைவாழ்வு என்ற எண்ணக்கருவின் அடிப்படையில், நாட்டுக்கும் நாட்டின் எதிர்காலத்திற்கும் நன்மை பயக்கும் பல முன்மொழிவுகள் இந்த வரவுசெலவுத் திட்ட ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நான் தற்போது 2024 வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளை முன்வைக்கிறேன்.

1. அரச ஊழியர்களின் சம்பளம்: அரச ஊழியர்களுக்கு 2015ஆம் ஆண்டின் பின்னர் சம்பள அதிகரிப்புக் கிடைக்கவில்லை. இதனால் அரசாங்கத்தின் வரவுசெலவுத்திட்டத்தில் சமநிலை பாதிக்கப்படாத நிலையில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க நான் முன்மொழிகின்றேன். தற்பொழுது அரச ஊழியர்களின் எண்ணிக்கை சுமார் 1.3 மில்லியன் (1,300,000) ஆகும். அவர்களது குடும்ப அங்கத்தவர்களது மொத்த எண்ணிக்கை 5 மில்லியனுக்கு அதிகமாகும். இந்த அரச ஊழியர்களுக்கு தற்பொழுது கிடைப்பது ரூபா 7,800 மாதாந்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு மாத்திரமாகும். நாம் 2024 ஜனவரி முதல் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவினை ரூபா 17,800 வரை அதிகரிப்போம். திறைசேரிக்கு குறித்த வருடத்திற்குரிய வருமானம் கிடைக்க ஆரம்பிப்பது பெப்ரவரி, மார்ச் மாதங்களின் போதாகும். எனவே, இக்கொடுப்பனவு அதிகரிப்பினை மாதாந்த சம்பளத் திற்குச் சேர்த்துக்கொள்வது ஏப்ரல் மாதத்திலிருந்தாகும். ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையான நிலுவைத் தொகையினை ஒக்டோடர் மாதத்திலிருந்து தவணை அடிப்படையில் ஆறு மாதங்களுக்குள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2. ஓய்வூதியம்: அரச ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை 730,000 ஆகும். அவர்களுக்கு தற்போது கிடைப்பது ரூபா 3,525 மாதாந்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாகும். அரச ஓய்வூதியதாரர்களின் மாதாந்த வாழ்க்கைச்செலவுக் கொடுப்பனவை ரூபா 6,025 வரை அதிகரிப்போம். இந்த அதிகரிப்பு 2024 ஏப்ரல் மாதம் முதல் அமுல்படுத்தப்படும். 2024 ஆண்டில் ரூபா 386 பில்லியன் ஓய்வூதியத்திற்காக செலவு செய்யப்படும்.

3. விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம்: விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியமானது, ஊழியரின் அடிப்படை சம்பளத்தில் 6 -7 சதவீதமான செலுத்தப்படும் பங்களிப்பாகும். இதற்காக அரசாங்கம் ஆண்டுதோறும் ரூபா 65 பில்லியன் செலவு செய்கிறது. ஊழியர்களிடமிருந்து இத்திட்டத்திற்காக ஆண்டுதோறும் ரூபா 38 பில்லியன் அறவிடப்படுகிறது. எனவே, அரசதுறை ஊழியர்களின் பங்களிப்பு, இதனை வழங்குவதற்குப் போதுமானதாக இல்லை. எனவே இந்த ஓய்வூதியப் பங்களிப்பிற்காக அறவிடப்படும் சதவீதத்தை 2024 ஏப்ரல் முதல் அனைத்து சேவைப் பிரிவினருக்கும் 8 சத வீதமாக அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகிறேன். இச்சரிசெய்தல் மூலம் ஆண்டுதோறும் ரூபா 09 பில்லியனை மேலதிகமாக அறவிடுவதற்கு முடிவதுடன் இது விதவைகள் மற்றும் அனாதைகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவதையும் உறுதிப்படுத்துகிறது.

4. உணவு மற்றும் தங்குமிட கொடுப்பனவு: பொலிஸ் சேவை அலுவலர்கள் தூர இடங்களுக்கு கடமைக்காகச் சென்று வருகின்ற சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு வழங்கப்படும் பிரயாணக் கொடுப்பனவு நடைமுறைக்கு உகந்ததாக இல்லை. எனவே, தற்போது செயற்படுத்தப்படும் குறித்த கொடுப்பனவிற்குப் பதிலாக மூன்று பொலிஸ் அலுவலர் குழுக்களுக்கு பொருத்தமான சீராக்கத்துடன் உணவு மற்றும் தங்குமிட கொடுப்பனவினை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

5. இடர் கடன் வசதி: நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக, அரச செலவினங்களை கவனமாக முகாமை செய்யும் முகமாக நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டன. இச்செயன்முறை மூலம், அரச ஊழியர்கள் எதிர்நோக்கும் எதிர்பாராத மற்றும் அவசர நிலமைகளின்போது வழங்கப்படும் இடர் கடனுக்கான தகைமை சில வரையறைகளுக்கு உட்படுத்தப்பட்டது. எனவே, 2024 ஜனவரி 01 முதல் அனைத்து அரச ஊழியர்களுக்கும் கடந்த ஆண்டுகளைப் போலவே இடர் கடன் வசதியை வழங்க நான் முன்மொழிகிறேன்.

6. சேவையினை உறுதிப்படுத்தல்: பல்வேறு அரசாங்க நிறுவனங்களில் வேறுபட்ட தற்காலிக திட்டங்களின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பல ஊழியர்களது சேவை இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லை. 180 நாட்களுக்கு அதிக காலம் சேவை புரிந்த அத்தகைய அமைய ஊழியர்களை அரசாங்கத்தின் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக நிரந்தர ஊழியர்களாக இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

7. அஸ்வெசும நிகழ்ச்சித் திட்டம்: அஸ்வெசும நிவாரணம் வழங்கும் திட்டத்தினை நாம் ஆரம்பித்தது உலக வங்கி உள்ளிட்ட அபிவிருத்தி பங்காளர்களின் ஒத்துழைப்பினால் ஆகும். ஆயினும், அடுத்த வருடத்தில் எமது மக்களுக்கு நிவாரணம் வழங்குவது எமது பணத்தினால் ஆகும். இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக முன்னைய வருடங்களில் ரூபா 60 பில்லியன் செலவிடப்பட்டது. அது இப்பொழுது ரூபா 250 பில்லியன் வரை உயர்ந்துள்ளது. சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக முன்னைய வருடங்களில் செலவிட்டதனைப் போன்று மூன்று மடங்கு 2024 ஆம் வருடத்தில் அஸ்வெசும நிகழ்ச்சித்திட்டத்திற்காகச் செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 2 மில்லியன் பயனாளர் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படும். அஸ்வெசும நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படுவது நியாமமான தெரிவு அளவுகோல்களின் அடிப்படையிலாகும். புதியதொரு நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாறுகின்றபோது ஏற்படுகின்ற செயற்படுத்தத் தாமதங்களினை நிவர்த்தி செய்து வருகின்றோம். அநீதி இழைக்கப்பட்ட குடும்பங்களுக்கு நியாயம் வழங்குவதற்கான செயற்திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. நன்மைகளை பெறுவதற்கு தாமதமாகி தகைமைபெற்ற பயனாளர்களுக்கு ஆரம்பத்திலிருந்து பயன்வலுப்பெறும் வகையில் கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 82 சமூர்த்தி அலுவலர்களின் அனுபவம் மற்றும் அறிவு எமது அஸ்வெசும நிகழ்ச்சித் திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுத்துச்செல்வதற்கு பயன்படுத்தப்படுகின்றது. மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுநீரக நோயாளிகள் சுமார் 150,000 பேருக்கு ரூபா 5,000 மாதாந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது. இக்கொடுப்பனவை ரூபா 7,500 வரை அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இது 50 சதவீத அதிகரிப்பொன்றாகும். அதேபோல், முதியோர்களுக்கு செலுத்தப்படும் மாதாந்த கொடுப்பனவு ரூபா 2,000 ஆனது ரூபா 3,000 வரை உயர்த்தப்படும். இத்திட்டத்தினால் 600,000 பேர் பயனடைவர்.

(14ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்ட உரை...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி...)

காத்திருப்போர் பட்டியலில் இருப்போரும் ஏற்கனவே நிதி உதவி பெறும் பயனாளிகளும் 2024 ஆம் ஆண்டு முதல் பயனாளிகள் பட்டியலில் சேர்க்கப்படுவர். இதற்காக ரூபா 142 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.

சில குடும்பங்கள் எதிர்பாராத அனர்த்தங்களுக்கு உட்படுகின்றனர். குடும்பத்தில் வருமானம் உழைப்பவர் உயிரிழக்கின்றார். விபத்துக்குள்ளாகின்றனர். தொழில்வாய்ப்பை இழக்கின்றனர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் முழுக் குடும்பமும் அனாதரவாகின்றது. இவ்வாறான குடும்பங்களுக்கு நடைமுறையிலுள்ள திட்டத்திற்கு அமைவாக அஸ்வெசும நன்மையினை பெற்றுக்கொள்வதற்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டியுள்ளது. எதிர்காலத்தில் நாம் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை அஸ்வெசும பயனாளர்களை மீளாய்வுக்கு உட்படுத்துவோம். புதிய குடும்பங்களை எவ்வித தாமதமின்றி பட்டியலில் சேர்த்துக்கொள்வதற்கு இதன் மூலம் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. அஸ்வெசும நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அங்கவீனமுற்றோர், சிறுநீரக நோயாளிகள் மற்றும் வயோதிபர்களுக்கான கொடுப்பனவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் தொகை அடுத்த வருடத்தில் ரூபா 205 பில்லியன் வரை அதிகரிக்கப்படும். கர்ப்பிணித் தாய்மார்களுக்கான ரூபா 4,500 மாதாந்த தொகை வழங்கும் முறைமையில் அதிகளவு குறைபாடும் பலவீனங்களும் எம்மால் அவதானிக்கப்பட்டுள்ளது. இக்குறைபாடுகளை நீக்கி இந்நிகழ்ச்சித் திட்டத்தினை மிகவும் ஒழுங்குபடுத்துவதற்கு ரூபா 10 பில்லி யன் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

8. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள்: பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட் தொற்று நிலைமை காரணமாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்தன. அண்மையில் இடம்பெற்ற ஆய்வொன்றில் இவ்வாறான தொழில் முயற்சிகளில் 20 சதவீதமானவை நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக மூடப்பட்டுள்ளமை தெரியவந்தது. அதேபோன்று தற்பொழுது தொழிற்படுகின்ற தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை வீழ்ச்சியடைந்தமையும் ஆய்வு மூலம் வெளிப்படுத்தப்பட்டது. உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கிய பயணத்தினை மீண்டும் மீண்டும் துரிதப்படுத்துவது எமக்கு அவசியமாகும். எனவே, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு மேலும் சக்தியினையும் தைரியத்தையும் வசதிகளையும் வழங்குவதற்கு முடியும். இந்நோக்கத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் ரூபா 30 பில்லியனை சலுகைக் கடன் வசதி அடிப்படையில் நாம் அறிமுகப்படுத்துவோம்.

இந்த நிகழ்ச்சித் திட்டம் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு பெரும் உத்வேகத்தை வழங்கும் முதல் சந்தர்ப்பமாகும். சலுகைக் கடன் வசதிகளுக்கு மேலதிகமாக பெரிய நிறுவனங்களின் மதிப்புச் சங்கிலிகளுடன் தொடர்புடைய தொழில் துறை செங்குத்துகளுடன் இணைக்கும் நடவடிக்கைகளால் நிதியுதவி திட்டங்கள் பூர்த்திசெய்யப்படும். இந்த நிகழ்ச்சித் திட்டத்தை வலுப்படுத்துவதற்காக ரூபா 20 பில்லியனை ஒதுக்கீடுசெய்யப்படும். இதற்கமைவாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்யப்படும் மொத்த ஏற்பாடு ரூபா ஐம்பது பில்லியனாகும். இதனால் ரூபா 250 பில்லியன் பெறுமதியான நிதி இடைவெளியொன்று ஏற்படும்.

9. காணி உரித்து நிகழ்ச்சித் திட்டம்; 1897இல் இலங்கை தரிசு நிலக் கட்டளைச்சட்டம் சட்டமாக்கப்பட்டது. அதன் கீழ் நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான ஏக்கர் கிராமிய காணிகள் பிரித்தானிய அரசினால் கையகப்படுத்தப்பட்டன. அதன் பின்னர் இலங்கையின் விவசாயிகளுக்கு 1935 இன் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின்கீழ் பல்வேறு அனுமதிப்பத்திரங்களின் அடிப்படையில் காணித்துண்டுகள் வழங்கப்பட்டன. எவ்வாறாயினும், நூறு வருட காலம் கடந்தும் இந்த விவசாயிகளுக்கு காணிகளின் முழுமையான உரித்துரிமையினை வழங்குவதற்கு அரசாங்கத்தினால் எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை. தேவையான சட்ட ரீதியான செயன்முறைகளைப்பின்பற்றி இவ்வாறான அனுமதிப்பத்திரங்களுக்கு பதிலாக விவசாயிகளுக்கு எவ்வித தடையுமற்ற உறுதிகளை வழங்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். இந்தவேலைத்திட்டமானது ஒரு வருடத்திற்குள் நிறைவுசெய்யப்பட முடியாததாயினும் 2024 இது ஆரம்பிக்கப்படும். இதன் மூலம் இருபது இலட்சம் (2,000,000) குடும்பங்களுக்குகாணிபூமி மற்றும் விவசாய நிலங்கள் பெற்றுக்கொடுக்கப்படும். இதற்காக ரூபா 2 பில்லியனை ஒதுக்கீடு செய்யப்படும்.

10. நகர வீட்டு உரித்துரிமை: பல்வேறு நகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள் கடந்த காலத்தில் ரூபா 3,000 மாதாந்த கொடுப்பனவின் அடிப்படையில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், குறைந்த வருமானமுடைய நகர வீட்டு உடைமையாளர்களுக்கு வாடகைக் கட்டணத்தினை முழுவதுமாக விலக்களிப்பதற்கும் வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு முழு உரிமைகளையும் வழங்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன். இத்திட்டத்தின்கீழ் நகரத்திலுள்ள வறியவர்களுக்கு வீடுகளின் உரித்தினை வழங்குவதன் மூலம் 2024இல் 50,000 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நான் விரும்புகின்றேன். இந் நோக்கத்திற்காக ரூபா 3 பில்லியனை வரவு செலவுத்திட்ட ஏற்பாடாக ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன். மேற்படி காணி மற்றும் வீட்டினது உரித்து மக்களுக்கு வழங்கப்படும் நிகழ்ச்சித் திட்டம் முழுமையாக செயற்படுத்தப்பட்டு நிறைவு செய்யப்படும் பொழுது இந்நாட்டு மக்களில் 70 சதவீதமானவர்கள் காணி மற்றும் வீட்டு உரிமையாளர்களாக மாறுவர்.

11. பெருந்தோட்ட வீடமைப்பு: பெருந்தோட்டப் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் வீட்டு உரிமை பெறாதவர்களாவர். எனவே, அவர்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கு நாம் உரித்தினை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். இதன் ஆரம்ப கட்டமாக ரூபா 4 பில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு எதிர்பார்க்கின்றேன்.

12. பிம்சவிய: 1998 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 12 மில்லியன் காணித் துண்டுகள் மத்தியில் தற்போது வரை ஒரு மில்லியன் காணித்துண்டுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சித் திட்டத்தினை விரைவுபடுத்தும் பொருட்டு தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக ரூபா 600 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

13. பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம்: நாட்டிலுள்ள கடினமான சூழ்நிலை மற்றும் கடந்த காலத்தில் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான நிதிப் பற்றாக்குறை காரணமாக பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாதுபோனது. இந்த நிகழ்ச்சித்திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக மக்கள் பிரதிநிதிகள் கிராமிய அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமல் போனது. பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தினை நாம் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளோம். இதற்காக ரூபா 11 பில்லியன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு ஊடாக வழங்கப்படும். இந்த நிகழ்ச்சித்திட்டமானது தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மேற்பார்வையின்கீழ் நடைமுறைப் படுத்தப்படும்.

14. 'கந்துரட தகய' ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்: மலைநாட்டில் கிடைக்கக்கூடிய பொது உட்கட்டமைப்பு மற்றும் சேவைகள் பல்வேறு காரணங்களினால் வளங்களின் பகிர்வில் முரண்பாடுகள் காணப்படுவதனால் ஒப்பீட்டு ரீதியில் இப்பிரதேசம் அபிவிருத்தி குன்றிக் காணப்படுகின்றது. இந்த முரண் நிலைகள் மக்களின் வாழ்க்கைத் தரத்திலும் பிரதிபலிக்கின்றது. மலைநாட்டில் கிராமிய அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்குவது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை அரசாங்கம் உணர்ந்துள்ளது. சப்பிரகமுவ மற்றும் மத்திய மாகாணங்கள் அதேபோன்று பதுளை, காலி, மாத்தறை, களுத்துறை மற்றும் குருநாகல் மாவட்டங்களை உள்ளடக்கிய மலைநாட்டுப் பிரதேசத்தைச் சேர்ந்த 89 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளக்கியதாக 10 வருடப் நோக்கு கிராமிய மற்றும் சமுதாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்றினை 2024 வருடத்திலிருந்து செயற்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். இந்நோக்கத்திற்காக 2024 ஆம் வருடத்திற்கு ரூபா 10 பில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

15. அபிவிருத்திக் கருத்திட்ட முன்மொழிவுகளை அங்கீகரித்தல்: அரசாங்கத்தினால் அனுபவித்துவரும் குறிப்பிடத்தக்க அரசிறைக் கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, வரி செலுத்துவோரின் பணத்தில் செலவழிக்கும் ஒவ்வொரு ரூபாயும் பொருளாதார மற்றும் 85 சமூக வருவாயின் அடிப்படையில் பணத்திற்கான உகந்த மதிப்பை வழங்குவதை உறுதி செய்வது மிகவும் முக்கியமானதாக மாறியுள்ளது. இந்தப் புதிய பொறிமுறையின் கீழ், அரசாங்கத்தின் மூலதனச் செலவினம் பொருளாதார வளர்ச்சி மற்றும் மீட்சிக்கு அர்த்தமுள்ள பங்களிப்பைச் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது அரசிறை மற்றும் படுகடன் நிலைத்தன்மையின் முக்கிய அங்கமாகும். இந்த நோக்கத்திற்காக 2024 இல் வரவு செலவுத் திட்ட மூலதனச் செலவின ஒதுக்கீட்டை ரூபா 1,260 பில்லியன் வரை அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகிறேன். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவீதத்திற்குச் சமமானதாகும். தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள மூலதனக் கருத்திட்டங்களை துரிதப்படுத்துவதற்கும், இந்த வரவுசெலவுத்திட்ட உரையில் என்னால் முன்வைக்கப்பட்டுள்ள மூலதனச் செலவுக் கருத்திட்டங்களுக்கும் தேவையான ஏற்பாடுகளுக்காக ரூபா 55 பில்லியன் ஒதுக்கப்படும். இந்தத் தொகையினை நாம் பெற்றுக்கொள்வது திறைசேரியின் பல்வேறு செலவினத் தலைப்புகளுக்கு ரூபா 55 பில்லியன் மீண்டெழும் செலவினத்தினை மாற்றுவதன் மூலமாகும். அப்பொழுது அடுத்த வருடத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நாம் பயன்படுத்தும் மீண்டெழும் மூலதன செலவு ரூபா 1260 பில்லியனாகும். அதேபோன்று வெளிநாட்டு கடன் மற்றும் உதவியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள் பல இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளன. வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு வெற்றிகரமாக நிறைவடைந்ததன் பின்னர் மீண்டும் அவற்றினை ஆரம்பிப்பதற்கான சந்தர்ப்பம் எமக்குக் கிடைக்கும். எனவே, 2024ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு நிரல் அமைச்சிலும் ஒரு விசேட அலகைத் தாபிப்பதற்கும் நிரந்தரப் பணியாளர்களின் பணி விவரங்களுக்கு கருத்திட்டங்கள் தொடர்பான பணிகளை கூட்டிணைக்கவும், தேவைப்படும் போது, அரசாங்க சேவையில் நிபுணர்கள் இல்லாதபோது மாத்திரம் ஒப்பந்த அல்லது குறித்தொதுக்கல் அடிப்படையில் தேவையான மனித வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் நான் முன்மொழிகிறேன். இந்த செயல்முறையின் மூலம், கருத்திட்டத்தின் இறுதி வெளியீட்டிற்கு பொறுப்புக்கூறும் அரசு அதிகாரிகள் அணியொன்று உருவாக்கப்படும்.

16. கிராமியப் பாதை: கடந்த சில வருடங்களாக கிராமிய பாதைகளின் பராமரிப்பு மற்றும் புனரமைத்துவத்தினை முறையாக முன்னெடுப்பதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படவில்லை. சிதைவடைந்து காணப்படுகின்ற அத்தகைய பாதைகளை புதுப்பிப்பதற்காக ரூபா 10 பில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

17. இயற்கை அனர்த்தம்: கடந்த சில மாதங்களாக நாம் பாதகமான காலநிலையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அந்தக் காலப்பகுதியில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக நாட்டில் வீதி அமைப்பு பெருமளவில் சேதமடைந்துள்ளன. எனவே அண்மைய இயற்கை அனர்த்தங்களினால் சேதமடைந்த வீதிகளை புனரமைப்பதற்கு 2,000 மில்லியன் ரூபா ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

18. குடிதண்ணீர்: நாட்டின் எல்லா பாகங்களிலும் குடிதண்ணீர் தொடர்பான பிரச்சினைகள் காணப்படுகின்றன. பன்முகப்படுத்தப்பட்ட நிதியினை பயன்படுத்துகின்றபொழுதும் வெளிநாட்டுக் கடன் உதவி மூலம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட குடிதண்ணீர் கருத்திட்டங்களுக்கு நாம் முன்னுரிமை வழங்குவோம்.

19. கல்வி: நவீன யுகத்திற்குப் பொருத்தமான கல்வியினை அறிமுகப்படுத்துவதன் வாயிலாகவே நாட்டின் எதிர்காலத்தை நிலைநாட்ட முடியும். எமது நாட்டில் காணப்படுவது மனப் பாடம் மூலம் உருவாகும் காலங்கடந்த கல்வி முறையாகும். இம்முறைமையின் கீழ் ஆக்கத்திறன் மிக்கோரை உருவாக்க முடியாது. அதேபோன்று இலவசக் கல்வியின் பிரதி லாபம் முழுமையாக மக்களுக்குக் கிடைப்பதில்லை. ஆகையினால் நாம் முழுமையான கல்வி சீர்திருத்தத்தினை நடைமுறைப்படுத்தவுள்ளோம். இப்புதிய தேசிய கல்வி கொள்கைக் கட்டமைப்பினை தயாரப்படுத்துவதற்காக நாம் 25 நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றை நியமித்தோம். இம்முன்மொழிவுக்குளது தலைமைத்துவத்தின் கீழ் அமைச்சரவைக் குழுவொன்றின் வழிகாட்டல் மிகவும் உசிதமாகவிருந்தது.

இக்கொள்கைக் கட்டமைப்பு அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த மறுசீரமைப்பின் மூலம் தாபிக்கப்படும் முக்கியமான நிறுவனங்கள் தொடர்பாக நான் இந்தச் சபைக்கு அறிவிப்பதற்கு விரும்புகின்றேன். அவை கல்வி தொடர்பான தேசிய உயர் பேரவை, தேசிய உயர் கல்வி ஆணைக்குழு, தேசிய திறன்விருத்தி ஆணைக்குழு என்பனவாகும். இது தொடர்பிலான விரிவான விபரங்கள் கல்வி அமைச்சர் மூலம் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் இச்சபைக்குசமர்ப்பிக்கப்படும். அண்மையில் அஜானா முகநூலில் பதிவிடப்பட்ட இக்குறிப்பு எமது கவனத்தை நாம் உயர்தரம் சித்தியடையும் அனைத்து மாணவர்களுக்கும் பல்கலைக்கழகபடிப்பினை எவ்விததாமதமின்றிபெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும்.

19. பல்கலைக்கழக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கல்வியை விரிவுபடுத்துதல்: நடைமுறை தொழில்நுட்பத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியினை கவனத்திற்கொண்டு நாம் புதிய பல்கலைக்கழகங்கள் நான்கினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுப்போம். 1. சீதாவக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பபல்கலைக்கழகம் (இதற்கலகித் அதுலத்முதலி பட்டப் பின் படிப்பு நிறுவனம் சேர்த்துக்கொள்ளப்படும்.)

2. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கீழ் குருணாகல் தொழில்நுட்ப பல்கலைக்கழகம். 3. முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் 4. காலநிலை மாற்றத்திற்கான சர்வதேச பல்கலைக்கழகம் அதேபோன்று கீழ்வரும் தற்பொழுது தொழிற்பட்டு வருகின்ற தனியார் உயர் கல்வி நிறுவனங்களை பல்கலைக்கழகங்களாகமாற்றுவதற்குதேவையான சட்ட ஏற்பாடுகளை அங்கீகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். 1. வியாபார முகாமைத்துவ தேசிய கல்லூரி (ஹிறீயனி) 2. இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (றீஸிணுணுவீ) 3. ஹொரைசன் வளாகம் 4. றோயல் இன்ஸ்ரிடியூட் 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுவ; பல்கலைக்கழங்களை ஆரம்பிப்பதற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் மாகாண சபைகளின் மூலமும் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்படும் என நான் முன்மொழிகின்றேன்.

20. கல்விக்கான பல்கலைக்கழகம் ஒன்றைத் தாபித்தல்: தேசியக் கல்விப் பீடங்கள் 19இனை இணைத்து கல்விப் பல்கலைக்கழகத்தை தாபிப்பது கல்வி அபிவிருத்திக்கான காலத்தின் தேவையாகும். தற்போதுள்ள கல்விப்பீடத்தில் 4 வருட கற்கைநெறியை பூர்த்திசெய்த பின்னர், தொடர்புடைய தரங்களுக்கு இணங்க இந்த புதிய பல்கலைக்கழகங்கள் மூலம் அந்த மாணவர்களுக்கு கல்வி இளமானி பட்டத்தை வழங்குவதற்கு நான் முன்மொழிகிறேன். இந்த நிகழ்ச்சித்திட்டம் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன் இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு 2024 ஆம் ஆண்டிற்கு ரூபா 1 பில்லியன் வரவுசெலவுத் திட்ட ஏற்பாட்டைச் செய்வதற்கு நான் முன்மொழிகிறேன்.

21. புதிய தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்: இந்தியாவில் சென்னை நகரில் அமைந்துள்ள சென்னை இந்திய தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் கீர்த்திமிக்க கல்வி நிறுவனமொன்றாகும். அது தொழில்நுட்பவியல் கல்வியில் அடிப்படை மற்றும் வணிக ஆராய்ச்சிகள், புத்தாக்கங்கள், தொழில்முயற்சி மற்றும் தொழில்நுட்ப துறைகளில் பிரபல்யமாக பெயர் பெற்றதாகும். சென்னை இந்திய தொழில்நுட்பவியல் பல்கலைக்கழக வழிகாட்டலுடன் புதிய தொழில்நுட்ப பல்கலைக்கழகமொன்றை நாம் ஆரம்பிப்போம். இதற்கு இந்தியா எமக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கும்.

22. அரச பல்கலைக்கழகங்கள்: புதிய சகாப்தத்திற்கு ஏற்றவாறு மேம்படுத்தும் திட்டத்தை மாநில பல்கலைக்கழகங்கள் செயல்படுத்தி வருகின்றன. இது பேராதனை பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பிக்கிறது. 2042 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நூற்றாண்டு விழாவை இலக்காகக் கொண்டு பேராதனைப் பல்கலைக்கழகம் நீண்ட கால திறன் மற்றும் சேவை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு, இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 500 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகிறேன். ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை மற்றும் நோயெதிர்ப்பு நிறுவனம் தேசிய ஒவ்வாமை மற்றும் நோயெதிர்ப்பு நிறுவனமாகத் தரமுயர்த்தப்படும். நடுத்தரக்காலவரவுசெலவுத் திட்ட வரைசட்டகத்தின் கீழ், இந்த நிறுவனத்திற்குத் தேவையான ஆய்வுகூடங்கள் மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், இந்த நோக்கத்திற்காக 2024ஆம் ஆண்டிற்கு ரூபா 40 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகிறேன். அதன் பின்னர் கொழும்பு, களனி, மொரட்டுவை ஆகிய பல்கலைக்கழகங்கள் மீதே எமது கவனம் செலுத்தப்படும். அதற்கான முறையான திட்டங்களை தயாரித்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

23. அரசசார்பற்ற பல்கலைக்கழகங்கள்: அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களை ஒழுங்குபடுத்துவதற்கான சக்திவாய்ந்த சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் தேவைப்பை ஏற்றுக்கொண்டபிறகு, உலகிலுள்ள எந்தவொரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனமும் இலங்கையில் பல்கலைக்கழகங்களை நிறுவ அனுமதிக்கிறோம். இதன் மூலம் உயர்தரப்பரீட்சையில் சித்தியடையும் ஒவ்வொரு மாணவனும் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறுவதற்கும், வெளிநாட்டு மாணவர்கள் மூலம் அந்நியச் செலாவணியைப் பெறுவதற்குமான வாய்ப்புகளை உருவாக்கும். இந்த அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களில் கற்கும் மாணவர்களுக்கு கடன் வசதிகள் வழங்கப்படுகின்றன. தற்போது நடைமுறையில் உள்ள வட்டியில்லா கல்விக் கடன் திட்டத்திற்கு மேலதிகமாக, வணிக வங்கிகள் மூலம் மானியத்துடன் கூடிய மாணவர் கடன் திட்டத்தை செயல்படுத்த நான் முன்மொழிகிறேன். அவர்களுக்கான தொழில்வாய்ப்புகள் கிடைத்தவுடன் கடனை

(15ஆம் பக்கம் பார்க்க..)

# ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்ட உரை...

(114ஆம் பக்கத் தொடர்ச்சி...)

திருப்பிச் செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

24. தேசிய உயர் கல்வி ஆணைக்குழு: பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத் தொழிற்கல்வி ஆணைக்குழு இரண்டினையும் இணைத்து தேசிய உயர்கல்வி ஆணைக்குழு தாபிக்கப்படும். உயர்கல்வியினை விரிவுபடுத் தல் மற்றும் வலுப்படுத்துவதற்கு தேவையான தீர்மானங்கள் எடுத்தல் போன்று ஒருங்குமுறைப்படுத்தல் அதிகாரமும் ஆணைக்குழுவிற்கு வழங்கப்படும்.

25. தேசிய திறன்விருத்தி ஆணைக்குழு: நிகழ்கால சவால்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்ற வகையில் தேசிய திறன்விருத்தி ஆணைக்குழு தாபிக்கப்படும். இதன் கீழ் தொழிற்பயிற்சி அதிகாரசபை, தேசிய தொழிற்பயிலுனர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகாரசபை போன்ற நிறுவனங்கள் ஒன்று சேர்க்கப்படும்.

26. மாகாண சபைகளுக்கான தொழிற் கல்வி: இலங்கையில் தற்போது இயங்கிவரும் ஒன்பது மாகாண சபைகளுக்கும் மத்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கும் தொழிற் கல்வி நிறுவனங்களை கையளிப்பதற்கும் மாகாண சபைகளில் தொழிற் கல்விக்கான மாகாண சபைகளை நிறுவுவதற்கும் நான் முன்மொழிகிறேன். எதிர்காலத்தில், தொழிற்கல்வி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கும், உரிய முறையில் மாகாண சபைகள் மூலம் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி செயல்பாடுகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கும் தேவையான வழிகாட்டுதல்கள் மட்டுமே அரசாங்கத்தால் வழங்கப்படும். தொழில்நுட்ப தொழில் திறன்களை மேம்படுத்துவதற்கு ஒரு நிதியத்;தை தாபிப்பதற்கும் தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். இந்த நோக்கத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடனான கலந்துரையாடல் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்த நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளுக்கு மேலதிகமாக, இந்த நிறுவனங்களுக்கு 2024 ஆம் ஆண்டிற்கு ரூபா 450 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகிறேன்.

27. தகவல் தொழில்நுட்ப பயிற்சி: தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புபட்ட தனியார் நிறுவனங்களுடன் இணைந்து வேலை வாய்ப்பை எதிர்பார்க்கும் பட்டதாரிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை முன்னெடுப்பேன். இந்த பட் டதாரிகளுக்கு ஆகக்குறைந்தது 6 மாதங்களுக்குள் பயிற்சி மற்றும் சேவை அனுபவம் வழங்கப்படும். இக்காலப்பகுதியில் அவர்களுக்கு ரூபா 45,000 மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும். அதில் ரூபா 25,000 இனை அரசாங்கம் பொறுப்பேற்கும். மீதி ரூபா 20,000 குறித்த தனியார் நிறுவனத்தினால் வழங்கப்படும். நிர்மாணம், பராமரிப்பு சேவை, சுற்றுலாத்துறை போன்ற ஏனைய திறன்பற்றாக்குறை நிலவுகின்ற துறைகளுக்கும் இவ்வாறான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

28. இளைஞர் மற்றும் வயதுவந்தோர் கல்வி: பல்கலைக்கழக கல்விக்கு தகைமை பெறாத இளைஞர் சமூகத்திற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுதல் வேண்டும். அதேபோன்று, அரசாங்க சேவை மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றுகின்ற வயதுவந்தோருக்கு புதிய அறிவினை பெற்றுக்கொள்வதற்கு தேவையான பின்னணியும் தயாரித்தல் வேண்டும். இந்த நோக்கத்தை இலக்காகக்கொண்டு பயிற்சிக் கற்கைநெறிகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு தேவையான தொழில்நுட்ப மற்றும் பௌதீக நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக இலங்கை மன்றக் கல்லூரிக்கு ரூபா 150 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

29. அனைவருக்கும் ஆங்கிலம்: இலங்கையில் ஆங்கில எழுத்தறிவை விரிவுபடுத்துவதற்கு ஒரு தேசிய நிகழ்ச்சி திட்டத்தை விருத்தி செய்வது அவசியமாகும். 2034 ஆம் ஆண்டளவில் ஆங்கில மொழி அறிவை அனைவருக்கும் வழங்குவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். இது ஒரு பத்தாண்டு நிகழ்ச்சி திட்டத்தை ஆரம்பிப்பதற்கு ரூபா 500 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகிறேன்.

30. சுரக்ஷா: 2016 இல் அறிமுகப்படுத்தப்பட்டு தற்பொழுது நடைமுறையில் இல்லாத மாணவர் காப்புறுதித் திட்டத்தினை மீள அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன். இதற்கு அமைவாக அனைத்து அரசாங்கப்பாடசாலைச்சிறுவர்களும் மீண்டும் இந்தக் காப்புறுதிக் காப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவர்களாவர்.

சுகாதார சேவைகள்: சுகாதார சேவையின் தரத்தை பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்பதற்கு குறைபாடுகள், பலவீனங்கள் மற்றும் நெருக்கடிகளை அடையாளம் கண்டு இந்தத் துறையின் முன்னேற்றத்திற்காக நாம் நடவடிக்கை எடுக்கின்றோம். மருந்துப் பொருட்கள் கொள்வனவு வழிகாட்டல்கள் இந்தவகையில் மருந்துப் பொருட்கள் கொள்வனவுக்கான பிரத்தியேக வழிகாட்டல்களை வழங்கும் வகையில் விடே நிறுவனமொன்று தாபிக்கப்படுவதுடன், அரசாங்கத்தின் மருந்துக் கொள்வனவுச் செயன்முறை தொடர்பான விபரமான ஆய்வொன்றினை நடத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

31.மருந்துப் பொருட்கள் கொள்வனவு வழிகாட்டல்கள் இந்தவகையில்; மருந்துப் பொருட்கள் கொள்வனவுக்கான பிரத்தியேக வழிகாட்டல்களை வழங்கும் வகையில் விடே நிறுவனமொன்று தாபிக்கப்படுவதுடன், அரசாங்கத்தின் மருந்துக் கொள்வனவுச் செயன்முறை தொடர்பான விபரமான ஆய்வொன்றினை நடத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

32. மருத்துவ மற்றும் சுகாதார ஆராய்ச்சி: இலங்கையின் மருத்துவ ஆராய்ச்சியினை உலகின் ஏனைய பிரதேசங்களுக்கு இணையாக மருத்துவ மற்றும் சுகாதார ஆராய்ச்சியில் முதலீட்டினை அதிகரிப்பதற்கு நான் எதிர்பார்க்கின்றேன். மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் அதன் உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்கும் நவீன மருத்துவ அறிவு மற்றும் தொழில்நுட்ப தேவையினை ஈடுசெய்வதற்கு ஆய்வுகூடங்களின் ஆற்றலினை அதிகரிக்காக ரூபா 75 மில்லியனை செலவிடுவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

தேசிய மருத்துவ தரப்பரிசீலனை ஆய்வு கூட வசதிகளை மேம்படுத்துவதற்கு மூன்று வருட திட்டத்தின் கீழ் அடுத்த வருடத்திற்கு ரூபா 25 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.

33. பதுளைக்கு இருதய - நுரையீரல் இயக்கமீட்பு அலகு : ஊவா மாகாணத்திலுள்ள எந்தவொரு வைத்தியசாலையிலும் இருதய நுரையீரல் இயக்;கமீட்பு வசதிகள் இல்லை. நாம் இந்தக் குறைபாட்டினை நிவர்த்தி செய்கிறோம். பதுளை போதனா வைத்தியசாலையில் இருதய நுரையீரல் புத்துயிர் பெறும் பிரிவை நிறுவுவதற்கும் அவற்றுக்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் ரூபா 300 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

34. மருத்துவ அலுவலர்களுக்கான பதவி உயர்வு : விசேட வைத்தியர்கள் மற்றும் தரப்படுத்தப்பட்ட வைத்தியர்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் பொருத்தமான வகையில் பதவி உயர்வுத் திட்டத்திற்குத் தேவையான திருத்தங்களைச் செய்வதற்கான ஏற்பாடுகளை துரிதப்படுத்தப்படும். விசேட வைத்தியர்களின் மேலதிக பணிக்காக தற்போது மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவு முறைக்குப் பதிலாக கொடுப்பனவொன்றாக அந்தக் கொடுப்பனவை செய்யும் வாய்ப்புக்கள் குறித்தும் நாம் ஆராய்கின்றோம்.

35. பட்டப்பின் படிப்பு வாய்ப்பு : மருத்துவர்களின் தொழிற்துறை மேம்படுத்தும் நோக்கத்துடன் 2023 வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் மருத்துவர்களுக்காக பட்டப்பின் படிப்பு வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கு முன்மொழிவுகளை நாம் சமர்ப்பித்தோம். தற்போது அந்த வேலைத்திட்டங்கள் தொழிற்படுகின்ற பல்கலைக்கழகங்களுக்கு மேலதிகமாக அடுத்த வருடத்திலிருந்து களனி, ஸ்ரீ ஜவர்தனபுர மற்றும் ரஜரட்ட பல்கலைக்கழகங்களையும் அந்த வேலைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்படும்.

உள்நாட்டு மருத்துவம் : எமது உள்நாட்டு மருத்துவ முறையை வலுவூட்டுவதற்கும் பிர பல்யப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்டும்.

36. இலங்கையில் சுகாதாரம் - இலங்கையர்களினால் குணப்படுத்துதல்: பாரம்பரிய வைத்திய மருந்துப்பொருட்களினால் தயாரிக்கப்பட்ட உள்நாட்டு மருந்துகள், துணை உணவுகள், அழகுசாதனப்பொருட்கள் மற்றும் தாவர மூலப்பொருட்களுக்கு சர்வதேச ரீதியில் கேள்வி நிலவுகின்றது. இந்த வாய்ப்பை உரிய விதத்தில் பயன்படுத்திக்கொண்டால் மென்மேலும், சர்வதேச சந்தையை விரிவுபடுத்திக் கொள்வதற்கு எமக்கு வாய்ப்புக் கிடைக்கும். சுகாதார அமைச்சின் சுதேச மருத்துவப் பிரிவு மற்றும் ஆயுர்வேத மருந்துக் கூட்டுதாபனம் ஆகியவற்றின் மேற்பார்வையின் கீழ் அவ்வாறான முதலீடுகளுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கு நான் முன்மொழிகிறேன்.

சுற்றுலா பயணிகளிக்கு சுதேச மற்றும் ஆயுர்வேத நலன்களை வழங்குவதற்கும் 'இலங்கையில் சுகாதாரம் - இலங்கையர்களினால் குணப்படுத்துதல்' என்ற எண்ணக்கருவுக்கு இணங்கியதாக சுற்றுலா ஹோட்டல்கள், ஒய்வு விடுதிகள் ஆகியவற்றில் சிகிச்சை நிலையங்களை அமைப்பதற்கு திட்டங்கள் முன்னெடுக்கப்படும். இதற்காக ரூபா 100 மில்லியன்களை ஒதுக்கீடு செய்யப்படும்.

விவசாயமற்றும்கடற்றொழிற்றுரையினை நவீனமயப்படுத்தல்: புதிய பொருளாதாரத்தின் கீழ் விவசாயத்தினை போட்டி மட்டத்திற்கு உயர்த்துதல் வேண்டும். பெறுமதி சேர்க்கப்பட்ட விவசாய உற்பத்தியினை உருவாக்கதல் வேண்டும். ஏற்றுமதியினை இலக்காகக் கொண்டு விவசாயத்தினை நவீனமயப்படுத்துதல் வேண்டும்.

விவசாய நவீனமயப்படுத்தல் கருத்திட் டம், சிறிய தோட்ட உரிமையாளர் விவசாயபங்குபற்றல்முன்னெடுப்புகள்மற்றும் பயிர் பல்வகைத்தன்மை என்பவற்றிற்காக இந்த வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

37. விவசாய மற்றும் மீன்பிடி நவீனமயப்படுத்தல் சபை: விவசாயத்துறையினை தரமுயர்த்துவதற்கு ஒத்துழைக்கும் வகையில் மாகாண விவசாய மற்றும் கடற்றொழில் நவீனமயப்படுத்தல் சபைகள் தாபிக்கப்படும். தற்பொழுது காணப்படும் அனைத்து கமத்தொழில் சேவை நிலையங்களும் விவசாய நவீனமயமாக்களுக்கான மையங்களாக தரமுயர்த்தப்படும். இதற்காக, அரசாங்க தனியார்துறை, விவசாயிகள், விவசாய விஞ்ஞானிகள் ஆகியோரினால் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த நிகழ்ச்சித் திட்டமொன்று இந்தப் பணிகளுக்காக 2023/24 பெரும்போகத்திலிருந்து செயற்படுத்தப்படும். இன்நோக்கத்திற்காக ரூபா 2,500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இதன் நோக்கம் நெல் உற்பத்தியினை ஹெக்டயர் ஒன்றிற்கு 3.5 இலிருந்து 8 தொன் வரை அதிகரிப்பதாகும். இதன் மூலம் வரண்ட பிரதேசத்தில் நெட்செய்கை உயர்ந்த உற்பத்தித்திறன் மிக்கதாக மாற்றுவதற்கு செய்கை பண்ணப்படாத வயல் நிலங்கள் ஏனைய விவசாய செய்கைகளுக்கு பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் எமக்குக் கிடைக்கும்.

ஈர வலய பிரதேசங்களில் சேற்று நிலங்களில் நெற்செய்கையின் பயன்பாடானது மிகவும் குறைவானதாக காணப்படுகிறது. இந்த காணிகளில் நெற்செய்கையினை தவிர ஏனைய பயிர்களை வளர்ப்பதற்கு சட்டரீதியான ஏற்பாடுகள் எதுவும் இல்லை. எனவே, அத்தகைய காணிகள் மிக நீண்டகாலமாக எவ்வித பயிர்ச்செய்கையுமற்ற பயனற்ற நிலங்களாக காணப்படுகின்றன. அத்தகைய காணிகளில் ஏனைய பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் வகையில் தற்பொழுதுள்ள சட்டரீதியான தடைகளை நீக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இதற்கு மேலதிகமாக பாரியளவிலான விவசாய நடவடிக்கைகளுக்காக அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், மகாவலி ஏ மற்றும் பீ வலயங்களிலுள்ள ஏனைய அரச காணிகளில் 3 இலட்சம் ஏக்கர்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

38. கடற்றொழிற்துறை: கடற்றொழிலில் ஈடுபடுபவர்கள் பெரும்பாலும் சமூகத்தின் வசதி குறைந்த உறுப்பினர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மற்றொரு முக்கியமான துறையாகும். இதற்காக, மீன்பிடி துறைமுகங்களை நிர்வகிப்பதில் தனியார் துறையுடன் இணைந்து அரசு நடவடிக்கை எடுக்கும். விரயத்தைக் குறைப்பதற்கும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கும் முக்கியமானதாகக் காணப்படும் நவீன சேமிப்பகம் உள்ளடங்களாக இத்துறையில் மேலதிக முதலீடுகளைச் செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் மொத்த நன்னீர் மீன் உற்பத்தியில் ஏறக்குறைய 35 சதவீதம் வடக்கு கடல் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகிறது. இதற்குத் தேவையான வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

இலங்கையில் மொத்த மீன் உற்பத்தியில் 29 சதவீதம் நன்னீர் மீன் வளர்ப்பு மற்றும் நீரியியல் வளத்துறையினூடாக அடையப்பெற்றுள்ளது. இலங்கையில் மொத்தமாக ஏறக்குறைய 12,000 நிரந்தர மற்றும் தற்காலிக நீர்த்தேக்கங்கள் காணப்படுகின்றன. மொத்த நீர்த்தேக்கங்களின் பரப்பு ஏறக்குறைய 260,000 ஹெக்ரேயர்களாகும். மீன்பிடிச் சமூகத்தினை வலுப்படுத்துவதற்கும் தேசிய பொருளாதாரத்தினை உறுதிப்படுத்துவதற்குமாக ரூபா 200 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும். சமூகப் பங்களிப்பினூடாக சுழற்சி நிதியொன்றின் மூலம் எதிர்காலத்தில் இந்நிகழ்ச்சித்திட்டத்தினை நிலையானதாக பேணுவதற்கு மீன்பிடிச் சமூகத்தினை ஊக்குவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றினை தயாரிப்பதற்கு மேலும் முன்மொழியப்பட்டுள்ளது.

39. குளங்களைப் புனரமைத்தல்: நாட்டில் நீர்ப்பாசன மற்றும் விவசாயத்தில் சிறிய குளங்கள் காத்திருமானப் பங்களிப்பைச் செய்கின்றனர். இது காலநிலை மாற்ற தாக்கங்களுடன் மிக முக்கியமானதாக மாறியுள்ளது. துனியார்துறை மற்றும் உள்நாட்டு விவசாயிகள் அமைப்புக்களுடன் இணைந்து சிறிய குளங்களை புனரமைப்பதற்கு ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நான் முன்மொழிகிறேன்.

40. பால் உற்பத்தி: பால் உற்பத்திக் கைத்தொழிலினை வாழ்வாதார செயற்பாட்டிலிருந்து இலாபம்பெறும் கைத்தொழிலாக மாற்றும் பொருட்டு மூலதன முதலீடுகளை அதிகரிப்பதும் நடுத்தரமட்ட இலாபம் தரும் பால் உற்பத்தி அலகுகளைத் தாபிப்பதும் முக்கியமானதாகும். இந்த நோக்கத்திற்காக பால் உற்பத்தித்துறை மதிப்புச் சங்கிலியில் உள்ளவர்களின் நிதித் தேவையை எதிர்கொள்வதற்கு மேல்நிதியிடல் கடன் வழிகளில் நடைமுறைப்படுத்துவதற்கு நான் முன்மொழிகிறேன்.

தேசிய கால்நடை வள அபிவிருத்திச்சபைக்குச் சொந்தமான விவசாயப் பண்ணைகள் அனைத்தையும் வினைத்திறனுடன் பயன்படுத்தி தனியார்துறை பங்களிப்புடன் பால் உற்பத்தியினை 5 வருடத்திற்குள் 53 சதவீதமாக அதிகரிப்பதற்கு விசேட வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படும். தற்பொழுது எமது தினசரி பால் உற்பத்தி 4.3 மில்லியன் லீற்றர்களாகும். இந்த கருத்திட்டம் நிறைவடைகின்ற பொழுது தினசரி பால் உற்பத்தி நாலொன்றுக்கு 20 மில்லியன் லீற்றர் வரை அதிகரிக்கும். அது ஐந்து மடங்கு அதிகரிப்பாகும்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அம்பேவல பண்ணை மிகவும் வெற்றிகரமான பெறுபேறினை எட்டியுள்ளது. அம்பேவல பண்ணையில் நாளொன்றுக்கு 1,600 லீற்றர்களாக காணப்பட்ட தினசரி பால் உற்பத்தி தற்பொழுது 50,000 லீற்றர்களாக உயர்வடைந்துள்ளது. இதனை நாளொன்றுக்கு 75,000 லீற்றர் வரை உயர்த்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

41. நிர்மாணத்துறைக்கு புத்துயிரளித்தல் : சமீப காலங்களில் மிகவும் பின்னடைவுக்குற்பட்ட துறைகளில் ஒன்றாக நிர்மாணத் துறையை குறிப்பிடலாம். கொவிட் தொற்றுநோய், பொருளாதார நெருக்கடி, இறக்குமதி கட்டுப்பாடுகள் போன்ற பல்வேறு காரணங்களால், நிர்மாணத் தொழில் பெரும் நெருக்கடியில் சிக்கியுள்ளது. இந்த சூழ்நிலையை கருத்திற் கொண்டு, அவற்றுக்கு நிவாரணம் வழங்குவதற்கு புதியதொரு பரிசோதனையை நடத்துவோம் என்று நம்புகிறோம்.

அரச நிறுவனங்கள் அவற்றிற்கு இலவசமாக காணிகளை வழங்குகின்றன. அந்தந்த அரச நிறுவனங்களின் திட்டப்படி அந்த காணிகளில் கட்டிடங்கள் நிர்மாணிக்க அந்நிறுவனங்களுக்கு வாய்ப்பளிக்கிறோம். நிர்மாணத்திற்குப்பின்னர், இந்த நிறுவனங்கள் மாத வாடகையை குறித்த நிறுவனத்திற்கு செலுத்துகின்றன. நிர்மாணச் செலவு மற்றும் அதற்கான இலாபத்தைப் பெற்றதன் பிறகு, கட்டிடத்தின் முழு உரிமையும் அரச நிறுவனத்திற்கு வழங்கப்படுகிறது. இதற்கான முன்னோடிதிட்டமாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் புதிய கட்டடத்தொகுதியின் நிர்மாணப் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கொழும்பில் தோட்ட வீடுகளில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் மற்றும் நிர்மாணத் துறையின் வளர்ச்சியை இலக்காகக் கொண்டு புதிய வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளோம். கொழும்பு நகரிலுள்ள தோட்டக் காணிகளில் பெரிய வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களை நிர்மாணிக்கும் பொறுப்பை எமது நிர்மாணத்துறைக்கு வழங்குகிறோம். அந்த காணிகளை அவர்களுக்கு இலவசமாக வழங்குகிறோம். குறித்த தோட்டத்தில் வசிக்கும் மக்களுக்கு புதிய வீடுகளை வழங்குவது மட்டுமே அவர்கள் நிறைவேற்ற வேண்டிய ஒரே நிபந்தனையாகும். அக்குடும்பங்கள் குறித்த வீட்டுத் தொகுதியில் வீடுகளை கோறினால் அவர்களுக்கு அங்கு வீடு வழங்கப்படும். அவர்கள் வேறு இடங்களில் வீட்டுக் கோறிக்கையினை முன்வைக்கும் போது குறித்த கோறிக்கையினை நிர்மாண நிறுவனம் நிறைவேற்ற வேண்டும்.

42. இலங்கையின் தேசிய வர்த்தக நாமம் : வலிமையான நாடொன்றாக தோற்றம்பெறுவதற்கு இலங்கை, பயன்படுத்தாத பாரியளவிலான உள்ளார்ந்த ஆற்றலை கொண்டுள்ளது. இவ்வுள்ளார்ந்த ஆற்றலைப் பயன்படுத்திக்கொள்வதற்கு அதன் வலிமைகள், விழுமியங்கள், தனித்துவமான சலுகைகள் என்பவற்றின் அடிப்படையில் தேசத்தின் அடையாளத்தை வடிவமைப்பதற்கு முழுமையான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சியொன்றினூடாக முதற்தர சுற்றுலாப்பயணி அடைவிடமாகவும், கவர்;ச்சிகரமான முதலீட்டு மையமாகவும் அதன் விளக்கக்கூற்றை மீள வடிவமைப்பதற்கும் அதன் நிலையினை மீட்டெடுப்பதற்குமான புதிய முயற்சிகளுடன் தேசிய வர்த்தகநாமம் அமைத்தல் முயற்சிகளை மேற்கொள்வது முக்கியமானதாகும். அதற்கமைய, அரசாங்க நிறுவனங்கள், வியாபாரங்கள், பிரசைகள், கலாசார நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் என்பவற்றுடன் இணைந்து தேசத்தின் வர்த்தகநாமம் அமைத்தல் செயன்முறையினை வலுப்படுத்துவதற்கு ரூபா 100 மில்லியன் தொகையினை ஒதுக்கீடுசெய்கின்றேன்.

43. வழங்கல்: இலங்கையின் மூலோபாய அமைவிடத்தை மேம்படுத்தி அதை விநியோக மையமாக நிலைநிறுத்துவதில் மகத்தான பொருளாதார மதிப்பு உள்ளது. இருப்பினும், இந்த நீண்ட கால கனவை நனவாக்க பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. முதல் கட்டமாக, தேசிய விநியோகக் கொள்கையை உருவாக்கி செயல்படுத்துவதற்கு அனைத்து பங்குதாரர்களுடனும் அரசாங்கம் இணைந்து செயல்படும்.

(16 ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்ட உரை...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியாவுடன் இலங்கை நில உறவுகளைப் பேணிக்கொள்ளும் என நம்புகிறோம். தென்மேற்கு இந்தியாவின் விநியோகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், தென்கிழக்கு இந்தியாவின் விநியோகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு திருகோணமலை துறைமுகத்திற்கும் கொழும்புத் துறைமுகம் பயன்படும் என்பது எமது நம்பிக்கை.

மேற்கு முனையம் மற்றும் 2030 ஆம் ஆண்டுக்கு பின்னர் எதிர்பார்க்கப்படும் கொழும்பு வடக்கு துறைமுகம் உருவாக்கப்பட்ட பின்னர் கொழும்பு துறைமுகத்தின் திறன் மேம்படும். திருகோணமலை துறைமுகமும் அபிவிருத்தி செய்யப்படுகிறது. இதன் மூலம் தென்னிந்திய பிராந்தியத்தில் விரைவான வளர்ச்சி மற்றும் தொழில்மயமாக்கலின் பலன்களை இலங்கை அனுபவிக்க முடியும். இலங்கையை பிராந்திய வசதி ஏற்பாட்டு மையமாக உயர்த்துவதே எமது இறுதி இலக்காகும்.

44. மகளிர் வலுவூட்டுகை: ஆண் பெண் பால் வேறுபாட்டினை அடிப்படையாகக் கொண்டு வரவுசெலவுத்திட்டத்தினை தயாரிப்பதனை அறிமுகப்படுத்தல் மற் றும் தொடர்புடைய சட்டவாக்கங்களை தயாரிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன். பெண்களை வலுவூட்டுகின்ற சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

45. நெசவுக் கைத்தொழில்: நெசவுக் கைத்தொழிலில் ஈடுபடும் பெண்கள் மற்றும் இளம் சமுதாயம் பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்காக விசேட நிகழ்;ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு ரூபா 300 மில்லியனை ஒதுக்கீடு செய்ய முன்மொழிகின்றேன்.

46. இடம்பெயர்ந்தோருக்கான வீடுகள்: வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்நாட்டு முரண்பாடுகள் முடிவுக்கு வந்து 14 வருடங்கள் கடந்துள்ள போதிலும், அந்தப் பிரதேசங்களில் இன்னும் வீடற்ற குடும்பங்கள் இருக்கின்றன. இந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் இவர்களின் மீள்குடியேற்ற தேவைகளை நிவர்த்தி செய்ய ரூபா 2,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், மேலதிக நிதி ஒதுக்கீடாக வீடமைப்புத் திட்டத்தை விரைவுபடுத்தவும், மீதமுள்ள வீடற்ற குடும்பங்களுக்கு அத்தியாவசிய நிவாரணங்களை வழங்கவும் ரூபா 500 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

47. காணாமல்போனவர்களுக்கான இழப்பீடு: உள்ளக மோதலினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமல் போன 181 நபர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் ஏற்கனவே இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் மேலும் 170 பேருக்கு இழப்பீடு வழங்கப்படவுள்ளது. சமர்ப்பிக்கப்பட்ட இழப்பீட்டுக் கோரிக்கைகளில், 6,300 நிகழ்வுகளுக்கான பூர்வாங்க பணிகள் முடிக்கப்பட்டுள்ளதுடன் ஒதுக்கீட்டுச் சட்டத்தில் இருந்து ஏற்கனவே ரூபா 1,500 மில்லியன் ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. இழப்பீடுவழங்கு-வதை விரைவுபடுத்த ரூபா 1,000 மில்லியன் ஒதுக்கீடு செய்ய முன்மொழிகிறேன்.

48. யாழ்ப்பாண நீர்வழங்கல் கருத்திட்டம்: யாழ்ப்பாண பிரதேசத்தில் குடிநீர்ப் பிரச்சினை பல வருடங்களாக தீர்க்கப்படாதிருப்பதுடன் வெற்றிகரமான கருத்திட்டமெதுவும் இதுவரை செயற்படுத்தப்படவில்லை. தற்பொழுது காணப்படும் சிக்கலான பல்வகை நீர்ப் பிரச்சினைகளுக்கு தீர்வொன்றாக ஏற்கனவே சாத்தியவள ஆய்வு நிறைவு செய்யப்பட்டுள்ள பாலி ஆறு நீர் கருத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். இக்கருத்திட்டத்தின் ஆரம்ப வேலைகளை 2024 இன் முதல் அரை ஆண்டில் ஆரம்பிப்பதற்கு நான் எதிர்பார்க்கின்ஹிறன். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பவேலைகளுக்கு 2024 வருடத்தில் ரூபா 250 மில்லியனை செலவிடுவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

49. பூநகரி நகர அபிவிருத்தி: யாழ்ப்பாணம்-மன்னார் பிரதான வீதியில் சங்குப்பிட்டி பாலத்திற்கு அருகில் அமைந்துள்ள பூநகரி நகரம் சுற்றுலாத் துறைக்கு ஒரு முக்கிய நகரமாக அமைந்துள்ளது. இதன் அபிவிருத்திக்காக ரூபா 500 மில்லியன் ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகிறேன்.

50. காலி மாவட்ட கேட்போர்கூடம்: காலி மாவட்ட கேட்போர்கூடத்தின் நிர்மாணப் பணிகள் 2019 இல் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளது. பெருந்தொகையான நிதி இக்கருத்திட்டத்திற்காக முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன் இதன் விரிவான பயன்பாட்டுக்காக அரச தனியார் முன்னெடுப்பொன்றாக செயற்படுத்தப்படுதல் வேண்டும். இக்கருத்திட்டத்தின் எதிர்கால நிர்மாணப் பணிகள் அரச தனியார் பங்;களிப்பொன்றாக நிறைவு செய்யப்படுதல் வேண்டும். இதற்கு அரசாங்கத்தின் பங்களிப்பாக ரூபா 800 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.

51. பண்டாரவளை பொருளாதார மத்திய நிலையம்: பண்டாரவளை பொருளாதார மத்திய நிலையத்தினை நிர்மாணித்தல் மற்றும் அதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், பண்டாரவளை மாநகர சபை மற்றும் அரசாங்கத்தின் இணைந்த நிதியளிப்புக் கருத்திட்டமாக ரூபா 250 மில்லியனை நாம் வழங்குவோம்.

52. கீழ் மல்வத்து ஓயா கருத்திட்டம்: ஏற்கனவே, ஒதுக்கீடு செய்யப்பட்ட வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, இக்கருத்திட்டத்தின் மீதமுள்ள வேலைகளை துரிதப்படுத்துவதற்கு மேலும், ரூபா 2.5 பில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

கலாசாரம் : பல வருடங்களாக எமது கலாச்சாரம் பல்வேறு வரையறைகளுக்கு உட்பட்டுள்ளது. கலாசாரம் என்பது அரச விருது வழங்கும் நிகழ்வு என்று மாத்திரம் பலர்எண்ணிக்கொண்டிருக்கின்றனர். நாட்டின் கலாசாரத்தினை போசிப்பதற்கும், பெறுமதியான மரபுரிமைகளை எதிர்கால சந்ததியினருக்கு விட்டுச்செல்வதற்கும் முறையான செயற்பாடுகள் எதுவும் இல்லை. பல்வேறுபட்ட நெருக்கடிகள் மற்றும் சவால்களை எதிர் நோக்கிய போதும் எமது கலாசார கருத்திட்டங்கள் பல இந்த வரவுசெலவுதிட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்றது.

53. மகா விகாரை பல்கலைக்கழகம்: அநுராதபுரம் மகா விகாரை 19 ஆம் நூற்றாண்டின் அரைவாசியின் பிற்பகுதிவரை எவ்வித கவனிப்புமின்றி நூற்றாண்டு காலம் நலிந்த நிலையில் காணப்பட்டது. மகா விகாரையினால் முன்னெடுக்கப்பட்ட பிரதான பங்களிப்பானது தேரவாத பௌத்தத்தை பேணிப் பாதுகாத்த அதேவேளை உலகில் பௌத்த சமயம் பரவுவதற்கும் பங்களிப்புச் செய்தது. இவ்விடயங்களைக் கருத்திற்கொண்டு தேசமென்ற வகையில் நாம் மகா விகாரையின் வரலாறு மற்றும் பங்களிப்புகளின் அனைத்துவகையான நோக்குகளையும் ஒன்றிணைத்து மகா விகாரையினை புதிய வடிவத்தில் பல்கலைக்கழகமொன்றாக நிர்மாணிப்பதற்கு முன்மொழிகின்றேன். இதன் எதிர் கால பணிகளுக்கான திட்டமொன்று ஆறு மாத காலப் பகுதிக்குள் தயாரிக்கப்பட்டு சனாதிபதி செயலகத்தின் கீழ் செயலாற்றுகைக் குழுவொன்றினை நியமிக்கப்படும். இதன் ஆரம்ப வேலைகளுக்காக ரூபா 400 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

54. அநுராதபுரம் சர்வதேச பௌத்த நூலகம்: மகா விகாரை பல்கலைக்கழகத்தினைதாபிக்கின்ற பணியினை பூரணப்படுத் தும் வகையில் அநுராதபுரத்தில் நவீன மாதிரியி லான சர்வதேச பௌத்த நூலகமொன்றினைத் தாபிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். சர்வதேச பௌத்த நாடுகளில் கடந்த காலங்களில் கிடைக்கப்பெற்ற ஆவணங்களைப் பாதுகாப்பதுடன் ஆராய்ச்சி நோக்கங்களுக்காக அதனைப் பயன்படுத்துகின்ற கல்விமான்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் இந்த நூலகத்தினை தாபிப்பதற்கு விரும்புகின்றேன். இந்நோக்கத்திற்காக பொருத்தமான சட்ட மற்றும் நிறுவன கட்டமைப்பொன்றினை தயாரிப்பதற்கும் வேலைகளை விரைவில்; ஆரம்பிப்பதற்கும் நான் முன்மொழிகின்றேன். இத்திட்டத்தினை மூன்று வருடங்களுக்குள் செயற்படுத்து-வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

55. கண்டி பௌத்த கலாசார நூதன சாலை: ஆராய்ச்சி செயற்பாடுகள் மற்றும் கலாசார மேம்பாட்டு நடவடிக்கைகளுக்காக இலங்கை பௌத்த நூதனசாலை ஒன்றினைத் தாபிப்பதற்கு நான் எதிர்பார்க்கின்றேன். பல்வேறு நாகரீகங்களுடன் தொடர்பான அத்தகைய நூதனசாலைகள் பல்வேறு நாடுகளில் சிறப்பாக இயங்கிவருவதுடன் அத்தகைய நிலையங்களினால் கவரப்பட்ட ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் அதனை தரிசிப்பர் என்பது அறியப்பட்ட விடயமாகும். இதற்கான நிர்;மாணப் பணிகள் பல கட்டங்களாக மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுவதுடன், அதன் நிர்மாணப் பணிகளுக்காக ரூபா 200 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படும்.

இந்த செயற்திட்டத்தின் மூலம் இலங்கையினை பௌத்த சுற்றுலா மையமொன்றாக மாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

56. கிரிகெட் அபிவிருத்தி: இலங்கையின் கிரிகட் தற்போது நிறுவன நெருக்கடிகளுக்கும் திறமையின்மையினாலும் பாதிக்கப்பட்டுள்ளதனை நாம் அறிவோம். நாட்டின் பாடசாலை கிரிகட் அபிவிருத்தியினை மேம்படுத்தும் நோக்கத்துடன் மாகாண மட்டத்தில் கிரிகட் வீரர்களுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கு இந்த வரவுசெலவுத் திட்டத்தில் ரூபா 1.5 பில்லியன் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இந்த நிதி ஏற்பாடு வழங்கப்படுவது வசதி குறைந்த பாடசாலைகள் மற்றும் மாகாணங்களுக்கு முக்கியத்துவம் வழங்குவதற்காகும்.

57. போக்குவரத்துத் துறை: 2024 ஆம் ஆண்டில் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் டிஜிட்டல்மயமாக்கப்படும்.

இலங்கை போக்குவரத்து சபையுடன் இணைந்து மேல் மாகாணத்தில் 200 மின்சாரப் பேருந்துகளை இயக்குவதற்கான முன்னோடிக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டியில் வாகனங்கள் மற்றும் பயணிகளின் போக்கு-வரத்து நெரிசலை நீக்கி ரயில்கள், பேருந்துகள் மற்றும் ஏனைய உயர் வாகனங்களை ஒருங்கிணைத்து உலக வங்கிக் கடன் வசதியின் கீழ் சனவரியில் கண்டி பல போக்குவரத்து நிலையக் கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கும் இப்பிரதேசத்தில் நுழைவுப்பாதை அபிவிருத்திக்காக ரூபா 1.5 பில்லியன் வழங்கப்படும்.

2024 சனவரி மாதமளவில் ரயில்வே திணைக்களம் அனுராதபுரத்திலிருந்து மிஹிந்தலை வரையிலான புகையிரதப் பாதையின் புனரமைப்புப் பணிகளை பூர்த்தி செய்யும். அத்துடன் தனியார் துறையின் நிதியுதவியுடன் மிஹிந்தலை ரயில் நிலைய வளவை அடிப்படையாகக் கொண்டு போக்குவரத்து பொருளாதாரம், கிடங்கு மற்றும் சேமிப்பு வசதிகளுடன் கூடிய ஒரு பெரிய நகரத்தை உருவாக்குவதற்கு ரூபா 200 மில்லியன்களை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

புறக்கோட்டை, காலி, மாத்தறை, அனுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பாரிய நகரங்களிலும் சுற்றுலா தலங்களிலும் அமைந்துள்ள புகையிரத நிலையங்களின் அடிப்படையில் ஸ்டேன் பிளாசா என அழைக்கப்படும் ரயில் நிலைய நகரத்திற்கு, அரசாங்க தனியார் தொழில்முயற்சி மன்றங்களின் கீழ் ஒருங்கிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

58. அரச சேவை வழங்கல்:

மக்கள் சேவையினை வழங்குகின்ற போது பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற விடயங்கள் இரண்டின்பால் நாம் கவனம் செலுத்த வேண்டும். அர சாங்க வரவுசெலவுத்திட்டத்தினை செயற்ப டுத்துகின்றபோது கடுமையான நிதி ஒழுக்கத்தினை பேணுவது அவசியமான விடயமாகும்.

59. வரவு செலவுத் திட்டம் தொடர்பான பொறுப்புக்கள்: மாகாணசபைகள் வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்காக விடே செலவின அலகுகளாக கருதப்பட வேண்டும்;. இதற்கமைவாக மாகாணசபைகளின் பிரதம செயலாளர்கள் ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்கள் பிரதான கணக்கீட்டு அலுவலர்களாக பணியாற்ற வேண்டும் என நான் முன்மொழிகின்றேன். வரவுசெலவுத் திட்ட நோக்கங்களுக்காக செலவிடப்படும் நிதிக்கு மாகாணசபைகள் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறல் வேண்டும்.

60. மாகாணங்களுக்குள் கிடைக்கும் வருமானம்: மாகாண சபைகளில் சேகரிக்கப்படுகின்ற வருமானம் மீண்டெழும் செலவினங்களுக்காக மாத்திரம் வரையறுக்கப்படாது மாகாணத்தின் அபிவிருத்திக்கான மூலதனச் செலவினமாக பயன்படுத்து-வது விரும்பத்தக்கதாகும். தற்பொழுது நடைமுறையிலுள்ள செயன்முறையை சடுதியாக மாற்றுவதன் மூலம் ஏற்படும் அசௌகரிகங்களை தடுக்கும் வகையில் 2024 இற்கான வரவுசெலவுத்திட்டத்திற்காக வருமானத்தின் 50 சதவீதத்தினை மூலதனச் செலவினமாக பயன்படுத்துவதற்கும் அதன்பின்னர், முழு வருமானத்தினையும் மூலதனச் செலவினமாக பயன்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

61. மாகாண சபைகளின் மூலம் ஏற்றுமதி ஊக்குவிப்பு: 1990 இன் 46 ஆம் இலக்க கைத்தொழில் ஊக்குவிப்பு சட்டத்தின் கீழ் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களில் ரூபா 4 மில்லியனிற்கு குறைவான மூலதனப் பெறுமதியைக் கொண்டதும் 50 பேருக்கு குறைந்த நிரந்தர ஊழியர்களை வேலைக்கமர்த்தி உள்ளதுமான ஏற்றுமதி அல்லாத கைத்தொழிலுக்கு மாகாண சபையின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. இந்த ஏற்பாடுகளை நாம் நீக்கிவிடுவதுடன், வருடாந்த புரள்வுக்கான வரையறை ரூபா 600 மில்லியனாக அதிகரிக்கப்படும். இதன்மூலம் மாகாண சபைகள் ஏற்றுமதி சார் கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கு முடியுமானதாக இருக்கும். நாம் ஒவ்வொரு மாகாணத்திலும் கைத்தொழில் சேவை நிலையங்களை தாபிக்கவிருக்கின்றோம்.

62. உள்ளூராட்சி சபைகளின் சுய நிதியிடலை ஊக்குவித்தல்: உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வருமானத்தினை திரட்டுவதற்கும் உள்ளூர் மக்களின் நலனுக்காக தேவையான நடவடிக்கைகளை முகாமை செய்வதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ள போதிலும் அந்த நிறுவனங்களின் சம்பளங்கள் மற் றும் ஏனைய அபிவிருத்தி வேலைகளுக்கான செலவுகளை அரசாங்கம் தாங்கிக் கொள்கின்றது.

# வெள்ளத்தில் சிக்கிக் கவிழ்ந்த லொறியில் பொருள்கள் திருட்டு

கம்பஹா - ஜாஎல வீதியில் வெள்ளத்தால் சூழ்ந்துள்ள அகரவிட்ட பகுதியில் வெள்ளத்தில் சிக்கி கவிழ்ந்த லொறி ஒன்றில் இருந்து இரும்புகள் மற்றும் ஒக்சிஜன் சிலிண்டர்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த லொறியானது பதுளை பிரதேசத்தில் இருந்து ஜாஎல நோக்கி இரும்புகள் மற்றும் ஒக்சிஜன் சிலிண்டர்களை ஏற்றிச் சென்றுள்ளது.

வெள்ளத்தில் சிக்கிய இந்த லொறியை இரண்டு நாள்களாகியும் அகற்ற முடியாத நிலையில் மற்றொரு லொறியின் உதவியுடன் லொறியின் பொருள்களை அகற்ற முற்பட்ட போது ஐந்து இரும்புகள் மற்றும் ஏழு ஒக்சிஜன் சிலிண்டர்கள் திருடப்பட்டுள்ளன என லொறியின் உரிமையாளர் அடையாளம் கண்டுள்ளார்.

இந்த திருட்டு சம்பவம் தொடர்பில் லொறியின் உரிமையாளர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)



# நீரில் மூழ்கி ஒருவர் சாவு

*நாட்டின் இருவேறு பகுதிகளில் நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் காணாமல் போயுள்ளார்.*

*நிவித்திகல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கப்புறுவத்த கரவிட்ட பகுதியில் கினிபொக்குஎல ஆற்றில் நீராடச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். அதே பகுதியைச் சேர்ந்த 40 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*இதனிடையே கொஸ்வத்த பலுவெல்ஹார பகுதியில் கொஸ்வத்து ஓயாவில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார். பலுவெல்ஹார பகுதியைச் சேர்ந்த 23 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.11.2023இல் வெளியிடப்பெற்றது.